Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 45 | சர்வதேச மின் செய்தித்தாள் | மார்ச் 15 2023

# ஈகைத்தீயினில் வந்தமர்தாள் ஒரு செந்தமிழ் மாது...



# அன்னை பூபதி

**19.03.1988**

உண்ணாநோன்புப் போராட்டம் ஆரம்பித்த நாள்

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
* AUDIT
* REVIEW ENGAGEMENT
* NOTICE TO READER
* BUSINESS ADVISORY
* CONTROLLERSHIP SERVICES
* CORPORATE TAXES
* PERSONAL TAXES
* FINANCIAL PLANNING
* CRA AUDITS
* PAYROLL
* BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

RAMACHANDRAN LAW
Professional Corporation
Family Law
Real Estate
Civil Litigation
Wills & Estates
Corporate Law
BARRISTER & SOLICITOR
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours) | LSO 70103E
416.902.8225
Vithu@Ramachandran.Law
WWW.RAMACHANDRAN.LAW
908-305 Milner Ave. Toronto ON M1B 3V4

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc., Brokerage
Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON, L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1619

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathananthan
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

JRS AUTO TECH
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
OPEN FROM 9 AM - 9PM
AC $99.99 +
OIL CHANGE $39.99 +
USED TIRE $49.99 +
BRAKES JOB $249.99 +
Subas: 416-206-9489 Office: 416-628-4399
2655 Lawrence Ave., E, Unit 05, Scarborough ON M1P 2S2
JRSAUTOTECH@HOTMAIL.CA

GRAND OFFER
this Offer Only December 31st to January 31st, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copies
Inside 32 Pages, B&W 20lb
with colour glossy cover
c $ 310.00
+ Graphic Extra...
Banners
Large Format Digital Printing
Design Only
c $ 9.99 / Sq. Ft (c$ 34.99 / ft.)
1000 Business Cards
with out design c $ 59.99
One Side - 16pt Card Stock
with out design c $ 29.99
One Side, 10pt Card Stock
We print all kind of products
Call Me : Silver Print House - 647 712 1266

விளம்பரத்துக்கு அழையுங்கள்:
437.345.4203

Sangathamil
சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
சர்வதேச மின் செய்தித்தாள்

www.sangathamil.ca

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**அன்னை பூபதி தனிமனிதப் பிறவியாகச் சாகவில்லை. தமிழீழத் தாய்க்குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது.**






# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**
437 345 4203
**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com
**இணையத்தளம்** (Website)
www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.

சங்கத்தமிழ்




# நாட்டுப்பற்றாளர் நாள்

# அன்னை பூபதி ஒரு குறியீடு!

“தேசிய எழுச்சியின் வெகுசன வடிவமாக அன்னை பூபதியின் அறப்போர் அமைந்தது.” -தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்.

தமிழீழத் தேசிய எழுச்சியின் வெகுசன வடிவமாக அறப்போர் புரிந்த அன்னை பூபதி அவர்களின் நினைவு தினத்தை நாட்டுப் பற்றாளர் நாளாகக் தமிழீழத் தேசியத் தலைமை பிரகடனப் படுத்தியிருந்தது. அன்னை பூபதியின் நினைவு தினத்தை நாட்டுப் பற்றாளர் நாளாகத் தமிழீழத்து மக்களும் புலம் பெயர்ந்த தமிழ் மக்களும் உணர்வு பூர்வமாக நினைவு கூர்ந் தார்கள். விடுதலைப் போராட்டங்களின் வரலாற்றில் நாட்டுப் பற்றாளர்கள் எவ்வளவு ஒரு பெரிய சக்தியாக திகழ்ந்து வருகின் றார்கள் என்கின்ற உண்மையைத் தர்க்கிப்பதுவே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.




இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக தமிழீழத் தேசத் தினுள் நுழைந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாறித் தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை அழித் தொழிக்கும் வன்முறையில் இறங்கியது. அவ்வேளையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக தமிழீழத் தேசியத் திற்கு ஆதரவாக தமிழீழப் பொதுமக்கள் பல வகைகளில் தமது பங்களிப்பை வழங்கினார்கள். இந்தத் தேசத்திற்கான பங்களிப் புக்களின் சிகரமாகதியாகத்தின் அதியுயர் வடிவமாக அன்னை பூபதியின் அறப்போர் அமைந்தது.

‘இந்தியப் படை உடனடியாகப் போர் நிறுத்தத்தை மேற் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக் களின் ஈடுபட வேண்டும்’ - என்று கோரிமட்டக்களப்பு அன்னை யர் முன்னணியின் சார்பில்திருமதி பூபதி கணபதிப்பிள்ளை அவர்கள் அகிம்சை வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். 1988ம் ஆண்டு மார்ச் மாதம் பத்தொன்பதாம் திகதி சனிக்கிழமை காலை 10-45மணிக்கு மட்டக்களப்பு அமிர்தகழி சிறி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்றலில் உள்ள குருந்த மரநிழலின் கீழ்அன்னை பூபதி தனது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் மிக நெருக்கடியான வேளை யைச் சந்தித்த காலம் அது! “இந்திய இராணுவம் எமது தாயக மண்ணில் காலடி எடுத்து வைத்த தினத்தையேஎமது போராட் டத்தின் இருண்ட நாளாக நான் கருதுவேன். எமது போராட்டத் தில் இந்திய இராணுவம் தலையீடு செய்தது ஓர் இருண்ட அத்தியாயம் என்றே சொல்ல வேண்டும்” - என்று தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் இந்த இராணுவ ஆக்கிரமிப்புக் குறித்துக் கூறுமளவுக்கு அன்றைய காலகட்டம் பல நெருக்கடிகளை நேர்கொண்டது.

உலகின் நான்காவது பெரிய இராணுவமான இந்தியப் படை யினர் ஒருபுறம்சிங்கள பௌத்தப் பேரினவாத சிந்தனைகளுக் குச் செயல் வடிவம் கொடுக்கும் சிறிலங்காவின் இராணுவம் மறு புறம், இவையிரண்டிற்கும் துணையாக நிற்கின்ற தமிழ் ஒட்டுக் குழுக்கள் ஒருபுறம் என்று ஈழத் தமிழினம் இன்னல்களை எதிர் கொண்ட வேளை அது! தேசியத்தலைவர் சொன்னதுபோல் தமிழீழப் போராட்ட வரலாற்றில் இருண்ட அத்தியாயத்தின் காலம் அது!

இத்தனை அபாயங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் மத்தியில் ஒரு சாதாரணப் பெண்மணி, குடும்பத் தலைவி, எவற்றிற்கும் அஞ்சாமல் தனது போராட்டத்தை அகிம்சை வழியில் ஆரம்பிப் பதற்கு எத்துணை நெஞ்சுரமும் தியாக மனப்பான்மையும் அவருக்கு இருந்திருக்கும் என்பதை நாம் நினைத்துப் பார்க் கின்றோம்.

“எம்மைப் பாதுகாக்கவென வந்த இந்தியா இன்று சிறீலங்கா இராணுவத்தைக் காட்டிலும் கொடியவர்களாகவே மாறிவிட் டார்கள். இதனைத் தடுக்கலாம் என்ற உறுதியுடன் நாம் இந்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளோம். வீரச்சாவுகளை கண்டு நாம் பழகிப் போனவர்களே. எனது இறப்பை அடுத்தும், எமது நோக்கை நாம் அடைவோம் ஒருபோதும் அன்னையர் முன் னணி தளராது” - என்று அன்னை பூபதி அவர்கள் தியாக உணர்வோடு, நெஞ்சுரத்தோடு முழங்கினார்.

1988ம் ஆண்டு மார்ச் மாதம் 19ம் திகதி சனிக்கிழமை காலை 10-45 மணிக்குத் தனது சாகும் வரையிலான உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்த அன்னை பூபதி அவர்களின் இறுதி மூச்சு தமிழீழக் காற்றோடு ஏப்பிரல் மாதம் 19ம் திகதி செவ் வாய்க்கிழமை காலை 8-45 மணியளவில் கலந்து பரவியது. முப்பத்தியொரு நீண்ட நாட்கள்!

எந்த ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக அன்னை பூபதி அவர்கள் போராடினாரோ அந்த இராணுவம் - இந்திய இராணுவம் பாரிய இழப்புக்களுடனும் அளவிடற்கரிய அவ மானத்துடனும் தமிழீழத்தை விட்டு 24-03-1990 அன்று வெளியேறிச் சென்றது.

திருமதி பூபதி கணபதிப்பிள்ளை என்கின்ற ஒரு சாதாரணத் தமிழ்ப் பெண்மணியின் விடுதலை வேட்கையும் அதற்கான தியாகமும் நாட்டுப்பற்றின் சிகரமாக அமைந்தன.

அன்னை பூபதியின் தியாகத்திற்கு முன்னரும், பின்னரும் தமிழீழத்தில் எத்தனையோ நாட்டுப் பற்றாளர்கள் வாழ்ந்திருக் கின்றார்கள். இன்றும் வாழ்ந்தும் வருகின்றார்கள் அவர்கள் யாவருடைய நாட்டுப்பற்றும், தியாகமும் பங்களிப்பும் எந்த ஒரு விதத்திலும் எவருடைய தியாகத்திற்கும் குறைவானதல்ல. ஆயினும் சகல நாட்டுப் பற்றாளர்களினதும் ஒரு குறியீடாக அன்னை பூபதி அவர்கள் விளங்குவது ஒரு பொருத்தமான விடயம் என்றே நாம் கருதுகின்றோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக தமது பங்களிப்புக்களை நல்கி வந்த, நல்கி வருகின்ற சகல நாட்டுப்பற்றாளர்களில், தமிழ்ப் பெண்ணினத்தின் பங்களிப்பு என்பதானது, தனித்துவ மானது. தமது இனத்திற்கு எதிராக நடத்தப்படுகின்ற ஆக்கிரமிப் புப் போர்களுக்கும், வன்முறைகளுக்கும் பெண்கள் கொடுக்க கூடிய விலையும் அளப்பரியது. தங்களுடைய கணவன் மார்களையும், தங்களுடைய புதல்வர்களையும் அவர்கள் பறிகொடுத்தார்கள். அந்நியப் படைகளின் பாலிய வல்லுறவு களுக்கும் ஆளானார்கள. தாங்களும் கொலை செய்யப்பட்டு இறந்தார்கள். இவற்றிற்கும் அப்பால் தங்களது குடும்பங்களைப் பாராமரித்துக் கொண்டு தமது நாட்டின் விடுதலைப் போராட் டத்திற்கான பங்களிப்பினையும் தொடர்ந்து செய்து வந்தார்கள்.

ஒரு போராட்டக் காலத்தில் பெண்ணின் பங்கு கணிசமானது என்பதைப் போராட்ட வரலாறுகள் இன்றும் உணர்த்தி நிற் கின்றன. போராளிகளுக்கு உணவு அளிப்பதுவும், உறைவிடம் தந்து உபசரிப்பதுவும் காயம் பட்டவர்களைப் பராமரிப்பதுவும் பெண்களாகத்தான் இருந்து வருகின்றார்கள். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழ்ப் பெண்ணினத்தின் பங்களிப்பானது, உலக சுதந்திரப் போராட்ட வரலாற்றில் ஒப்பீட்டளவில் உன்னத இடத்தை வகிக்க கூடிய ஒன்றாகும்.

இந்த வகையில் ஒட்டு மொத்தத் தமிழீழப் பெண்களினதும் தமிழர்களினதும் ஆத்திரத்தினையும், சுதந்திர வேட்கை யையும் வெளிப்படுத்தும் விதமாகவே அன்னை பூபதியின் அகிம்சைப் போராட்டத்தை நாம் கருத வேண்டும். ஏற்கனவே நாம் சுட்டிக் காட்டியிருந்தபடி உலகத்தின் நான்காவது பெரிய இராணுவமான இந்தியப் படைகளின் வன்முறைகளையும், சிங்கள இராணுவத்தின் நெருக்கடிகளையும்,தமிழ் ஒட்டுக் குழுக்களின் அடாவடித்தனங்களையும் ஒருங்கு சேர எதிர் கொண்டு, அன்னை பூபதி தனது அகிம்சைப் போராட்டத்தை சாகும்வரை மேற்கொண்டது என்பதானது விடுதலை வேட்கை யின் உறுதியின் உச்சமானதுமாகும்.

ஓர் இனத்தின் அரசியல் விடிவிற்காகவும், ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராகவும் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடாத்தி உயிர்த் தியாகம் செய்திட்ட உலகின் முதற் பெண்மணி என்ற வகையிலும், ஒரு சாதாரணக் குடும்பப்பெண் தனது தனிப்பட்ட வாழ்வைத் துறந்து தனது நாட்டுக்காக முன்னெடுத்த உண்ணாவிரதப் போராட்டம் என்ற வகையிலும் அன்னை பூபதி அவர்களின் போராட்டம் பல விழுமியங்களை தொட்டு நிற்கின்றது இவர் ஒரு விடுதலைப் போராளி அல்லர்!


மட்டு – நாவலடியில் அன்னை பூபதியின் நினைவிடம்




விடுதலைப் போராளி என்ற வகையில் தியாகி திலீபன் அவர்கள் ஒரு சொட்டு நீரும் அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்து தனது இன்னுயிரை ஈந்திருந்தார். ஆனால் போராளியாக இல்லாத ஒருவர் – சாதாரணப் பெண்மணி – குடும்பத் தலைவி – தன்னைத்தன் மக்களுக்காக மட்டுமன்றி, தனது போராளி களுக்காகவும் தன்னைத் தற்கொடையாக்கிய செயல் என்ப தானது ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும்.

மக்களைக் காப்பாற்றுவதற்காகத் தம் உயிரைத் தருகின்ற போராளிகளின் இலட்சியத்திற்காகத் தன் உயிரைத் தாரை வார்க்க முன்வந்த அன்னை பூபதியின் தியாகம் நாட்டுப் பற்றாளர்களின் தியாகத்திற்கும், அர்ப்பணிப்பிற்கும் ஒரு குறியீடாகும்! அந்த வகையில் அன்னை பூபதியின் நினைவு தினம் என்பதானது நாட்டுப்பற்றாளர் தினம் என்று தமிழீழத் தேசியத் தலைமையினால் பிரகடனப் படுத்தப்பட்டது மிகப் பொருத்தமானதாகும்.

அன்னை பூபதி அவர்கள் தமிழீழ நாட்டுப் பற்றாளர்களின் குறியீடாக அறியப்படுகின்ற இந்த வேளையில நாட்டுப்பற் றாளர்களின் சக்தி குறித்துச் சில கருத்துக்களை முன் வைப்பது இவ்வேளையில் பொருத்தமானதாக இருக்கும் என்று நாம் நம்புகின்றோம்.

ஒரு தேசத்தின் நாட்டுப் பற்றாளர்கள் விடுதலைப் போராட் டத்தைத் தாங்குபவர்களாக இருந்து வருகின்றார்கள். நாட்டுப் பற்றாளர்களை அழிப்பதன் மூலம் விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடுகின்ற முயற்சியில், அடக்குமுறை அரசுகள் தொடர்ந்தும் செயல்பட்டு வந்திருப்பதை வரலாறு சுட்டிக் காட்டு கின்றது. ஈராக்கில் போர் புரிகின்ற அமெரிக்க இராணுவத் தினருக்குப் போர்த் திரைப்படம் ஒன்றை அமெரிக்க அரசு திரையிட்டு காட்டியிருப்பதாகக் கடந்த ஆண்டு செய்திகள் தெரிவித்திருந்தன. இச்சம்பவம் குறித்துச் சற்று ஊன்றிக் கவனித்தால் புலப்படாத பல விடயங்களை நாம் அவதானிக்கக் கூடும்.

இந்தப் போர்த் திரைப்படத்தின் பெயர் ‘Battle of ALGIERS’ இத்திரைப்படம் ஒரு புதிய திரைப்படமும் அல்ல! ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்னால் இத்திரைப்படம் வெளி வந்திருக்க வேண்டும் என்று எண்ணுகின்றேன். இந்த நவீனகாலத்தில் அதாவது போரியல் துறையானது மிகுந்த தொழில் நுட்ப வளர்ச் சியை அடைந்துள்ள இக்காலகட்டத்தில் மிகப்பழைய திரைப் படம் ஒன்றை அமெரிக்க அரசு தன்னுடைய இராணுவத்தின ருக்கு திரையிட்டுக் காட்ட வேண்டிய காரணம் என்ன?






இதற்குப் பின்னால் மிக முக்கியமான காரணம் உள்ளது. இந்த Battle of Algiers என்ற போர்த் திரைப்படம் பிரான்ஸ் நாட்டின் ஆக்கிரமிப்பை எதிர்த்து அல்ஜீரிய மக்கள் நடாத்திய போராட்டத் தைச் சித்தரிக்கின்றது. அல்ஜீரியா சுமார் நூற்றியிருபத்திநான்கு ஆண்டுகளாக பிரான்ஸ் நாட்டின் காலனித்துவ ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்தது. அல்ஜீரியாவின் சுயாட்சிக்கான இந்தப் போராட்டத்தை எதிர்த்து மிகக் கொடூரமான முறைகளில் படுகொலைகளை பிரான்ஸ் கட்டவிழ்த்து விட்டது. அல்ஜீரியா வின் நாட்டுப்பற்றாளர்கள் ஈவு இரக்கமின்றிப் படுகொலை செய் யப்பட்டார்கள். மிகக் கொடுமையான சித்திரவதைகளுக்கும் ஆளானார்கள். அல்ஜீரிய மக்களின் மனவலிமையைக் குலைத்து அவர்களைப் போராட்டத்தில் இருந்து விலக்குவதற் காகச் சகலவிதமான கொடூரங்களையும் பிரான்ஸ் இராணுவம் மேற்கொண்டது.

ஆயினும் அல்ஜீரிய மக்கள் தொடர்ந்து போரா டினார்கள். மிகக் கொடிய வறுமைக்கு மத்தியில், கண்ணீரையும் துன்பத்தையும் சுமந்து கொண்டு, தமது விடுதலைக்காக அவர்கள் போராடி னார்கள். மிகப் பெரிய அவலங்களையும், இழப்புக்களையும் அவர்கள் எதிர்கொண்டார்கள்.

1954ம் ஆண்டு தொடக்கம் 1962ம் ஆண்டு வரையில் இந்த யுத்தம் நீடித்தது. கடைசியில் அல்ஜீரிய மக்களின் போராட்டம் வெற்றி பெற்று பிரான்ஸ் வெளியேறியது.

ஆனால், இந்தப் போராட்டத்தைச் சித்தரிக்கின்ற திரைப் படத்தை, ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவத்தினருக்கு அமெரிக்க அரசு திரையிட்டுக் காட்ட வேண்டிய அவசியம் என்ன?

ஏனென்றால் இந்தப் போர்த் திரைப்படம், ஒரு மக்கள் போராட்டத்தை அடக்குவதற்குரிய கொடிய வழிகளைப் படம் பிடித்துக் காட்டியிருக்கின்றது. எப்படிப்பட்ட கொடிய வழிகளை உபயோ கித்து பிரான்ஸ் இராணுவம் அல்ஜீரிய மக்களை – நாட்டுப் பற்றாளர்களை – துன்புறுத்திக் கொன்று, அவர்களின் மன உறுதியைக் குலைக்கும் முயற்சிகளை மேற்கொண்டார்கள் என்பதனை இத்திரைப்படம் விபரமாக சித்தரித்துள்ளது. பிரான்ஸ் இராணுவத்தின் இந்தக் கொடிய வழிமுறைகள் ஈற்றில் பலன் அளிக்காமல் போயிருந்தாலும் அன்று ஒரு போராட் டத்தை அழிப்பதற்கு எத்தகைய வழி முறைகள் கையாளப்பட்டன என்பதை இந்தத் திரைப்படம் எடுத்துக் காட்டியுள்ளது.

இதனைத்தான் ஈராக்கில் நிலை கொண்டுள்ள அமெரிக்க இராணுவத்தினருக்கு அமெரிக்க அரசு எடுத்துக் காட்டியுள்ளது.

இந்தத் திரைப்படத்தைத் திரையிட்டுக் காட்டிய சம்பவம் ஒரு விடயத்தை மீண்டும் நிரூபணமாக் கியுள்ளது. அதாவது ஒரு மக்கள் எழுச்சிப் போராட்டத்தை அடக்கி ஒடுக்க வேண்டு மென்றால், அந்தப் போராட்டத்தைத் தாங்கி நிற்கும் நாட்டுப் பற்றாளர்களை முதலில் நசுக்க வேண்டும் என்று அடக்கு முறையாளர்கள் தொடர்ந்து சிந்தித்தும், செயல்பட்டும் வரு வதை இச்சம்பவம் நிரூபித்து நிற்கின்றது.

அந்த அளவிற்கு ஒரு விடுதலைப் போராட்டத்தைத் தாங்கி நிற்பவர்கள் நாட்டுப்பற்றாளர்கள் என்பதை வரலாறு சுட்டிக் காட்டி நிற்கின்றது.

இந்த வரலாற்று உண்மைகளின் அடிப்படையில்தான் தமிழீழத்து நாட்டுப்பற்றாளர்களையும், அவர்தம் அளப்பரிய பணியையும், தியாகத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். சில சமயங்களில் விடுதலைப்புலிகள் எதிர் கொள்ளாத இடர்களை நாட்டுப்பற்றாளர்கள் எதிர் கொண்டிருக்கின்றார்கள் என்பதை இங்கே அவசியம் குறிப்பிட்டாக வேண்டும். போராளிகள் களயதார்த்த நிலைக்கும் போர் முறைகளுக்கும் ஏற்ப இடம் மாறிச் செல்வார்கள். ஆனால் பொது மக்களாகிய நாட்டுப் பற்றாளர்களோ தமது வதிவிடத்திலேயே தொடர்ந்து தங்கியிருந்து ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடுவார்கள். ஆக் கிரமிப் பின் வன்முறையை எதிர்ப்பதற்குத் தம்மிடம் படைக் கருவிகள் இல்லாதபோதும், அந்த வன்முறைக்கு முகம் கொடுத்து, அதனை உள்வாங்குவார்கள். தன் காரணமாக உயிரழிவையும், சொத்தழிவையும் தாங்கியும் கொள்வார்கள். ஆயினும் தொடர்ந்தும் விடுதலைப் போராட்டத்தைத் தாங்கி நிற்பார்கள்.

சிறீலங்கா அரசுகளும் அன்றிலிருந்து இன்றுவரை பல்வேறு உத்திகளைக் கையாண்டு தமிழீழத்து நாட்டுப் பற்றாளர்களை அழிக்கவும், அடக்கவும் முயன்று வருகின்றன. ஆனால் நாட்டுப் பற்றாளர்களின் விடுதலை வேட்கையை அழித்து விடமுடியாது என்பதைப் பல்வேறு விடுதலைப் போராட்டங்களோடு, தமிழீழ விடுதலைப் போராட்டமும் நிரூபித்து நிற்கின்றது.

இங்கே மேலும் ஒரு மிக முக்கியமான விடயத்தையும் நாம் சுட்டிக்காட்டியாக வேண்டும். அன்னை பூபதி அவர்களின் அகிம்சை வழியிலான உண்ணாவிரதப் போராட்டமும், தியாகி திலீபனின் அகிம்சை வழியிலான உண்ணாவிரதப் போராட் டமும் சமாதானத்தினை வேண்டி நடாத்தப்பட்ட போராட்டங் களாகும். சமாதானத்தையும், அமைதியையும் நாடி நடாத்தப் பட்ட அமைதி வழி அகிம்சைப் போராட்டங்களை ஆதிக்க சக்திகள் பொருட்படுத்துவதில்லை என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அடிப்படையில் மகாத்மா காந்தியின் போதனைகளையும் அகிம்சை வழிப் போராட்டங்களையும் ஏற்றுக்கொண்ட ஒரு தேசம்தான் இந்தியா! ஆனால் அத்தகைய இந்தியா கூட, அடக்கு முறை என்று வரும்போது அகிம்சையையும் சமாதானத் தையும் தூக்கி எறிந்து விடுகின்றது என்பதற்கு அன்னை பூபதியும் தியாகி திலீபனும் சாட்சிகளாக விளங்குகின்றார்கள்.

அகிம்சையைப் போதிக்கின்ற இந்தியாவே இவ்வாறு நடந்து கொள்ளும்போது, தொடர்ந்து இரத்தவெறி கொண்டு அடக்கு முறையை மேற்கொண்டு வருகின்ற சிங்கள பௌத்தப் பேரின வாத அரசுகள் சமாதானத்தைக் கடைப்பிடிப்பார்கள் என்று எவராவது இன்றும் நம்புவார்களாக இருந்தால் அது மடமைத் தனமானதாகும்.

அன்றிலிருந்து இன்றுவரை தமிழீழத்து நாட்டுப் பற்றாளர் களைச் சிங்கள அரசுகள் தொடர்ந்தும் கொலை செய்து வரு வதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அதற்குரிய காரணங் களையும் நாம் வரலாற்று ரீதியாகத் தர்க்கித்திருந்தோம். ‘மக்கள் எழுச்சிப் பேராட்டத்தை அடக்கி ஒடுக்க வேண்டு மென்றால், அந்தப் போராட்டத்தைத் தாங்கி நிற்கும் நாட்டுப் பற் றாளர்களை நசுக்க வேண்டும்’ என்று, அடக்கு முறையாளர்கள் தொடர்ந்து சிந்தித்தும், செயல்பட்டு வருவதையும் தமிழீழத்து நாட்டுப்பற்றாளர்கள் மீதான படுகொலைகள் நிரூபித்து நிற் கின்றன.

இத்தகைய உயரிய நாட்டுப்பற்றாளர்களும்,அவர்களுடைய குறியீடான அன்னை பூபதியும் எம்போன்ற சாதாரண மக்களுக்கு மிகச் சிறந்த உதாரணங்களாக திகழுகின்றார்கள்.



“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது.“

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*




# முல்லைத்தீவு – தண்ணிமுறிப்பு குருந்தூர்மலை விவகார வழக்கு ஒத்திவைப்பு!

மார்க் 02, 2023

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலை விவகாரத்தில் நீதிமன்றக்கட்டளை மீறப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மற்றும், தொல்லியல் திணைக்களம் ஆகிய தரப்பினர் எதிர்வரும் 30.03.2023 அன்று நீதிமன்றில் ஆஜராகி தமது அறிக்கைகளை சமர்ப்பிக்கவேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட நீதவான் ரி.சரணராஜா உத்தரவிட்டுள்ளார்.

குருந்தூர் மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்த விஹாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயதினர் சார்பில் இன்று (02) நீதிமன்றில் மன்றில் முறையீடு செய்யப்பட்டது.

குறிப்பாக குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தினர் சார்பில், வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூகஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோர் வழக்கிலக்கம் AR/673/18 இன் ஊடாக நகர்த்தல் பத்திரம் தாக்கல்செய்து, குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி தொடர்ந்தும் சட்டவிரோமாக பௌத்த விஹாரை கட்டுமானப்பணிகள் மேற்கொற்ளப்படுவதாக முறையீடு செய்யப்பட்டது. இதன்போதே நீதிபதியால் மேற்கண்டவாறு உத்தரவிடப்பட்டது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குருந்தூர்மலை தொடர்பாக வழக்கிலக்கம் AR/673/18 இல் தொடரப்பட்டுள்ள வழக்கில், 12.06.2022இற்கு முனிருந்த நிலையை பேணுமாறும், அதற்குமேல் கட்டுமானப் பணிகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாதென முல்லைத்தீவு நீதிமன்றம் 19.07.2022அன்று கட்டளை பிறப்பித்திருந்தது.

எனினும், நீதிமன்றம் இவ்வாறு வழங்கிய கட்டளையையும் மீறி குருந்தூர்மலையில் பௌத்த விஹாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக கடந்த 23.02.2023 அன்று குருந்தூர் மலைக்கு, தண்ணிமுறிப்புப் பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்களும், தமிழ் அரசியல் பிரதிநிதிகள் சிலரும் கள விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த விஜயத்தின்போதே இவ்வாறு நீதிமன்றத்தின் கட்டளைகள் மீறப்பட்டு தொடர்ந்தும் பௌத்த விகாரை அமைக்கப்படுவது உறுதிசெய்யப்பட்டது.

இந்நிலையில் இவ்வாறு நீதிமன்றக்கட்டளைகள் மீறப்பட்டு தொடர்ந்தும் பௌத்த விகாரை அமைக்கும் பணிகள் இடம்பெறுவது தொடர்பில் களவிஜயத்தில் ஈடுபட்டவர்



களுள் ஒருவரான முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் கடந்த 23.02.2023 அன்றையதினமே முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றும் மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை அதனைத் தொடர்ந்து இன்று (02) முல்லைத்தீவு நீதிமன்றில் AR/673/18 என்னும் வழக்கிலக்கத்தில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றிலும் நீதமன்றக் கட்டளை மீறப்பட்டு கட்டுமானப் பணிகள் இடம்பெறுகின்றமை தொடர்பில் புகைப்பட ஆதாரங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு முறையீடு செய்யப்பட்டுள்ளது.

# வெடிபொருட்கள் அகற்றப்படாத முகமாலையில் சட்டவிரோத மண் அகழ்வு!

மார்ச் 01, 2023

முகமாலையில், நில கண்ணிவெடிகள் மற்றும் அபாயகரமான வெடிபொருட்கள் காணப்படும் பிரதேசங்களுக்குள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

யுத்த காலத்தில் சூனிய பிரதேசமாக இருந்த முகாமாலை பகுதியில் நில கண்ணிவெடிகள் மற்றும் அபாயகரமான வெடிபொருட்கள் காணப்படுகின்றன.

யுத்தம் முடிவடைந்து 14 வருடங்கள் ஆகின்ற போதிலும் , அப்பகுதியில் தற்போதும் வெடிபொருட்களை அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் அப்பகுதிகளுக்குள் பொதுமக்கள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது. அப்பகுதி அபாயகரமான பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதிக்குள் சட்டவிரோதமான முறையில் உள்நுழையும் மணல் கொள்ளையர்கள் தனியார் காணிகளுக்குள் நுழைந்து மணல் அகழ்வுகளில் ஈடுபடுகிறனர்.

அதனால் ,வெடிபொருள் அபாயத்தினால் விடுவிக்கப்படாத தனியார் காணிகளுக்குள் மணல் அகழ்வதினால் காணிகளுக்குள் பாரிய அளவினால் குழிகள் காணப்படுகின்றன.

அதேவேளை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களால், வெடி பொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடும் போது வெடி பொருட்கள் ஏதேனும் வெடித்தால் மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் அவயங்களை இழக்க வேண்டி ஏற்படும். சில வேளைகளில் உயிரை இழங்க வேண்டி ஏற்படும்.

எனவே அபாயகரமான பகுதிகளுக்குள் ஊடுருவி மணல்



அகழ்வில் ஈடுபடுபவர்களை கட்டுப்படுத்த உரிய தரப்பினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# யாழ்ப்பாணம் இராசதானி மந்திரிமனைக்குள் நுழையவேண்டாம்!

மாாச 06, 2023

நல்லூரில் அமைந்துள்ள மந்திரிமனைக்குள் நுழைய வேண்டாம் என்ற அறிவித்தல் தொல்பொருள் திணைக்களத்தால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இராசதானியை ஆண்ட சங்கிலிய மன்னனது மந்திரிமனை நல்லூரில் சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ளது.

அந்தக் கட்டடம் உடைந்து விழும் நிலையில் உள்ளது. அதற்கு முட்டுக்கொடுத்து கம்பிகள் நாடப்பட்டுள்ளன. இதனால் அதற்குள் யாரையும் நுழையவேண்டாம் என்று தொல்பொருள் திணைக்களம் அறிவித்துள்ளது.










# இனப்பிரச்சனை தீர்க்கப்படாமல் இருப்பதற்கு பௌத்த பீடத் தலையீடே காரணம்!

மார்ச் 06, 2023

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சனை இன்னமும் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு அரசியல் விவகாரங்களில் பௌத்த தேரர்களால் மேற்கொள்ளப்படும் தலையீடுகளே காரணம் என்பதே எனது நிலைப்பாடாகும்.

வட, கிழக்கு வாழ் தமிழ்மக்களின் பிரச்சனைகள் என்ன வென்பதைக் கண்டறிவதற்கு ஆங்கிலம் அல்லது தமிழ் மொழி பேசக்கூடிய பௌத்த தேரர்கள் தமிழ் தலைவர் களுடன் கலந்துரையாடுவது இன்றியமையாததாகும் என்று தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை முழுமை யாக அமுல்படுத்தக்கூடாது என வலியுறுத்தி மல்வத்து, அஸ்கிரிய, அமரபுர மற்றும் ராமாஞ்சு பீடங்களின் மகா நாயக்க தேரர்கள் கடந்த மாதம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கூட்டாகக் கடிதமொன்றைக் கையளித் திருந்தனர்.

அக்கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை மேற் கோள்காட்டி, அவற்றுக்கு விளக்கமளித்து இந்நான்கு மகா நாயக்க தேரர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தார்.

அக்கடிதத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தத விடயங்கள் சிங்கள சமூகத்தின் மத்தியில் எதிர்மறையான தாக்கத்தை ஏற் படுத்தியிருப்பதாகவும், எனவே மகாசங்கத்தினரை விமர் சிப்பது ஏற்புடையதா? என்றும் எழுப்பப்பட்டுள்ள கேள் விக்கு அளித்திருக்கும் பதிலிலேயே சி.வி.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது

எனது கருத்துக்கள் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி யிருப்பதாக நான் கருதவில்லை. மாறாக அவை நேர் மறையான சூழ்நிலையொன்றையே தோற்றுவித்திருக் கின்றன. குறிப்பாக அரசியலில் பௌத்த தேரர்களின் வகிபாகத்தின் ஏற்புடைமை குறித்துப் பல சிங்கள பௌத்தர்கள் கேள்வியெழுப்ப ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சனை இன்னமும் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு அரசியல் விவகாரங்களில் பௌத்த தேரர்களால் மேற்கொள்ளப்படும் தலையீடுகளே காரணம் என்பதே எனது நிலைப்பாடாகும்.

வட, கிழக்குவாழ் தமிழ்மக்களின் பிரச்சினைகள் என்ன வென்பதைக் கண்டறிவதற்கு ஆங்கிலம் அல்லது தமிழ் மொழி பேசக்கூடிய பௌத்த தேரர்கள் தமிழ் தலைவர் களுடன் கலந்துரையாடுவது இன்றியமையாததாகும்.

போராட்டங்களில் ஈடுபடும் தேரர்களுக்கு அதிகாரப் பரவலாக்கத்துக்கும் அதிகாரப்பகிர்வுக்கும் இடையிலான வேறுபாடும் ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கும் கூட்டாட்சி அரசியலமைப்புக்கும் இடையிலான வித்தியாசமும் தெரிய வில்லை. அதுமாத்திரமன்றி அவர்களது தாய்மொழியின் வரலாறுகூட அவர்களுக்குத் தெரியாது.



இலங்கையின் இனப்பிரச்சனைக்கான தீர்வில் குழப்பம் விளைவிக்கவேண்டிய தேவை அரசியல்வாதிக்கு இருக்கு மாயின், அதற்குரிய உடனடி ஆதரவை பௌத்த தேரரிட மிருந்து இலகுவாகப் பெறமுடியும்.

'குறித்த நபர் நாட்டைப் பிளவுபடுத்த முற்படுகின்றார்' அல்லது 'குறித்த நபர் விடுதலைப்புலிகள் உறுப்பினர்' அல்லது 'குறித்த நபர் இந்தியாவின் கைப்பொம்மை' போன்ற விடயங்களை மாத்திரம் அவர்களிடம் கூறினால் போதுமானதாகும்.

உடனே அவர்கள் காவி உடையுடன் வீதிக்கு இறங்கி விடுவார்கள். அவர்கள் உண்மை நிலைவரத்தைப் புரிந்துகொள்ளாமல் 'சீன மத்தாப்பூ' போன்று உடனடியாக வெடித்துவிடுவார்கள் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# மட்டு மயிலந்தனையில் சிங்கள மயப்படுத்தல் மாதுறு ஓயா திட்டத்தை நிறுத்தவேண்டும்!

மார்ச் 06, 2023

மட்டக்களப்பு மயிலந்தனைமடு மாதந்தனை மேய்ச்சல் தரை பகுதியில் சிங்கள மயப்படுத்தலுக்காக திட்டமிடப்பட்ட மாதுறு ஓயா வலதுகரை திட்டத்திற்கு தமிழ் பிரதேசத்தின் ஒரு அங்குலம் நிலம் கூட வழங்க முடியாது என்பதுடன், நிதி உதவி வழங்குகின்ற சர்வதேச நிறுவனங்கள் இதனை நிறுத்தவேண்டும் அல்லது உங்கள் அலு வலகங்களுக்கு முன்னால் போராட்டம் நடத்துவோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான பொன்னம்பலம் கஜேந்திரகுமார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொன்னம் பலம் கஜேந்திரகுமார், செயலாளர் செல்வராசா கஜேந் திரன் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் மற்றும் கட்சி ஆதரவாளர்களுடன் மயிலந்தனை மாதந்தனை மேச்சல் தரை பகுதிக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை (05) விஜயம் மேற்கொண்டு பண்ணையாளர்களை சந்தித்து அவர் களுடைய பிரச்சனைகளை கேட்டறிந்த பின்னர் கட்சி தலைவர் ஊடகங்களக்கு கருத்து தெரிவிக்கையில் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லைப் பிரதேசமான மயிலந்தனைமடு பெரிய மாதந்தனை பிரதேசத்தில் மேச் சல்தரை பகுதியில் கால்நடை பண்ணையாளர்களை அச்சுறுத்தி மாடுகளை வெட்டி அவர்களை பரம்பரையான மேச்சல்தரையில் இருந்து ஓடவைப்பதற்காக முழுமூச் சிலான திட்டம் கடந்த இரண்டு வாரத்தில் தீவிரப்படுத்தப் பட்டுள்ளது.

பண்ணையாளர்களின் இந்த பிரச்சனைகளை அவர்கள் பல இடங்களில் முறையிட்டனர். ஆனால் எந்த ஒரு இடத்திலும் அவர்களுக்கு முடிவு இல்லாமல் தொடர்ச்சியாக அவர்களின் வாழ்வே கேள்விக்குறியாகின்ற நிலை ஏற்பட்டுள்ளது

மாதுறு ஓயா வலதுகரையை சிங்களமயமாக்குதலுக்கான நோக்கத்தோடு இந்த பண்ணையாளருக்கு எதிராக நட வடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்பது நன்றாக விளங்குகின்றது.

இதேவேளை கிழக்கு மாகாண ஆளுநர், வனவள திணைக்களம், மகாவலி அபிவிருத்தி சபை போன்ற அனைத்து கட்டமைப்புக்களும் இங்குள்ள மேச்சல்தரை காணிகளை அபகிப்பதற்கான நடவடிக்கையை உறுதியாக இருக்கின்றனர்.

நீதிமன்ற உத்தரவு இருக்கின்றது இந்த பிரதேசத்தில் தமிழ் விரோத நடவடிக்கை சிங்கள விரோதிகளால் முன்னெடுப் பதை தடுக்க ஒருவருடத்துக்கு மேலாக இருக்கின்றது கிழக்கு மாகாண ஆளுநருடைய முழு ஒத்துழைப்புடன் கண்ணுக்கு முன்னால் அவருடைய வழிகாட்டலில் நடக் கின்றது என்றால் எந்தளவுக்கு இந்த இனவாத சட்டத் தையும் நீதியையும் மதிக்கின்றார்கள் ?

எனவே தமிழ் பிரதேசத்தை இன சுத்திகரிப்பு நடாத்து வதற்கும் சிங்கள குடியேற்றத்தை நடாத்தி இங்குள்ள மக்களை பட்டினியில் சாவடிக்கின்ற நடவடிக்கையான மாதுறு ஓயா அபிவிருத்திக்கு நிதி உதவி வழங்குகின்ற சர்வதேச நிறுவனங்களே நீங்களும் தமிழ் இன சுத்தி கரிப்பிற்கு உடந்தையாக இருக்கின்றீர்கள்.

எனவே உங்களுக்கு இருக்கின்ற நிதியை எந்தவிதமான நிபந்தனையும் போடாமல் சிங்கள இனவாத சித்தாந்தத் திற்கு விலைபோகின்றதற்கு இந்த நிதி பயன்படுத்தப் படுகின்றது என தெரிந்துவைத்திருக்க வேண்டும். இதை தடுத்து நிறுத்த முன்வரவேண்டும் அல்லது உங்கள் அலுவலகங்களுக்கு முன்னால் நாங்கள் போராட் டங்களை செய்வதை தவிர வேறு வழியில்லை.

கோட்டாபய ராஜபக்ஷ காலத்தில் சந்தித்து இந்த விடை யங்களை கூறி பாராளுமன்றத்தில் பெரிதுபடுத்தி பேசிய போது தற்காலிகமாக நிறுத்துவதாக உத்தரவாதம் தந் தாலும் கூட இன்று முன்னரைவிட தீவிரப்படுத்தப் பட்டுள்ளது.

இன்று ரணில் விக்கிரமசிங்கவின் செல்லப்பிள்ளையாக நீங்கள் கருதி காப்பாற்றுகின்ற வேளையில் அவரின் ஆட்சி காலத்தில் இந்த இனவாத தமிழ்விரோத செயற் பாடுகள் அனைத்தும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்பது இன்று யதார்த்தம்.

எனவே நிதி உதவி செய்யும் சர்வதேச நிறுவனங்கள் உட னடியாக கொடுக்க கூடிய நிதி உதவிகளை நிபந் தனைகளை போட்டு இங்குள்ள மக்களின் வாழ் வாதாரத்தை உறுதிப்படுத்துகின்றதை செய்யவேண்டும்.

இந்த திட்டம் மக்களுக்குரிய அபிவிருத்தி வேலைத்திட்ட மாக இருக்கவேண்டுமே தவிர இந்த மக்களை அப்புறப் படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை இல்லாமல் செய்து ஒரு இனழிப்பிற்கு வழிவகைக்கின்ற முறையில் அமைய





கூடாது இதையும் அம் பலப்படுத்துவோம் என வே இந்த விடையங் களை கருத்தில் கொண்டு சரியான வகையில் இங்கே பரம் பரையாக இருக்கக்கூடிய தமிழர் தாயகத்தில் இருக்க கூடிய உண்மையான சொந்தகாரர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும்.

அதேவேளை எங்களுடைய உள்ளூராட்சி சபைகள் தவி சாளர் பதவிகளை வைத்துக் கொண்டு ஆட்சி அதிகாரங் களை வைத்துக் கொள்பவர்கள் இந்த சொந்த மக்களுக்கு இந்த நிலத்துக்குரிய உரிமையாளர்களுக்கு வந்து தொழிலை செய்வதற்கான போக்குவரத்துக்கு இந்த பாதைகளை சீர் செய்ய முடியாமல் இவ்வளவு காலமும் பாத்துக் கொண்டிருப்பது என்பது மிக மோசமான ஒரு அநியாயம்.

இந்த மக்கள் தங்களுக்கு பல அச்சுறுத்தல் மத்தியில் இந்த பிரதேசத்தில் தங்களுடைய உயிர்களை வைத்துக் கொண்டு பண்ணைகளை பராமரிப்பதென்பது ஒரு இலகு வான விடையமல்ல.

ஒருபக்கம் சிங்கள இனவாத அச்சுறுத்தல், இன்னொரு பக்கம் யானையால் அச்சுறுத்தல். இந்த மக்களுக்கு தேவைப்படுகின்ற உத்தரவாதங்களையும் உதவி களையும் வசதிகளையும் செய்யாமல் தமிழ் பிரதேச சபைகள் இயங்குவது என்பது மன்னிக்க முடியாத ஒரு செயலாகும் என்றார்.

# மாமனிதர் கிட்டினன் சிவநேசனின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல்!

மார்ச் 06, 2023

மாமனிதர் கிட்டினன் சிவநேசன் அவர்களது 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்றைய தினம் திங்கட்கிழமை வடமராட்சி, கரவெட்டி தெற்கு,மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

பொது ஈகை சுடரினை மாமனிதர் கிட்ணன் சிவனேசன் அவர்களுடைய புதல்வி தாட்சாயினி சிவனேசன் ஏற்றி தொடர்ந்து அவரது திரு உருவ படத்திற்க்கு மாமனிதர் அவர்களது புதல்விகள் மலர்மாலை அணிவித்ததை தொடர்ந்து, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராக சேவையாற்றி வந்த காலத்தில் 2008ம் ஆண்டு இதே நாளில், மாங்குளம் குஞ்சுக்குளம் பகுதியில் வைத்து சிறீலங்கா ஆழ ஊடுருவும் படையணியினரின் கிளைமோர்த் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார்.







# இந்தியாவால் சிறீலங்காவிடம் ஒப்படைக்கப்பட்ட முன்னாள் போராளி!

மார்ச் 06, 2023

இந்திய சிறைகளில் கடந்த 5வருடங்களிற்கு மேலாக தடுத்துவைக்கப்பட்டிருந்ததமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினரான செல்லப்பாக்கியம் சுதாகரன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலையில் வசித்து வந்த சுதாகரன், 2018ஆம் ஆண்டு இந்தியாவுக்குச் சென்றதாகக் கூறப்படும் நிலையில், இந்திய காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு, தமிழ்நாடு, திருச்சியில் உள்ள இலங்கையர்களுக்கான அகதிகள் சிறப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

கடந்த ஐந்து வருடங்கள் தமிழ் நாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர், பெப்ரவரி 25ஆம் திகதி இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டார். அவர் இலங்கை திரும்பிய நிலையில் பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனிடையே தனது சகோதரன் 4ஆவது மாடி என அழைக்கப்படும் குற்றப் புலனாய்வுத் துறைக்கு அவரது மூத்த சகோதரர் செல்லப்பாக்கியம் உலகேந்திரன் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வு பிரிவால் கைது செய்யப்படுவதற்கு முன்பு அவர் இரகசிய விசாரணையாளரால் விசாரிக்கப்பட்டுள்ளார். நாடு கடத்தப்பட்டு இலங்



கைக்கு திரும்பிய பின்னர் அவர் பற்றிய எந்த தகவலும் வெளியிடப்படவில்லை எனவும் சகோதரன் தகவல் வெளியிட்டுள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் பிறப்பு வீதம் பெருமளவில் குறைவு 50 பாடசாலைகள் மூடப்படும் அபாயம்!

## கலாநிதி ஆறு. திருமுருகன்

மார்ச் 06, 2023

யாழ்.மாவட்டத்தில் பிறப்பு வீதம் குறைந்து செல்லும் நிலையில் இன்னும் சில வருடங்களில் சுமார் 50 பாடசாலைகள் மூடப்படும் அபாயமுள்ளதாக சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் எச்சரித்துள்ளார்.

யாழ்.உரும்பராய் ஞானவைரவர் அறக்கட்டளை நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கான கற்றல் உபரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

யாழ்.தீவகத்தில் பல பாடசாலைகள் போதியளவு மாணவர் இன்மையால் மூடப்பட்டுள்ள அதேவேளை வலிகாமம் கிழக்கில் இரண்டு பாடசாலைகள் அண்மையில் மூடப்பட்டன. பாடசாலைகளை மூடுவதற்கு மாணவர்கள் இல்லாமையே காரணமெனக் கூறப்பட்டாலும் யாழ். மாவட்டத்தில் பல தனியார் பாடசாலைகள் முளைத்த வண்ணமுள்ளன.

யாழ்ப்பாணத்தில் புகழ் பூத்த கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்ந்த உரும்பிராய் இந்துக் கல்லூரி மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ள நிலையில் அதனைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கல்வி கற்ற பல மாணவர்கள் உலகளாவிய நீதியில் உயர் பதவிகளை வகித்துள்ளதுடன் இன்றும் பல உயர் பதவிகளை வகித்து வருகின்றனர். இவ்வாறான கல்லூரியில் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து செல்லும் நிலையில் எதிர்காலத்தில் மூடப்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை இந்தப் பாடசாலை எதிர்நோக்கியுள்ளது.

அத்துடன் யாழ். மாவட்டத்திலுள்ள அறக்கட்டளை நிறுவனங்களில் ஐந்துக்கும் குறைவான நிறுவனங்களே பாராளுமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இலங்கையிலுள்ள அறக்கட்டளை நிறுவனங்களில் முஸ்லிம்களின் அறக்கட்டளை நிறுவனங்களே அதிகளவில் பாராளுமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ரவூப் ஹக்கீம் நீதி அமைச்சராக இருந்தபோது முஸ்லிம் அமைப்புகள் சார்ந்து இயங்கும் பெரும்பாலான அறக்கட்டளை நிறுவனங்களை இலங்கைப் பாராளுமன்றத்தில் பதிவு செய்தார். இலங்கையில் மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியாகவும் முஸ்லிம்கள் சார்ந்து தனியான பல்கலைக்



கழகங்கள் இயங்குகின்றன. ஆனால் தமிழ் மக்கள் சார்ந்து எந்தவொரு பல்கலைக்கழகமும் ஆரம்பிக்கப்படவில்லை.

எனவே பொறுப்பு வாய்ந்தவர்கள் தமது கடமைகளை உரிய வகையில் நிறைவேற்றாது போனால் எமது இனத்தின் பரம்பல் குறைந்து செல்வதுடன் எதிர்காலத்தில் பல்வேறு சவால்களை தமிழ் மக்கள் எதிர்நோக்க வேண்டியேற்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் 06 ஆண்டை தாண்டியது!

மார்ச் 08, 2023

2017ம் ஆண்டின் மார்ச் 08 ம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர் போராட்டமும் இன்றுடன் ஆறாவது ஆண்டினை தாண்டி பயணிக்க தொடங்கியுள்ளது.






சர்வதேச மகளிர் தினமான இன்றைய தினத்தில் மகளிர் தினத்தை கறுப்பு தினமாக கடைபிடித்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது குடும்பங்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவின் நகரப்பகுதியில் ஒன்று திரண்ட நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பத்தவர்கள் ஏழு வருடங்களாக கிடைக்காத நீதி எப்பொழுது கிடைக்குமென கோசம் எழுப்பினர். ஐ.நாவே கண் திறந்து பார் என மகளிர் தினத்தில் வீதியில் நின்று தாய்மார்கள் குரல் எழுப்பியிருந்தனர்.

ஏற்கனவே கிளிநொச்சி மற்றும் வவுனியா, அம்பாறையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது குடும்பங்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் ஆறுவருடங்களை கடந்துள்ள நிலையில் தற்போது முல்லைதீவில் முன்னெடுக்கப்படுகின்ற போராட்டமும் ஆறாவது ஆண்டினை தாண்டியுள்ளது.

ஏற்கனவே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது குடும்பங்கள் ஜநா வரை சென்று தமது குரல்களை



எழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் தலைவி சிறீலங்கா பொலிசாரால் கைது!

மார்ச் 09, 2023

காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் தலைவி கைது!
தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா நேற்று (09) மாலை வவுனியா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா ஏ9 வீதியில் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்பாக 2210 ஆவது நாளாக காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கோரி தாய்மாரால் சுழற்சி முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் குறித்த போராட்டம் அப்பகுதியில் கொட்டகை அமைத்து நடைபெற்று வருகின்றது.

குறித்த கொட்டகை அமைந்துள்ள வீதி மின் கம்பத்தில் பொருந்தப்பட்டிருந்த மின் விளக்கு இணைப்பு மூலம் மின்சாரம் பெறப்பட்டு போராட்ட கொட்டகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில் கொழும்பில் இருந்து வந்த மின்சார சபையினர் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதாக தெரிவித்து குறித்த போராட்ட கொட்டகையில் இருந்த தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா அவர்களுக்கு எதிராக பொலிசில் செய்த முறைப்பாட்டையடுத்து, அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்த வவுனியா பொலிசார் அவரை கைது செய்து பொலிஸ் நிலைய தடுப்பு காவலில் தடுத்து வைத்துள்ளதுடன், நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, வடக்கு மாகாண சபை இயங்கிய காலத்தில் மின்சார சபையின் அனுமதியுடனேயே தாம் மின்சாரத்தை பெற்றதாகவும், திருத்த வேலைகளும் மின்சார



சபையாலேயே மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்துள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தாம் சட்டவிரேதமாக மின்சாரம் பெறவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

# கோயில்கள் இருந்த இடத்தைச் சைவமக்களிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும்!

மார்ச் 09, 2023

யாழ்.கீரிமலையில் அழிக்கப்பட்ட கோயில்கள் இருந்த இடத்தைச் சைவமக்களிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும். மீண்டும் அந்த இடங்களில் சைவமக்கள் கோயில்களைக் கட்டுவதற்கான அனுமதியை உடன் வழங்க வேண்டும். தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ் விடயம் தொடர்பாக உடன் குரல் கொடுக்க வேண்டும் என அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உப தலைவரும், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் வலியுறுத்தி உள்ளார்.

இன்று வியாழக்கிழமை (09.03.2023) மாலை அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைச் சைவமக்களின் மிகத் தொன்மை வாய்ந்த வரலாற்றிடம் கீரிமலை. இப் பகுதியில் கடல் மட்டத்திலிருந்து மிகவும் உயரமான மலை போன்ற ஒரு பாறைப் பகுதியில் ஆதிச் சிவன் கோயில் அமைந்திருந்தது. அச் சிவன் கோயில் தற்போது இல்லை என்று அங்கு போய் வந்த அன்பர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்கள். மேலும் பெருமை மிக்க பெண் சித்தரான சடையம்மாவின் சமாதி கோயில் மடம், அதற்கருகிலிருந்த சங்கர சுப்பையர் சுவாமிகளின் சமாதி, கதிரைவேலன் கோயில் என்பவற்றையும் காணவில்லை என்ற செய்தி சைவமக்களுக்கு மிகவும் அதிர்ச்சியைத் தந்துள்ளது.

சுமார்-33 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆலயத்தைத் தரிசிக்கலாம் என்று சென்ற மக்களுக்கு இந்த விடயம் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவ்விடயம் தொடர்பாக கௌரவ ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை பதிலளிக்க வேண்டும். தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ் ஆலயங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பொதுமக்கள் தங்கள் நிலங்களைப் பார்வையிடுவதற்கும், அங்கு எஞ்சியுள்ள கோவில்களைத் தரிசிப்பதற்கும் உடன் ஒழுங்கு செய்ய வேண்டும் என்று வேண்டுகின்றோம் எனவும் அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் கவனயீர்ப்பு போராட்டம்!

மார்ச் 09, 2023

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் இன்றைய தினம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று வியாழக்கிழமை ஒரு மணிநேர வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்படுவதுடன் அடையாளமாக நண்பகல் 12மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் முன்பாக ஒன்றுகூடிய பல்கலைக்கழக ஊழியர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக கல்வி சாரா பணியாளர்களின் பிரச்சனைக்கு உடனடி தீர்வு வேண்டும், மின்சாரம் எரிபொருள் எரிவாயு பொருட்களின் விலைகளை குறை, நியாயமற்ற வரிக் கொள்கையை உடனடியாக திருத்து, சம்பள முரண்பாட்டினை தீர்க்கும் குழுவின் அறிக்கையினை உடனடியாக நடைமுறைப்படுத்து, அனைத்து பல்கலைக்கழகங்களையும் மீளவும் திறந்து கல்வி உரிமையை உறுதிப்படுத்து, பல்கலைக்கழக விவகாரங்களில் கல்வி அமைச்சரின் மௌனம் ஏன் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த போராட்டகாரர்கள் மார்ச் 15ம் திகதி ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் தீர்வு கிடைக்காவிட்டால்



தொடர்ச்சியாக போராட்டம் இடம்பெறும் என்றனர்.

# கீரிமலை சிவன் ஆலயம் இடிக்கப்பட்டு ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டமை இனவாதத்தையே காட்டி நிற்கின்றது!

அருட்தந்தை மா. சத்திவேல்

மார்ச் 09, 2023

சிவன் ஆலயம் இடிக்கப்பட்டு ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டமை இனவாதத்தையே காட்டி நிற்கின்றது என மலையக சமூக ஆய்வு மையத்தின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் இன்று (09) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் இருந்த வலி வடக்கு பிரதேச போர்த்துக்கீசர் கால மிக தொன்மை வாய்ந்த கீரிமலை சிவன் ஆலயம் இடிக்கப்பட்டு ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டுள்ளது. இது இனவாத, மதவாத அரச பயங்கரவாதத்தினதும் அதற்கு துணை நிற்கும் இயந்திரமான இராணுவத்தினதும் கொடூர முகத்தை மீண்டும் உறுதி செய்துள்ளது.

இத்தகைய நாகரீகம் அற்ற செயலை மலையக சமூக ஆய்வு மையம் மற்றும் மலையக தமிழர் பண்பாட்டுப் பேரவை என்பன வன்மையாக கண்டிப்பதோடு துன்புற்றிருக்கும் மக்களின் வேதனையோடு நாமும் நிற்கின்றோம் என கூறுவதோடு அரசு இந்து மக்களிடத்தும், தமிழ் மக்களிடத்தும் இச்செயல் தொடர்பாக மன்னிப்பு கோருவதோடு அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகை முற்றாக அங்கிருந்து அகற்றி அங்கு இந்து மக்களின் சுதந்திர வழிபாட்டுக்கும் இடம் அளிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றது.

இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசம் என்பது பாதுகாப்பான பிரதேசம் என்று பொருள்படும். அத்தகைய பிரதேசத்தில்



பயங்கரவாத செயலுக்கு இடம் உண்டா? இராணுவ தேவைக்கு அப்பால் கட்டிடம் நிர்மாணிக்கப்படுமாயின் அதற்கு அனுமதி அளித்தது யார்? அத்தகைய கட்டிடம் அமைக்க தொன்மை வாய்ந்த இந்து ஆலயத்தினை அழிப்பதற்கு அனுமதி அளித்தது யார்? தொல்லியல் திணைக்களம் அனுமதி அளித்ததா? எத்தகைய அனுமதியும் இல்லாத கட்டிடம் அமைக்கப்பட்டு தொன்மை வாய்ந்த ஆலயம் அழிக்கப்பட்டிருப்பின் அவ்வாறு செய்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். அவ்வாறு நீதியின் முன் நிறுத்தப்படுவார்களா? நிறுத்தப்பட்டாலும் நீதி கிடைக்குமா? என்பதே எம்மை சூழ்ந்துள்ள கேள்விகள்.

வடகிழக்கின் பிரதேசங்களை தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்த முனைவதும், சிங்கள பௌத்த பிரதேசங்களாக அடையாளப்படுத்த முனைவதும் நாம் அறிந்ததே.

நாட்டின் எல்லா சந்திகளிலும், உயர்ந்த மலைகளிலும் புத்தர் சிலைகளை அமைக்கும திட்டமிட்ட செயல் தொடர்கின்றது. மலையக பிரதேசம் ஆக்கிரமிக்கும் நோக்கில் இச்செயற்பாடு தீவிரபடுத்தப்பட்டிருக்கின்றது.

இவற்றிற்கும் மேலாக குருந்தூர் மலைப்பிரதேசத்தில் எத்தகைய கட்டிட பணிகளும் நடக்கக் கூடாது எனும் நீதிமன்ற கட்டளையை மீறி விகாரை அமைக்கும் பணி முடிவுறு நிலையில் உள்ளது. இதுவும் இராணுவத்தின் உதவியுடன் என்பது தெரிய வந்துள்ளது. தமிழ் மக்கள் விடயத்தில் தொல்லியல் திணைக்களம், நீதித்துறை என்பன சட்டங்களுக்கு வெளியில் என்றே சிந்திக்கத் தோன்றுகின்றது.

தமிழ் மக்களின் வாக்குகளை வேட்டையாட வடகிழக்கு நோக்கி படையெடுக்கும் பெரும்பான்மை கட்சிகள் தமிழ் மக்களின் நிலங்களை தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்துவது தொடர்பாகவோ, குருந்தூர் மலை விடையமாகவோ, கீரிமலை சிவன் ஆலயம் சம்பந்தமாகவோ குரல் கொடுக்கப் போவதில்லை.

இந்நிலையில், அவர்களுக்கு ஆதரவு திரட்டும் சக்திகளும், அவர்களுக்கு பின்னால் செல்லும் மக்களும் தமிழர்களின் தேசிய தொடர்பில் சிந்திக்க வேண்டும். இல்லையெனில் தமிழர்களின் சாபத்தை அனுபவிக்க வேண்டி நேரிடும்.

நாம் மீண்டும் ஆட்சியாளர்களிடம் கேட்கின்றோம். கடந்த 75 ஆண்டு காலமாக செய்து வரும் இன அழைப்பு போதாதா? இன்னும் எவற்றையெல்லாம் செய்வதற்கு திட்டமிட்டுள்ளீர்கள்? தமிழர்கள் தங்களையும், தங்களுடைய அடையாளத்தையும், நிலத்தையும் பாதுகாக்க எத்தகைய போராட்டம் நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்? நாட்டின் தற்போதைய நிலைக்கு உங்களின் இனவாத யுத்தமே காரணம் என்பதை இன்னும் உணர மறுப்பதேன்? தற்போதைய சிவன் ஆலய சம்பவம் தேசத்திற்கான போராட்டத்தை இன்னும் கூர்மை அடையவே செய்யும்.

# வடமராட்சி கிழக்கின் நாகர்கோவில பகுதியில் சிறீலங்கா காவல்துறையினர் துப்பாக்கி சூடு நடாத்தியது!

மார்ச் 14, 2023

வடமராட்சி கிழக்கின் நாகர்கோவிலில் இரு தரப்புகளிடையே மயானம் தொடர்பாக ஏற்பட்ட கருத்து மோதல் நேற்று திங்கட்கிழமை துப்பாக்கி சூட்டு சம்பவமாக பதிவாகியுள்ளது.

இதனையடுத்து நாகர் கோவில் பகுதியில் காவல்துறை பாதுகாப்பு நடவடிக்கையில் குவிக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவிலில் மயானம் ஒன்றின் மதிலுக்கான அடிக்கல்



நடும் நிகழ்வு இன்று செவ்வாய் கிழமை நடை பெற திட்ட மிடப்பட்டிருந்தது.



இந் நிலையில் நிகழ்வுடன் தொடர்புடைய புலம்பெயர தேசத்திலிருந்து நாடு திரும்பிய உள்ளூர் பொதுமகன் ஒருவர் மீது நேற்றுமுன் தினம் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது. தாக்குதலில் காயமடைந்த அவர் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் தொடர்பில் பருத்தித்துறை சிறீலங்கா காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு அமைவாக நாகர்கோவில் பகுதிக்கு நேற்று மாலை காவல் துறையினர் விசாரணைக்குச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்களுடன் காவல்துறையினர் முரண்பட்டுள்ளனர். முரண்பாடு இறுதியில் கைகலப்பாக மாறியுள்ளது. கலவரத்தில் காவல்துறையினரின் தாக்குதலுக்கு இலக்காகி பல பேர் காயமடைந்துள்ளனர். நிலைமையைக் கட்டுப்படுத்த காவல்துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக ஊர்மக்கள் தெரிவிக்கின்றனர்.

பதற்றமான சூழ்நிலையில் அருகாக இருந்த இந்து ஆலய சப்பற கொட்டில் ஒன்றும் எரியூட்டப்பட்டுள்ளது.

# மனித உரிமைகள் ஆணைக்குழு அப்பட்டமாக பொய்யுரைத்துள்ளது

## பா.உ. சி. சிறிதரன்

மார்ச் 09, 2023

வடக்கு மாகாண மக்கள் உள்ளக பொறிமுறைக்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளமை அப்பட்டமான பொய்யாகும், ஆணைக்குழுவின் பொய்யான கருத்திற்கு இந்த உயரிய சபை ஊடாக கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த நாட்டில் நீதி இல்லை என்பதற்கு குருந்தூர் மலை விவகாரம் சிறந்த எடுத்துக்காட்டு இதனால் தான் பாதிக்கப்பட்ட எம்மவர்களுக்காக சர்வதேச நீதி பொறிமுறையை கோருகிறோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் புதன்கிழமை(08) இடம்பெற்ற கலால் சட்டம் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கடந்த பெப்பரவரி மாதம் வடக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு பல்வேறு தரப்பினரை சந்தித்து ஜனாதிபதியிடம் மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

வடக்கு மக்கள் உள்ளக பொறிமுறையிலான விசாரணையை ஏற்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அப்பட்டமான பொய்யை குறிப்பிட்டுளளதையிட்டு கவலையடைவதுடன், இந்த உயரிய சபை ஊடாக கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கை இராணுவத்தின் செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் உள்ளக பொறிமுறையை ஒருபோதும் ஏற்கவில்லை, ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை, கடந்த 40 ஆண்டு காலமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பல உரிமைகளை இழந்துள்ளார்கள், ஆகவே வெளியக பொறிமுறை ஊடாகவே சிறந்த ஏற்றுக்கொள்ள கூடிய தீர்மானத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நாட்டில் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்து தமது உரிமைக்காக போராடிக் கொண்டிருக்கும் நிலையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அப்பட்டமான முறையில் அரசாங்கத்திற்கு சார்பாக அறிக்கை சமர்ப்பித்துள்ளமை மிக மோசமான தன்மையை வெளிப்படுத்தியுள்ளது, இதற்கு எமது கடும் கண்டனத்தை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம்.

2022 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 51.1 பிரேரணை ஊடாக உள்ளக பொறிமுறை விசாரணையை தாம் எதிர்ப்பதாக இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.இலங்கை விவகாரத்தில் சர்வதேசத்தை ஏமாற்றும் தன்மையில் தான் அரசாங்கம் செயற்படுகிறது.

யுத்தக் குற்றங்கள் ஏதும் இலங்கை இராணுவம் செய்யவில்லை என்றால் இலங்கை ஏன் சர்வதேச விசாரணைக்கு அச்சமடைகிறது. மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை செய்த தரப்பினர் நீதிபதியாக இருந்து செயற்படும் போது எவ்வாறு நியாயத்தை பெற்றுக்கொள்ள முடியும்.



இந்த நாட்டில் நீதி என்பதொன்று கிடையாது. இதற்கு சிறந்த உதாரணமாக குறுந்தூர் மலை விவகாரத்தை குறிப்பிட முடியும். குறுந்தூர் மலையில் விகாரை அமைக்கும் பணிகளுக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ள போதும் ஒரு தரப்பினர் நீதிமன்ற தீர்மானத்துக்கு எதிராக செயற்படுகிறார்கள், ஆகவே இந்த நாட்டில் எவ்வாறு உரிமை இழந்த தமிழ் மக்கள் நியாயமான தீர்வை பெற்றுக் கொள்ள முடியும், இதன் காரணமாகவே சர்வதேச நீதி பொறிமுறையை கோருகிறோம் என்றார்.

# தமிழர் உரிமைகள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன!

## பா.உ. கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

மார்ச் 09, 2023

நல்லிணக்கவாதியாகவும் சமாதானத்தை கர்த்தாவாகவும் தன்னை உலகுக்கு வெளியில் காட்டிக்கொள்ள ஜனாதிபதி முயற்சித்தாலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் உரிமைகள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுகின்றன.

நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் உண்மை நோக்கம் ஜனாதிபதிக்கு கிடையாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) இடம்பெற்ற கலால் சட்டம் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டார்,

கடந்த அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தினால் நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. பொருளாதார முன்னேற்றத்திற்காக ஏனைய நாடுகளை நாட வேண்டிய நிலை தோற்றம் பெற்றுள்ளது.

இந்தப் பின்னணியில் அரசாங்கம் கடனளிப்பவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளது. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் தனது அரசியல் இருப்பை வலுப்படுத்திக் கொள்ளும் முயற்சிகளை ஜனாதிபதி முன்னெடுத்துள்ளார்.

ஜனாதிபதி தனது நற்பெயரை மேன்படுத்த முயற்சிக்கின்றார். கடந்த முறை அவர் நல்லிணக்கம் தொடர்பில் இனப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாகவும் கூறினார்.

அனைத்து கட்சி மாநாட்டையும் நடத்தி சமாதானத்தை ஏற்படுத்துவபர் போன்று செயற்பட்டார். ஆனால் உண்மையில் அதற்கு எதிரான வகையிலேயே செயற்பாடுகள் நடக்கின்றன. இப்படியிருக்கையில் வெளியில் நல்லிணக்கவாதியாக அவர் தன்னைக் காட்ட முயற்சிக்கின்றார்.

காலனித்துவ ஆட்சி காலத்தில் புராதன இடமாக அடையாளம் காணப்பட்ட இடம், மீண்டும் கட்டியெழுப்பப்படுகின்றது.

இராணுவத்தினர் தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து மறைமுகமான திட்டங்களை மேற்கொள்வதாக கருதுகின்றோம். குரூந்தூர்மலையில் எந்தவித நிர்மாணங்களுக்கும் நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

எனினும் அதனையும் மீறி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இங்கு பௌத்த விகாரை அமைக்கப்படுகின்றது. ஆனால் பௌத்தர்கள் அங்கு இல்லை.

மறுபுறம் மட்டக்களப்பில் மயிலத்தமடுவில் கால்நடை மேய்ச்சல் நிலமாக அடையாளம் காணப்பட்ட இடங்களாக 2010 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டது. அமைச்சரவை பத்திரம் ஊடாக அது அடையாளப்படுத்தப்பட்டது. தமிழ் முஸ்லிம் மக்கள் பயன்படுத்துகின்றனர்.

ஆனால் இன ரீதியில் இதனை பிரிக்கின்றனர். மாதுறு ஓயா வலது கரையில் இருக்கும் மக்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். இந்த பிரதேசங்களில் வாழும் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்படுகின்றனர். இதனை நிறுத்த வேண்டும்.



ஜனாதிபதி முழு உலகுக்கும் சமாதான ஏற்பாட்டாளராக கட்டும் வேளையிலேயே இவ்வாறான சம்பவங்கள் நடக்கின்றன. இதேவேளை யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கின்றனர்.

யாரென்றே தெரியாதவர்கள் அங்குள்ள ஏரிகளில் பண்ணைகளை நடத்தும் நிலைமை காணப்படுகின்றது. மீன்பிடிக்கென அமைச்சர் இருக்கின்றார். வெளிநாட்டு கடற்றொழிலாளர்கள் அங்கு வந்து மீன்பிடிக்க முடியும் என்று கூறுகின்றார். இவ்வாறான நடவடிக்கைகளை நாங்கள் கண்டிக்கின்றோம்.

இதேவேளை இனவாத நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. வெளிநாட்டு நிறுவனங்கள் உதவிகளை வழங்கும் போது, அவர்கள் வழங்கும் பணம் இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பயன்படுத்தப்படும் என்று அறிவிக்க வேண்டும் என்றார்.

# யாழ். பல்கலைக்கழக மாணவர் சமூகம் முன்வைத்த கோரிக்கைகள்!

மார்ச் 12, 2023




யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினருக்கும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினருக்கு மாகிய விசேட கலந்துரையாடல் இன்றைய தினம் யாழ் நகரில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

இதன் பொழுது அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் பயங்கரவாத தடைச்சட்டத்தினை முன்னிலைபடுத்திய போராட்டம் மற்றும் எதிர்காலத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துடன் இணைந்து செயற்படவேண்டும் என்று கோரிக்கை யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்திடம் முன்வைக்கப்பட்டது.

இந்நிலையில் தமிழ் மக்களின் பிரச்சின என்பது தனியே எரிவாயு அடுப்பு, மின்சாரம் என்பனவற்றுக்குள் எமது கோரிக்கைகள் உள்ளடங்கவில்லை மாறாக பயங்கரவாத தடைச் சட்டம் என்பதும் எமது தமிழ்மக்களின் பிரச்சினைகளில் ஒரு பகுதியாகவே இருக்கின்றது வசந்த முதலிகே ஆறுமாத காலம் பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட பின்னர்தான் இது குறித்து ஆழமாக நீங்கள் பார்க்கின்றீர்கள் ஆனால் எமது யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் காணாமலாக்கப்பட்டும் சுட்டுபடுகொலையும் செய்யபட்டுள்ளார்கள்.ஆக போராட்டம் என்பது எமக்கு புதிதல்ல குட்டிமணி, தங்கதுரை பயங்கரவாத தடைச் சட்டம் சிங்களவருக்கும் எதிராக திசைமாறும் போது சிங்களவர்கள் புரிவார்கள் என்று அன்று கூறியது இன்று நிச்சயமாகியுள்ளது. ஆக எமது பிரச்சினைகளை தெற்கிற்கு கொண்டு சென்று இனி போராட்டங்களின் போது இதனை முன்னிலைபடுத்துகின்ற பொழுது எமது நிலைப்பாடுகள் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துடனான உறுவு நிலைகளை ஆரோக்கியமாக்கும் என தெரிவித்திருந்தோம்.

இந்நிலையில் எதிர்காலத்தில் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் எமது தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் குறித்து பல்கலைக்கழக மாணவர்களிடையே தெளிவுபடுத்தல்களை மேற்கொள்வதற்கும் சிங்கள நகரங்களில் சிங்கள மக்கள் மத்தியில் கவனயீர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் எதிர்காலத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் அனைத்தா பல்கலைக்கழகத்திற்கும் வருகை தந்து புரிதலை ஏற்படுத்தவேண்டும் எனவும் இதே நிலையில் இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்பு யுத்தமே பொருளாதார நெருக்கடிக்கு காரணமா எனவினவிய பொழுது அது பிரதான காரணியாக தாம் ஆமோதிப்பதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில் கருத்து தெரிவித்த எமது பிரதிநிதிகள் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் மாணவர்களிடையை தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் குறித்து புரிதலை ஏற்படுத்தும் செயற்திட்டத்தை வரவேற்கின்றோம் இதே நேரம் முறைமையான கலந்துரையாடல் ஒன்றை யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாக எடுத்து அதன் பின்னர் தொடர்ச்சியாக தமிழ் மக்களின் அபிலாசைகளை அடிப்படை பிரச்சிகனைகளுக்கு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குரல் கொடுக்கின்ற பொழுது அது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று எனவும் மாணவர்களுக்கூடாகவே நாட்டின் பிரச்சினைகளை தீர்கமுடியும் அந்த அடிப்படையில் சிங்கள மாணவர்களின் தெளிவுபடுத்தலுக்காக பின்வரும் விடயமும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கு கையளிக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமது உரிமைக்காக கடந்த 70 வருடங்களுக்கு மேலாக அகிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் போராடினர். தமிழ் மக்களின் உரிமை போராட்டத்தினை பயங்கரவாதமாக தெற்கில் சிங்கள மக்களிடத்திலும், சர்வதேசத்தின் மத்தியிலும் சித்தரித்த சிறீலங்கா அரசானது இலட்சக்கணக்கான தமிழ் மக்களை படுகொலை செய்து, கொடுங்கோல் அடக்குமுறை இராணுவத்தினால் தமிழர் தாயகம் எங்கும் ஆக்கிரமித்து உள்ளனர்.

இலங்கைத் தீவு பிரித்தானியாவின் காலனித்துவத்திலிருந்து விடுதலை அடைந்த காலம் முதல், ஈழத் தமிழர்களாகிய நாங்கள் எமது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி சாத்வீக முறை போராட்டங்களை மேற்கொண்டு வந்தோம். இப்போராட்டங்கள் வன்முறையினூடாக அடக்கப்பட்டதினால், ஆயுதப் போராட்டத்தினை முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டோம். தமிழ் மக்களின் தேசிய ஆயுதப் போராட்டம் சிறீலங்கா பேரினவாத அரசினால் கொடுங்கரம் கொண்டு மிகப் பெரும் மனிதப் பேரழிப்பினூடாக முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டது. இந்த இறுதியுத்தத்தின் போது இறுதி ஆறு மாதங்களில் மட்டும் எழுபதினாயிரத்துக்கு (70,000) மேற்பட்ட எமது உறவுகள் கொல்லப்பட்டதை ஐநா செயலாளர் நாயகத்தின் உள்ளக மீளாய்வுக்குழுவின் 2012 கார்த்திகை மாத அறிக்கையில் தெரிவித்துள்ளார். கைக் குழந்தைகள், சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். 2017 ஆம் ஆண்டு மாசி மாதம் உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேசக் கருத்திட்டமானது (ITJP), தமிழ்ப் பெண்கள் “பாலியல் அடிமைகளாக” கையாளப்பட்டு இலங்கை இராணுவத்தினரால் நடாத்தப்பட்ட “பாலியல் வன்முறை முகாங்கள்” பற்றிய விபரங்களை ஐ.நா விடம் கையளித்தது. ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் 2013 சித்திரை மாதத்திற்குரிய அறிக்கைக்கு அமைவாக, தமிழர் தாயகத்தில் 90,000 க்கும் மேற்பட்ட யுத்தமூல விதவைகள் உள்ளனர். இவ்வாறு நீண்ட நெடிய காலமாக இனவழிப்புக்கு உள்ளாகிக்கொண்டிருக்கும் எமதினதிற்கான நீதி தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றது.

யுத்தம் நிறைவடைந்து கடந்த பதினொரு ஆண்டுகளில் வடக்கு-கிழக்கை இராணுவ மயமாக்கிவரும் சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் கலாசார, பண்பாட்டு அடையாளங்களை அழிப்பதுடன் வடக்கு-கிழக்கு பூர்வீக குடிகளான தமிழர்களின் இனப்பரம்பலில் மாற்றத்தை உருவாக்கி, தமிழ்த் தேசியத்தைச் சிதைவடையச் செய்து, அவர்களது இருப்பை இல்லாமல் செய்வதற்காக பல வகையிலும் கட்டமைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. இதன் அடிப்படையில் தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம், நிலவள திணைக்களம், பௌத்த சாசன அமைச்சு மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக பௌத்த மயமாக்கல், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை சிறீலங்கா அரசாங்கமானது முனைப்போடு நடைமுறைப்படுத்தி வருகிறது. வடக்கு-கிழக்கில் உள்ள சுமார் 200ற்கும் மேற்பட்ட தொன்மை வாய்ந்த தமிழ் ஆலயங்களை கையகப்படுத்துவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகிறன. அத்துடன் தமிழர் தாயகம் எங்கிலும் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டும், தொடர்ந்தும் அமைக்கப்படுவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

இன்று பொருளாதார பிரச்சனையாலும், சிறீலங்கா அரசின் அடக்குமுறையாலும் பாதிக்கப்பட்டுள்ள தென்பகுதி சிங்கள தரப்பினர், தற்போது வடக்கு கிழக்கு தமிழ் மக்களை அணுகத்தொடங்கி உள்ளார். அவ்வாறு அணுகும் எந்த தரப்பினரும் தமிழ் மக்களின் இனப்பிரச்சனையின் அடிப்படைகளை புரிந்துகொள்ளவதுடன் பின்வரும் விடயங்களில் தமது உறுதியான நிலைப்பாட்டினை வெளிப்படுத்த வேண்டும்.

1. வடக்கு கிழக்கை தாயகமாக கொண்ட தமிழ் மக்கள் தனித்துவமான மொழி, மதம், கலாச்சார அடையாளங்களை கொண்ட தனித்துவமான தேசிய இனம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2. ஒன்றிணைத்த வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய மரபுவழி தாயகம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

3. தமிழினம் தன்னாட்சிக்கு உரித்துடையவர்கள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

4. தேசிய இனத்துக்குரிய சுயநிர்ணயம், தமிழினமும் உரித்துடையது என்பதை ஏற்றுக்கொள்வதுடன், அதன் வழி தமது அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் உரிமையும் அவர்களுக்குண்டு என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

5. தமிழினம் தமது அரசியல் தலைவிதியை தீர்மானிக்க, சர்வதேசத்தினால் நடாத்தி கண்காணிக்கப்படும் சர்வஜன வாக்கெடுப்பினுடாக சந்தர்ப்பம் வழுங்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

6. தமிழினத்தின் மீது காலகாலமாக நிகழ்த்தப்பட்ட இனவழிப்பு, இனப்டுகொலை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி பொறிமுறையினுடாக நீதி வழுங்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

7. தமிழர் தாயகத்தில் நிலைகொண்டுள்ள சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

8. ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழரின் நிலங்கள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

9. சிறீலங்கா அரசியல் அமைப்பின் 6ம் திருத்தச் சட்டம் நீக்கப்பட்டு தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசையை வெளிப்படுத்தும் அரசியல் வெளி ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

10. பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட்டு, நீண்டகாலம் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் உடனடியாக எவ்வித நிபந்தனைகளுமின்றி விடுவிக்கப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேற்படி விடையங்கள் தீர்க்கமான வெளிப்படுத்தலை வெளியிடும் இடத்தேதான் இனப்பிரச்சனைக்கு நிரந்திர தீர்வையும் அதன்வழி பொருளாதார பிரச்சனைக்கு ஓர் தீர்வையும் எட்ட முடியும்.

இதன் பொழுது அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய தலைவர் அழகராசா விஜய குமார், யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் ஜெல்சின், திறந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் றிபாத், தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் திலான், ரஜரட்ட பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய தலைவர் அசான், ஜெயவர்த் தனபுர, கொழும்பு, இணைப்பாளர் பிரசாந், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவு மேற்குப் பகுதியில் பௌத்த தாதுகோபுரத்தின் எச்சங்களை சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பின் தொடக்கமாக சிங்கள பௌத்த பேரினவாதம் கையிலெடுப்பு!

மார்ச் 14, 2023



யாழ்ப்பாணம் நெடுந்தீவு மேற்குப் பகுதியில் சிதை வடைந்த நிலையில் காணப்படும் புராதன வெடியரசன் கோட்டைப் பாகங்களை பௌத்த தாதுகோபுரத்தின் எச்சங் களாக நிறுவுவதற்கான நடவடிக்கைகள் நெடுந்தீவில் முனைப்புடன் இடம்பெற்று வருகின்றன.

இந்தக் கோட்டையின் வரலாற்றை திரிபுபடுத்தும் நோக் குடன் நெடுந்தீவு மாவிலி இறங்குதுறையிலும் கோட்டை காணப்படும் இடத்திலும் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் இந்தப் புராதன கோட்டையின் பாகங்கள் பௌத்த தாது கோபுரத்தின் எச்சங்கள் என திடீரென விளம்பரப் பலகைகள் முளைத்துள்ளன.

இந்த விளம்பரத்தில் 'பல்வேறு தொல்பொருள் கலைப் பொருட்கள் தீவில் உள்ளன. மற்றும் பழங்கால மதிப்புள்ள மூன்று ஸ்தூபிகள்(கோபுரம்) இங்கு காணப்படுகின்றன. இந்தத் தூபிகள் வெவ்வேறு அளவுகளில் உள்ளன. மிகப் பெரிய தூபியின் கல்லறையில் மூன்று கல்வெட்டுகள் காணப்பட்டன.'

'பெரிய தூபியின் விட்டம் 13.54 மீற்றர். அதன் சுற்றளவு 31.93 மீற்றர். கல்வெட்டுகளில் ஒன்று பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. பிராமி கல்வெட்டு கி.பி. 1-2 நூற்றாண் டுக்கு முற்பட்டது என்றும் சிங்கள பிராகிருதத்தில் எழுதப் பட்டது என்றும் கல்வெட்டு நிபுணர்கள் நம்புகின்றனர்' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த விளப்பரப் பலகையில் 'பௌத்த இடிபாடு









களைக் கொண்ட இந்தத் தளம் டெல்ஃப்ட் தீவின் (நெடுந்தீவு) புராதன பௌத்த தளம். இது கி.மு. 2 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது. பெரிய தூபி பவளக்கல்லால் ஆனது. ஏனைய இரு ஸ்தூபிகளும் கிழக்கு மேற்காக அமைந்துள்ளன.' என குறிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தப் புராதன தளமானது வெடியரசன் மன்னனின் வரலாற்றுடன் தொடர்புடையது எனவும் இவை குறித்த வரலாற்றுப் பதிவுகள் பல்வேறு புராதன தமிழ் ஆவணங்களில் காணப்படுவதாகவும் தெரிவித் துள்ள சமூக ஆர்வலர்கள் இந்த நடவடிக்கை திட்டமிட்ட வகையில் தமிழ் வரலாற்றை திரிபுபடுத்தும் பௌத்த ஆக்கிரமிப்பு எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும் விளம்பரப்படுத்தலுக்காக பிரதேச சபை அனுமதி பெறப்பட்டதா? விளம்பரப் பலகைகள் நாட்டப்பட்டமை குறித்து உரிய அதிகாரிகள் இதுவரை கவனம் செலுத்தாது இருப்பது ஏன் எனவும் நெடுந்தீவு மக்கள், சமூக ஆர் வலர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இந்தப் பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளை வடக்கில் உள்ள வரலாற்றுப் பேராசிரியர்கள், பல்கலைக்கழக சமூகம், புத்திஜீவிகள் விரைந்து தடுத்து நிறுத்த முன்வர வேண்டும் என நெடுந்தீவு மக்கள் கோரியுள்ளனர்.




# டிக்டாக் செயலி தொடர்பில் கனடா அரசு வெயிட்ட அறிவிப்பு!

மார்ச் 01, 2023

அதிகாரப்பூர்வ சாதனங்களில் இருந்து டிக்டாக் செயலி நீக்கப் படுவதாக கனடா அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இணையப் பாதுகாப்பு குறித்து கேள்வி எழுந்துள்ளதால் குறுகிய வடிவ வீடியோ பயன்பாடான டிக்டாக் செயலியை அதிகாரப்பூர்வ மின்னணு சாதனங்களிலிருந்து நீக்கப்படுவதாக கனடா அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியாகி உள்ள சி.என்.என். அறிக்கையின் படி, "டிக்டாக் செயலியை அதிகாரப்பூர்வ மின்னணு சாதனங்களி லிருந்து நீக்கப்படுவதாகவும், டிக்டாக் செயலிக்கான தடை இன்று (செவ்வாய்க்கிழமை) முதல் அமலுக்கு வருகிறது" என்றும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கனடா அரசு செயலகத்தின் கருவூல வாரியத்தின் அறிக்கையின்படி, அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சாதனங்கள் டிக்டாக் செயலியை பதிவிறக்குவதில் இருந்து தடுக்கப்படும். மேலும் பயன்பாட்டின் தற்போதைய நிறுவல்கள் அகற்றப்படும் என்றும் அதில் தெரிவித்துள்ளது.




# கனடாவில் ஆறு வயது கறுப்பின சிறுவன் மீது ஆசிரியரின் நிறவெறிச் செயல்!

மார்ச் 07 2023

கனடாவில் ஆறு வயதான சிறுவன் ஒருவன் ஆசிரியரினால் இன ரீதியான ஒடுக்கு முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆறு வயது சிறுவனை ஏனைய மாணவர்களுடன் சேர விடாது தனி அறையில் தடுத்து வைத்துள்ளதாக குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

ரொரன்டோவின் John Fisher Junior Public School பாடசாலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறுவன் மீத நிறவெறித் தாக்குதல் நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஆசிரியர், பாடசாலையின் அதிபர் மற்றும் துணை அதிபர் ஆகியோர் பாடசாலையை விட்டு வெளியேற் றப்பட்டுள்ளனர்.

தற்பொழுது குறித்த மூவரும் வீட்டிலிருந்தே கடமைகளை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆசிரியரின் செயற்பாடு கவலையளிப்பதாகவும், நம்ப முடியா துள்ளதாகவும் சிறுவனின் தாய் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களிலும் இவ்வாறு இன ரீதியான துன்புறுத் தல்களை தாமும் மகனும் பாடசாலை வளாகத்தில் அனுபவித் துள்ளதாக அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.




சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# கனடாவில் பொருட்கள் விற்பனை மொடர்பில் எழுந்த குற்றச்சாட்டு!

மார்ச் 08, 2023

கனடாவில் பொருட்கள் விற்பனை மூலம் அதிக லாபமீட்டுவதாக சுமத்தும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அறிவிக் கப்பட்டுள்ளது.

கனடாவில் இயங்கி வரும் முன்னணி மளிகைப் பொருள் விற் பனை நிறுவனங்கள் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளன.

பிரதான மளிகைப் பொருள் நிறுவனங்கள் மிக அதிகளவு லாபமீட்டுவதாக பரவலாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் பட்டிருந்தது.

பணவீக்கத்தை பயன்படுத்தி இவ்வாறு நிறுவனங்கள் கொள்ளை லாபமீட்டுவதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும், மிகவும் குறைந்தளவிலேயே லாபமீட்டுவதாக கனடா வின் முன்னணி மளிகைப் பொருள் விற்பனை நிறுவனங் களான எம்யார், லோப்லேவ் மற்றும் மெட்றோ ஆகிய நிறு வனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

மளிகை பொருள் நிறுவனங்கள் கூடுதல் இலாபமீட்டுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து நாடாளுமன்ற உறுப் பினர்கள் அந்த நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகளிடம் விசாரணை நடாத்தியிருந்தனர்.

உணவுப் பொருட்களுக்கான பணவீக்கம் உலகளாவிய ரீதியி லானது எனவும், தனிப்பட்ட ரீதியில் கனடாவில் மட்டும் விலை உயர்த்தப்படவில்லை எனவும் நிறுவனங்களின் பிரதம நிறை



வேற்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சிலிக்கன் வெலி வங்கியின் சொத்துக்களை முடக்கிய கனேடிய அதிகாரிகள்!

மார்ச் 13, 2023

கனடாவில் இயங்கி வரும் வங்கியொன்றின் சொத்துக்களை




அதிகாரிகள் முடக்கியுள்ளனர்.

சிலிக்கன் வெலி எனப்படும் வங்கியின் சொத்துக்கள் தற்காலிக அடிப்படையில் முடக்கப்பட்டுள்ளது.

கனேடிய வங்கி ஒழுங்குபடுத்தல் நிறுவனம் சிலிக்கன் வெலி வங்கியின் சொத்துக்களை முடக்கியுள்ளது.

சிலிக்கன் வெலி வங்கி அமெரிக்காவை மையமாக கொண்டு இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வங்கி நட்டமடைந்துள்ளதாக தெரிந்து கொண்ட பெரும் எண் ணிக்கையிலான வாடிக்கையாளர்கள் பெருமளவு பணத்தை மீளப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

வெளிநாட்டு வங்கியொன்றின் கிளை நிறுவனமாக சிலிக்கன் வெலி வங்கி கனடாவில் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.




வாடிக்கையாளர்களின் நலனை கருத்திற் கொண்டு வங்கியின் சொத்துக்களை முடக்கியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தமிழக செய்திகள்



# சிறீலங்கா தூதரகத்தை முற்றுகையிட்ட மே17 இயக்கத்தினர்!

பெப்ரவரி 28, 2023

சிறீலங்கா தூதரகத்தை முற்றுகையிட்டு மே 17 இயக்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.




தரங்கம்பாடியை சேர்ந்த 6 மீனவர்களை எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி சிறீலங்கா கடற்படையினர் சில நாட்களுக்கு முன்பு கடும் தாக்குதல் நடத்தினர். இரும்பு ரோப் கொண்டு தாக்கி உள் காயம் ஏற்படுத்தியுள்ளனர். மேலும் படகில் இருந்த இன்ஜின், ஜிபிஎஸ், தூண்டில், பேட்டரி ஆகியவற்றை எடுத்து சென்றனர். காயமடைந்த மீனவர்கள் தற்போது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் மீனவர்களை எல்லை கடந்து இலங்கை இராணுவம் தாக்கியதாக குற்றம்சாட்டிய மே 17 இயக்கம் இலங்கை தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை அறி வித்தது. அதன்படி, சென்னை நுங்கம்பாக்கத்தில் இன்று இலங்கை தூதரகம் அருகே திருமுருகன் காந்தி தலைமையில் மே 17 இயக்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, தரங்கம்பாடி, காரைக்கால் மீனவர்களை எல்லை கடந்து தாக்கிய சிறீலங்கா மீது சர்வதேச நீதிமன்றத்தில் வழக் குப்பதிவு செய்ய வேண்டும் எனவும், மீனவர்கள் தாக்குதல் நடத்திய இலங்கையுடன் கூட்டு இராணுவப் பயிற்சி செய்யும் ஒப்பந்தத்தை மத்திய அரசு இரத்து செய்ய வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உடனே இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர்.

# சிவகங்கை மாவட்டம் கொந்தகையில் அமைக்கப்பட்டுள்ள கீழடி அருங்காட்சியகம்!

மார்ச் 06.02023

சிவகங்கை மாவட்டம் கொந்தகையில் கீழடி அருங்காட் சியகத்தை முதல்வர் ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். உடன் அமைச்சர்கள்.






சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அடுத்த கொந்தகையில் செட்டிநாடு கலைநயத்துடன் ரூ.18.80 கோடியில் அமைக்கப் பட்டுள்ள கீழடி அருங்காட்சியகத்தை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள கீழடி, கொந்தகை, அகரம், மணலூரில் நடந்த 8 கட்ட அகழாய்வுகள் மூலம் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் கொந்தகையில் கீழடி அருங்காட சியகம் (அகழ்வைப்பகம்) அமைக்கப்பட்டுள்ளது. செட்டிநாடு கலைநயத்துடன் ரூ.18.80 கோடியில் கட்டப்பட்டுள்ள இந்த அருங்காட்சியகத்தை முதல்வர் ஸ்டாலின் நேற்று மாலை திறந்து வைத்தார். பின்னர், ஒருமணி நேரத்துக்கும் மேலாக தொல்பொருட்களை ஆர்வத்துடன் பார்வையிட்டார்.

இந்த விழாவில், அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, சாத்தூர் ராமச்சந்திரன், மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், பெரியகருப்பன், எ.வ.வேலு, சக்கரபாணி, ராஜ கண்ணப்பன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, எம்.பி.க்கள் கார்த்தி சிதம்பரம், சு.வெங்கடேசன், தலைமைச் செயலர் இறையன்பு, முதல்வரின் தனிச் செயலர் உதயச்சந்திரன், சிவகங்கை ஆட்சியர் பி.மதுசூதன்ரெட்டி, எம்எல்ஏக்கள் தமிழரசி, காதர் பாட்சா முத்துராமலிங்கம், மாங்குடி, கோ.தளபதி, தமிழக தொல்லியல் துறை இயக்குநர் சிவானந்தம் ஆகியோர் பங் கேற்றனர்.



**6 காட்சிக் கூடங்கள்**

அகழ் வைப்பகத்தில் அமைக்கப்பட்டுள்ள 6 காட்சிக் கூடங் களில், பழங்கால மனிதர்களின் வாழ்வியலை சித்தரிக்கும் வகையிலான ஓவியங்கள், வைகை கரையில் வாழ்ந்த மக்களின் வேளாண்மை, நீர் மேலாண்மை குறித்து விளக்கும் தொல்பொருட்கள், பழங்காலத்திலேயே தமிழ்ச் சமூகம் எழுத் தறிவு பெற்று வாழ்ந்ததற்கான சான்றுகளாக உள்ள தொல் பொருட்கள், இரும்பு, நெசவு, கைவினைத்தொழில்கள், கடல் வணிகம் செய்ததற்கான தொல்பொருள் சான்றுகள், கலை சார்ந்த தொல்பொருட்கள் இடம்பெற்றுள்ளன.

www.sangathamil.ca

# “பிரபாகரன் எப்போது வருவார் என்பதை அவர்தான் தீர்மானிப்பார்!”

**[“ஆனந்த விகடன்” இதழுக்கு பழ. நெடுமாறன் அளித்த நேர்காணல்]**

மார்ச் 01, 2023

‘விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் உயிரோடு இருக்கிறார். விரைவில் வெளியே வருவார்’ என்று தெரிவித்திருக்கிறார். உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன். 2009இல் இறுதிப் போரில் பிரபாகரன் கொல்லப்பட்டார் என்று இலங்கை இராணுவம் அறிவித்த காலத்தில் இருந்தே, இக்கருத்தைத் தெரிவித்து வரும் பழ. நெடுமாறன், ‘இப்போது காலம் கனிந்திருக்கிறது. விரைவில் பிரபாகரன் ஒரு அரசியல் செயல்திட்டத்தோடு வெளியில் வருவார்’ என்று அறிவித்திருக்கிறார். உலகெங்கும் இது பேசு பொருளாகியிருக்கிறது. இச் சூழலில், பழ. நெடுமாறனிடம் உரையாடினேன்.

**“பிரபாகரன் இறுதிப்போரில் கொல்லப்பட்டதற்கு டி.என்.ஏ. முடிவு உட்பட பல ஆதாரங்கள் தங்களிடம் இருப்பதாக இலங்கை இராணுவம் சொல்கிறது. தற்போது உயிரோடிருக்கும் பிரபாகரனுக்கு நெருக்கமான போராளிகளேகூட நீங்கள் சொல்வதை ஏற்கவில்லை. எந்த அடிப்படையில் இப்படிச் சொல்கிறீர்கள்?**

“65 ஆண்டுக் காலப் பொது வாழ்க்கையில் ஆதாரம் இல்லாமல் எதையும் சொன்னதில்லை. பிரபாகரன் இறக்கவில்லை என்று அப்போதும் சொன்னேன். இப்போதும் சொல்கிறேன். சிங்கள அரசு தொடர்ந்து பொய் பரப்புகிறது. 1984, செப்டம்பர் 5ஆம் தேதி சிங்களப் படையால் பிரபாகரன் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றார்கள். இரண்டே நாள்களில் அந்தச் செய்தி பொய்யானது. 1989சூலை 25ஆம் தேதி, பிரபாகரனுக்கும் மாத்தையாவுக்கும் நடந்த மோதலில் பிரபாகரன் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று இந்தியப் பத்திரிகைகளும்கூட செய்தி வெளியிட்டன. அதுவும் இரண்டே நாள்களில் பொய்த்துப்போனது. சுனாமி நேரத்திலும் இப்படிச் சொன்னார்கள். அதுவும் பொய்யானது. 2007 டிசம்பர் 15ஆம் தேதி சிங்கள விமானப்படைத் தாக்குதலில் பிரபாகரன் படுகாயமடைந்ததாகவும், பிழைக்க வாய்ப்பில்லை என்றும் இலங்கைப் பாதுகாப்புத்துறை அறிவித்தது. அந்தச் செய்தியும் வழக்கம்போலவே பொய்யானது.

2009மே 17ஆம் தேதி முள்ளிவாய்க்கால் இறுதிக்கட்டப் போரில் பிரபாகரனும் முக்கியத் தளபதிகளும் கொல்லப்பட்டதாகச் சிங்கள இராணுவம் அறிவித்தது. பிரபாகரன் என்று அடையாளம் காணப்பட்ட ஒரு உடலை எடுத்துச் சென்று ஆய்வு செய்து வருவதாக சிங்கள இராணுவ அதிகாரி ஒருவர் சொன்னார். இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் உதய நாணயக்கார உடனடியாக இதை மறுத்தார். ஆனால் மறுநாளே, பிரபாகரன் இறந்துவிட்டதாகவும் பிரபாகரன், பொட்டு அம்மான் உடல்கள் கிடைத்தன என்றும் சொன்னார். அந்த உடல்களுக்கு மரபணு சோதனை செய்தபிறகு உறுதிப்படுத்தப்படும் என்று அறிவித்தார். 11மணிக்கு அவர் இதைச் சொல்ல, 12.15 மணிக்கு மரபணு சோதனை மூலம் அது பிரபாகரன் உடல்தான் என்று உறுதி செய்துவிட்டதாக இராணுவத் தளபதி பொன்சேகாவும் இலங்கை அரசும் அறிவித்தார்கள். ஒருமணி நேரத்துக்குள் டி.என்.ஏ. சோதனை நடத்தி முடிவு அறிவிக்கும் தொழில்நுட்பம் எங்குமே இல்லை.

இறுதிப்போரின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் கூட்டப்பட்ட இலங்கை நாடாளுமன்றக் கூட்டத்திலும் அதிபர் இராசபக்சே பிரபாகரன் கொல்லப்பட்டது பற்றி எதுவும் பேசவில்லை. உண்மையில் பிரபாகரன் இறந்திருந்தால் அவரது உடலைக் கொழும்புக்குக் கொண்டுவந்து சிங்கள மக்கள், வெளிநாட்டுத் தூதர்கள், சர்வதேசப் பத்திரிகையாளர்களின் பார்வைக்கு வைத்திருப்பார்கள். பொய்யான உடலைக் காட்டி அம்பலமாகிவிட்டால் என்னாவது என்பதால்தான் இராசபக்சே அவ்வாறு செய்யவில்லை.

இன்னொரு முக்கியச் செய்தி, மே 18வரை இறுதி யுத்தம் நடந்தது. மே 20ஆம் தேதி புலம்பெயர்ந்து தலைமறைவாக வாழும் கே.பி. எனப்படும் கே. பத்மநாபன் என்னைத் தொடர்பு கொண்டு, “பிரபாகரன் வீரமரணம் அடைந்துவிட்டதாகவும், உலகமெங்கும் உள்ள தமிழர்கள் ஒரு வாரம் துக்கம் கடைப்பிடிக்கவேண்டும்” என்று அறிவிக்கப்போவதாகவும் சொன்னார். நான் கடுமையாகக் கண்டித்தேன். “பிரபாகரனுக்கு ஏதாவது ஆகியிருந்தால் அவரோடு களத்தில் நின்ற தளபதிகளோ புலிகள் அமைப்பின் உயர்மட்டக் குழுவோ அதை அறிவித்திருப்பார்கள். போர்க்களத்தில் இல்லாத நீங்கள் எந்த அடிப்படையில் இதைச் சொல்கிறீர்கள் என்று கேட்டேன்?” “ஐயா! நீங்களே என்னை நம்பாவிட்டால் நான் என்ன செய்வது?” என புலம்பினார். “நம்பும்படி நீங்கள் எதையும் கூறவில்லை” என்று நான் பதிலளித்தேன். ஆனாலும் அவர் பிரபாகரன் மறைவுக்கு துக்கம் கொண்டாடும்படி அறிவித்தார். உலகின் எந்த நாட்டிலும் தமிழர்கள் துக்கம் கடைப்பிடிக்கவில்லை. கே.பி. இந்திய ‘ரா’ உளவுத்துறையின் பிடியில் இருந்தவர். மலேசியாவில் வைத்து சிங்கள உளவுப் பிரிவிடம் அவரை ‘ரா’ ஒப்படைத்தது. இப்போதும் கே.பி. சிங்கள அரசின் கண்காணிப்பில்தான் இருக்கிறார். உலகெங்கும் உள்ள ஈழத் தமிழர்களின் நம்பிக்கையையும் ஒற்றுமையையும் சிதைக்கவே பிரபாகரன் இறந்ததாகச் செய்தியைப் பரப்பினார்கள். பிரபாகரன் உயிரோடிருக்கிறார் என்பதே உண்மை”.

**“பிரபாகரனோடு நெருக்கமான தொடர்பில் இருந்தவர் நீங்கள். பாலச்சந்திரன் கொலை, பல்லாயிரம் மக்கள் கொல்லப்பட்டதையெல்லாம் பார்த்த பிறகும் தலைமறைவாக இருக்கும் இயல்புடையவரா அவர்?”**

பிரபாகரனின் அண்ணன் மனோகரன் நார்வேயில்தான் இருக்கிறார். அவரிடம் ‘போர்’ முற்றிய கட்டத்திலாவது பிரபாகரன் பிள்ளைகளை உங்களிடம் அனுப்பி வைத்திருக்கலாமே’ என்று பத்திரிகையாளர்கள் கேட்டபோது, ‘என் மக்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் என்ன நேர்கிறதோ, அதுவே எனக்கும் என் குழந்தைகளுக்கும் நேரட்டும்’ என்று பிரபாகரன் சொன்னதாகச் சொன்னார். இறுதி யுத்த நேரத்தில் ஈழத்தில் இருந்த பெற்றோர் பற்றிக்கூட பிரபாகரன் கவலைப்படவில்லை. அவருக்குத் தன் பிள்ளையும் தம் மக்களின் பிள்ளையும் ஒன்றுதான். யுத்தக் களத்தில் எத்தனையோ தந்திரங்கள் கையாளப்படும். அதில் ஒன்றுதான் பிரபாகரன் அங்கிருந்து வெளியேற்றப்பட்டது. மூத்த தளபதிகள் கட்டாயப்படுத்தி அவரை அங்கிருந்து வெளியே அனுப்பி வைத்தார்கள். அதுதான் உண்மை”.

**“பிரபாகரன் யுத்தக் களத்திலிருந்து தப்பித்தார் என்றால் எந்த நாட்டிலாவது அடைக்கலம் கோரியிருக்க வேண்டும். இந்த 14 ஆண்டுகளில் அதுமாதிரி செய்தி எதுவும் வரவில்லையே?”**

“2009காலகட்டத்தில் சர்வதேச அரசியல் சூழல் புலிகளுக்கு எதிராகவே இருந்தது. அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதல் நடந்த பிறகு உலகம் முழுவதுமே நிலை மாறிவிட்டது. இந்தியா உட்பட 20க்கும் மேற்பட்ட நாடுகள் சிங்கள அரசுக்கு உதவிகள் செய்தன. அந்தக் காலகட்டத்தில் எந்த நாட்டிடமும் வெளிப்படையாக அடைக்கலம் கோரும் நிலை இல்லை. இன்று காலம் கனிந்திருக்கிறது. சர்வதேச சூழல் மாறியிருக்கிறது. இலங்கையில், இராசபக்சேவை ஆட்சி பீடத்தில் அமர வைத்துக் கொண்டாடிய மக்களே இன்று அவரை அகற்றியிருக்கிறார்கள். சிங்கள மக்களுக்கு இப்போதுதான் உண்மை புரிகிறது. இந்தியாவிலும் அரசியல் சூழல் மாறிக்கொண்டிருக்கிறது. இதுதான் தக்க சூழல். எல்லாவற்றையும் ஆலோசித்துத்தான் பிரபாகரன் உயிரோடு இருக்கும் செய்தியை இப்போது வெளியிட்டேன்.”

**“மத்திய அமைச்சர் முருகன் இலங்கையில் இருக்கும் போது பிரபாகரன் குறித்து அறிவிக்கிறீர்கள். பா.ச.க. தலைவர் அண்ணாமலையுடன் நெருக்கம் காட்டு கிறீர்கள். ‘நெடுமாறன் இந்திய உளவுப் பிரிவின் சதிக்குத் துணை போய்விட்டார்’ என்ற குற்றச்சாட்டுக்கு உங்கள் பதில்?”**




“அபத்தமான கேள்வி. இருந்தாலும் இந்தக் கேள்விக்குப் பதிலாக இன்னொரு வரலாற்றை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். வாஜ்பாய் தலைமையில் பா.ச.க. அரசு அமைந்திருந்த போது பாதுகாப்புத்துறை அமைச்சராக ஜார்ஜ் பெர்னாண்டஸ் இருந்தார். அவர்தான் பா.ச.க. கூட்டணிக்கு கன்வீனர். பல நெருக்கடியான காலகட்டத்தில் ஈழத் தமிழர்களுக்கு உதவியவர் அவர்தான். அப்போது இந்தியக் கடற்படையின் தலைமைத் தளபதியாக இருந்தவர் அட்மிரல் விஷ்ணு பகவத். “இந்தியாவின் கடற்கரையைப் பாதுகாக்க வேண்டியதுதான் இந்தியக் கடற்படையின் முக்கியமான பணியாகும். இலங்கை கடற்கரையையும் சேர்த்து பாதுகாக்க வேண்டிய அவசியமில்லை” என ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவரிடம் கூறினார். ஆனால் அவர் அதை மதிக்காமல் இலங்கைக் கடற்பரப்பையும் சேர்த்துப் பாதுகாத்த போது அவரைப் பதவி நீக்கம் செய்தார் ஜார்ஜ் பெர்னாண்டஸ். வெளியே போன விஷ்ணு பகவத், ‘பெர்னாண்டஸ் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுகிறார்’ என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டினார். ஆனால் பெர்னாண்டஸ் தன் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார். அப்போது பா.ச.க. அமைச்சரவையில் இருந்த பெர்னாண்டஸை இங்கிருந்த எல்லோரும் பாராட்டினார்கள். அப்போது ஒரு பேச்சு, இப்போது ஒரு பேச்சா?”

**“இன்னும் இராணுவ முற்றுகைக்குள்தான் ஈழத் தமிழ் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். உங்களுடைய அறிவிப்பு, அவர்களை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்காதா?”**

“நான் அப்படி நினைக்கவில்லை. பிரபாகரன் உயிரோடிருக்கிறார் என்ற அறிவிப்பு அவர்களை உற்சாகமாக்கியிருக்கிறது. அவர்களுக்குப் புதிய நம்பிக்கை பிறந்திருக்கிறது”

**“ஒருவேளை நீங்கள் சொல்வது போல பிரபாகரன் உயிருடன் இருப்பதாகவே வைத்துக்கொள்வோம். இன்றைய சூழலில் பிரபாகரன் என்ன செய்ய வேண்டும்? இந்திய அரசு என்ன செய்யவேண்டும்?”**

“பிரபாகரன் என்ன செய்யவேண்டும் என்பதை அவர்தான் முடிவெடுப்பார். அவர் என்ன முடிவெடுத்தாலும் உலகம் முழுவதும் இருக்கும் தமிழர்கள் அவர் பின்னால் நிற்போம். இந்தியாவைப் பொறுத்தவரை நான் சொல்ல விரும்புவது, ஈழத் தமிழர் பிரச்சனையும் இலங்கையில் சீனா காலூன்றுவதன் மூலம் இந்தியா எதிர்நோக்கும் அபாயமும் வேறு வேறு அல்ல. ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. ஒன்றின் தீர்வில்தான் இன்னொன்றுக்கான தீர்வு இருக்கிறது. தென்னிந்தியாவில் மட்டும் 700க்கும் மேற்பட்ட இராணுவத் தொழிற்சாலைகளும் தளங்களும் இருக்கின்றன. இவைகளை சீனா திபெத்திலிருந்து தாக்குவதைவிட, மன்னாரிலிருந்து தாக்குவது எளிதாகும். மற்றொரு அபாயமும் இந்தியமாக்கடலின் ஆதிக்கம் சீனாவின் கைக்குப் போய்விட்டால் இந்தியா மட்டுமல்ல, மேற்கு நாடுகளும் பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாகும். எனவே இந்தப் பிரச்சனையில் இந்தியா நன்கு சிந்தித்து ஈழத் தமிழர்களின் ஒத்துழைப்போடு சீன அபாயத்தை முறியடிக்க முன்வரவேண்டும்”.

**“இறுதியாக ஒரு கேள்வி... நீங்கள் சொன்னபடி, பிரபாகரன் எப்போது வருவார், எப்படி வருவார்?”**

“அதை அவர்தான் தீர்மானிப்பார். அவருக்குத்தான் அது தெரியும்!”

-நன்றி! – ஆனந்த விகடன் – 01-03-23


## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.**

**தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.**

**எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# ராஜீவ்காந்தி கொலை வழக்கில் 32 வருட சிறை வழக்கில் விடுதலையானவர்கள் 04 மாதங்காளாக தமிழ்நாடு சிறப்பு முகாமில் வாடுகின்றனர்!

மார்ச் 11, 2023

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 32 வருட சிறை வாழ்க்கைக்கு பின்னர், விடுதலை அளிக்கப்பட்ட இலங்கையை சேர்ந்த நால்வர் சிறப்பு முகாம் எனும் பெயரில் சிறையில் தொடர்ந்தும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நவம்பர் மாதம் 11ஆம் திகதி இவர்கள் விடுவிக்கப் பட்ட போதிலும், இந்திய குடியுரிமை உள்ளவர்கள் வெளியில் விடப்பட்டுள்ளனர்.

ஆனாலும், இலங்கையைச் சேர்ந்த முருகன், சாந்தன், ஜெயக்குமார் மற்றும் ரபார்ட் பயஸ் ஆகிய நால்வரும் அன்றைய தினமே வேலூர் சிறைச்சாலையில் இருந்து திருச்சி சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அவர்கள் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம் சிறப்பு முகாம் என கூறப்பட்டாலும், அது சிறைச்சாலையை விட மோசமான இடம் எனவும், அவர்கள் தடுத்து வைக்கப் பட்டுள்ள அறைகளை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட வில்லை எனவும் , காலைக்கடன்களை கூட அறைக்குள்ளையே கழிக்க கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள தாகவும், சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனையவர்களுடன் தொடர்பினை பேணாத வகையில் கடும் கட்டுப்பாட்டுடன் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

அது மாத்திரமின்றி விடுவிக்கப்பட்டவர்கள் இதுவரையில் வீட்டாருடன் தொலைபேசியில் உரையாடுவதற்கு கூட




அனுமதி வழங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை கடும் நோய்வாய்ப்பட்டுள்ள ராபர்ட் பயஸ் தனது உடல் நிலையையும் கருத்தில் கொள்ளாது தொடர்ந்து 3 நாட்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

இவர்களின் விடுதலை தொடர்பில் தமிழக முதல்வருக்கு பல மனுக்கள் கொடுத்த போதிலும் எந்த நடவடிக்கை இன்றி காணப்படுவதாகவும், தமிழக அரசியல்வாதிகளோ இலங்கை தமிழ் அரசியல்வாதிகளோ இதுவரையில் அவர்களின் விடுதலை தொடர்பில் ஆர்வம் செலுத்தவில்லை எனவும் அவர்களின் உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

"இந்திய சட்டம் அவர்களை மனச்சாட்சியுடன் விடுதலை செய்தாலும் அரசியல் கோரப் பற்கள் அவர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்கி அறைகளுக்குள் வைத்து கொல்வதே நோக்காக கொண்டு இயங்குகின்றன" என வும் குற்றம் சாட்டியுள்ளனர்.

# யாழ். கடற்பரப்புக்குள் 16 தமிழக மீனவர்கள் சிறீலங்கா கடற்படையினரால் கைது!

மார்ச் 12. 2023

யாழ்ப்பாணம் கடற்பரப்பரப்பிற்குள் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்ட 16 தமிழக கடற்தொழிலாளர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகம் – புதுக்கோட்டை மற்றும் நாகப்பட்டினம் பகுதிகளை சேர்ந்த கடற்தொழிலார்கள் இரு படகுகளில் எல்லை தாண்டி, கடற்தொழிலில் ஈடுபட்டு இருந்த வேளை இன்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் கடற்பரப்பில் நான்கு கடற்தொழிலாளர்களும், பருத்



தித்துறை கடற்பரப்பில் 12 கடற்தொழிலார்களும் கைது செய்யப் பட்டுள்ளதுடன், அவர்களின் படகுகளும் கைப்பற்றப்பட்டன

கைது செய்யப்பட்டவர்கள் மயிலிட்டித் துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டு மேலதிக நடவடிக்கைக்காக நீரியல் வளத் துறை திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

காரைநகர் கடற்பரப்பில் கைதான நால்வரையும் ஊர்காவற் துறை நீதவான் நீதிமன்றில், பருத்தித்துறை கடற்பரப்பில் கைதான 12 பேரையும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# நாகூர் கடற்கரையில் தொடரும் கச்சா எண்ணெய் கசிவு, மக்கள் போராட்டம்!

மார்ச் 11, 2023

நாகை – கடற்கரை அடியில் , கச்சா எண்ணெய் எடுக்கும் குழாய் உடைந்ததால், கடலில் கச்சா எண்ணெய் கலந்து வருகிறது. மேலும் சுற்றுச்சூழல் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது.

நாகை மாவட்டம் நாகூர் கடற்கரையில் சிபிசிஎல் (CPCL) நிறுவனம் சார்பில் கடலுக்கு அடியில் கச்சா எண்ணெய் எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் கடந்த 2ம் திகதி, கச்சா எண்ணெய் குழாயில் உடைப்பு ஏற்பட்டதால், குழாயிலிருந்து கச்சா எண்ணெய் வெளியேறி கடலில் கலந்துள்ளது.

இது காரணமாக கடல் பெரிதும் மாசடைத்த நிலையில், சுற்றுச் சூழல் சீர்கேடால் அருகில் உள்ள ஊர் மக்கள் கண்ணெரிச் சலால் பாதிப்படைந்தனர். மேலும் பல உபாதைகளுக்கு ஆளாகியுள்ளனர்.

இந்த நிலையில் உடைந்த குழாயை சரி செய்யும் பணியில் ஈடுபட்ட சிபிசிஎல் ஊழியர்கள், சரி செய்யப்பட்டதாக அறிவித்தனர். ஆனால் மறுநாள் மீண்டும் அதே இடத்தில் என்ன கசிவு ஏற் பட்டது.

இதையடுத்து சென்னையில் இருந்து வர வைக்கப்பட்ட குழுவினர் குழாய் சீரமைப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இதனிடையே கச்சா எண்ணெய் குழாயை நிரந்தரமாக அகற்றக்கோரி நாகூர், பட்டினச்சேரி மீனவர்கள் வேலை நிறுத்த போராட் டத்தில் ஈடுபட்டனர். மீனவர்களை மாவட்ட ஆட்சியர் அருண் தம்புராஜ் நேரில் சந்தித்து கச்சா எண்ணெய் கொண்டு செல்லும் குழாய் உடைப்பை சீரமைத்து விட்டதாகவும், மீனவர்கள் யாரும் அச்சம் கொள்ள தேவையில்லை என கூறினார்.

மேலும், மாவட்ட நிர்வாகம் சார்பில் மறு உத்தரவு வரும் வரை குழாயில் கச்சா எண்ணெய் கொண்டு செல்லும் பணியில் சிபிசிஎல் நிர்வாகம் ஈடுபட கூடாது என பொது மேலாளர் இடம் கூறி இருப்பதாக தெரிவித்தார். இந்த நிலையில் நேற்று மதியம் ஏற்கனவே உடைப்பு ஏற்பட்ட அதே இடத்தில் கச்சா எண்ணெய் குழாயில் 3வது முறையாக கசிவு ஏற்பட்டது. குழாயில் கச்சா எண்ணெய் செலுத்த மாவட்ட நிர்வாகம் தடை விதித்த நிலையில், இன்று பம்பிங் செய்ததால் வானுயரத்தில் கச்சா எண்ணெய் பீச்சி அடித்து கடலில் கலந்ததை பார்த்து அதிர்ச்சி யடைந்த மீனவர்கள் திரண்டுள்ளனர்.

இரண்டு முறை குழாய் உடைப்பு சரி செய்ததாக சிபிசிஎல் அறிவித்த நிலையில் இன்று மீண்டும் கசிவு ஏற்பட்டுள்ளது. இதனை எடுத்த சம்பவ இடத்தில் சென்ற வட்டாட்சியர் ராஜசேகர் உள்ளிட்ட அதிகாரிகள் கச்சா எண்ணெய் கசிவு குறித்து ஆய்வு செய்து வருகின்றனர்.

வரும் 16ம் திகதி குழாய் அப்புறப்படுத்தப்படுவதற்கான குழு அமைத்து ஆய்வு செய்த நிலையில் இந்த எண்ணெய் கசிவு பொது மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.








# சட்டவிரோதமாக படகில் பிரித்தானியா சென்று அரசியல் அந்தஸ்து கோரமுடியாது!

மார்ச் 05, 2023

சட்டவிரோதமாக சிறிய படகுகளில் பிரித்தானியாவிற்குள் செல்பவர்கள் அரசியல் அந்தஸ்தினை கோர முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவினால் விசா வழங்கப்படும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முதல் 5 இடத்துக்குள் உள்ளது.

2019ஆம் ஆண்டை விடவும், 2022ஆம் ஆண்டில் பிரித்தானிய வீசா பெற்றுக்கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1.3 மில்லியனாக அதிகரித்துள்ளதாக பிரித் தானியாவுக்கான புலம்பெயர் கண்காணிப்பகம் அண்மை யில் தகவல் வெளியிட்டிருந்தது.

தரவுகளின் அடிப்படையில், கல்விக்கான வீசாவில் குடும்ப உறுப்பினர்களுடன் செல்பவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், பிரித்தானியாவுக்கு பிரவேசிக்கும் சகலருக்கும் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியாது என புலம்பெயர் கண்காணிப்பகம் குறிப்பிட் டிருந்தது.

இந்த பின்னணியில் பிரித்தானியா தங்களது குடிவரவு மற்றும் குடியகல்வு கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்தநிலையில், புதிய திருத்தங்களுடன் இந்த விடயம் தொடர்பான சட்ட மூலம் அந்த நாட்டு உள்துறை செயலாளர் சுவெல்ல பிரேவமானினால் அடுத்த வாரம் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த செயல்பாட்டிற்கு அமைச்சர்கள் ஆதரவினை வழங்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

இந்தநிலையில், பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் தமது ஐந்து முன்னுரிமை நடவடிக்கைகளில், 'படகுகளை கட்டுப் படுத்தல்' என்ற விடயத்தையும் உள்ளடக்கியுள்ளார்.

சட்டவிரோதமாக பிரித்தானியாவிற்குள் வருபவர்கள் அங்கு தங்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.




இதேவேளை, பிரித்தானிய செஞ்சிலுவை சங்கம் இந்த திட்டம் மனிதாபிமான முறையில் எதிர்கொள்ள வேண் டியது என தெரிவித்துள்ளதுடன், அது கவலையளிக்கும் விடயம் எனவும் குறிப்பிட்டுள்ளது.

# உலகின் முன்னணியில் அறிவியல் வல்லரசாக சீனா!

மார்ச் 02, 2023

மேற்கத்திய நாடுகள் முக்கிய தொழில்நுட்பப் பகுதிகளில் மிகவும் பின்தங்கி இருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. புதிய அறிக்கையின் மூலம் உலகின் அறிவியல் வல்லரசாக சீனா முன்னணியில் உள்ளது.

பாதுகாப்பு, விண்வெளி, ஆற்றல் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற முக்கியமான 44 தொழில்நுட்பத் துறைகளில் 37 இல் சீனா உலகை முன்னிலைப்படுத் துவதாக ஆஸ்திரேலிய மூலோபாயக் கொள்கை நிறு வனத்தின் அறிக்கை கண்டறிந்துள்ளது.

ஆய்வு செய்யப்பட்ட மற்ற ஏழு முக்கியமான தொழில்நுட்பப் பகுதிகளில் முன்னணியில் உள்ளது அமெரிக்கா ஆனால் பட்டியலில் இரண்டாவது இடத்தில் சீனா உள்ளது.

அறிக்கையின்படி, சீனா பல்வேறு தொழில்களில் கணிச மாக அதிக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற் றங்களைச் செய்துள்ளது. இது எதிர்காலத்தில் மற்ற



நாடுகளையும் ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது.

நீண்ட காலத்திற்கு, சீனாவின் முன்னணி ஆராய்ச்சி நிலை என்பது, கிட்டத்தட்ட அனைத்து துறைகளிலும் தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சியில் மட்டுமல்லாமல், இன்னும் இல்லாத எதிர்கால தொழில்நுட்பங்களிலும் சிறந்து விளங்க தன்னை அமைத்துக் கொண்டது என்று அறிக்கை கூறியது.

தணிக்கப்படாமல், இது தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் கட்டுப்பாட்டை மட்டுமல்ல, உலகளாவிய சக்தி மற்றும் செல்வாக்கை ஒரு சர்வாதிகார அரசுக்கு மாற்றலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி மற்றும் அறிவியலில் முன்னணியில் இருக்கும் சீனா, தற்போதைய தொழில்களில் மட்டுமல்ல, இன்னும் கண்டுபிடிக்கப்படாத தொழில்நுட்பங்களிலும் முன்னணி யில் உள்ளது என்று அறிக்கையின் பின்னால் உள்ள சிந்தனை நன்றி கூறியது.

சீனாவின் முன்னணி ஆராய்ச்சி முன்னேற்றங்களை வணிக அமைப்புகளுக்கு மொழிபெயர்ப்பதற்கான வெற்றி கரமான உத்திகள் மற்றும் திறமையான உற்பத்தித் தளத் திற்கு அளிக்கப்படும் தயாரிப்புகள், சில முக்கியமான தொழில்நுட்பங்களின் உலகளாவிய விநியோகத்தில் சீனாவைக் கட்டுப்படுத்த அனுமதிக்கும் என்று அறிக்கை கூறியது.

# தடுப்பு முகாம்களில் உள்ள அகதிகளை உடனடியாக வெளியேற்றுங்கள்; ஆவுஸ்திரேலியாவை வலியுறுத்தும் ஐ.நா!

மார்ச் 02, 2023

ஆஸ்திரேலியாவின் கடல் கடந்த தடுப்புகள் செயல்படும் நவுரு, பப்பு நியூ கினியா தீவுகளில் அகதிகள் வைக்கப் பட்டுள்ள விவகாரத்தில் ஆவுஸ்திரேலிய அரசு ஐக்கிய நாடுகளின் கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது.

கடல் கடந்த தடுப்புகளில் வைக்கப்பட்டிருக்கும் 150க்கும் அதிகமான அகதிகளை அங்கிருந்து வெளியேற்றி ஆவுஸ்திரேலியாவுக்குள் அழைத்து வர வேண்டும் என ஆவுஸ்திரேலியாவில் உள்ள மனித உரிமை அமைப் புகள், செயல்பாட்டாளர்களுடன் இணைந்து அகதிகளுக் கான ஐ.நா. உயர் ஆணையரும் வலியுறுத் தியுள்ளார்.

சர்வதேச விதிகளின்படி தஞ்சக்கோரிக்கையாளர்களை பாதுகாப்பாகக் குடியமர்த்துவதற்கான சட்டரீதியிலான கடமை ஆஸ்திரேலியாவுக்கு உள்ளதாக ஐ.நா. தரப்பு குறிப்பிட்டுள்ளது.

"சர்வதேச சட்டத்தின் கீழ் நவுருத்தீவு அல்லது பப்பு நியூ கினியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களுக்கான பொறுப்பிலிருந்து இருந்து ஆவுஸ்திரேலிய அரசு விலகவோ அல்லது அதிகார வரம்பை, பொறுப்பை மட்டுப்படுத் தவோ முடியாது," ஐ.நா. அகதிகள் முகமை தெரிவித் துள்ளது.

நவுருவில் உள்ள 66 அகதிகள், பப்பு நியூ கினியா வில் உள்ள 92 அகதிகளை ஆஸ்திரேலியாவுக்குள் கொண்டு வர வேண்டும் என சட்டமசோதா ஒன்றை ஆவுஸ்திரேலிய பசுமைக் கட்சி தரப்பிலிருந்து அண் மையில் ஆஸ்.நாடாளு மன்றத்தில் சமர்பிக்கப் பட்டது.

மனித உரிமைகள் கண் காணிப்பகத்தின் கூற்றுப்படி, கடல் கடந்த தடுப்பு கொள்கை நடைமுறைக்கு



(2013யிலிருந்து) வந்தது முதல் இதுவரை 12 தஞ்சக்கோரிக்கையாளர்கள் உயிரிழந்திருக்கின்றனர். பலர் தற்கொலைக்கு முயன்ற சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

# இத்தாலியின் வெனிஸ் நகரம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது!

மார்ச் 02, 2023

இத்தாலியின் வெனிஸ் நகரம் கால்வாய்களுக்கும் படகு சவாரிகளுக்கும் பெயர்பெற்றது.

ஆனால், தற்போது கோடைக்காலம் தொடங்கிவிட்ட நிலையில், வெனிஸ் நகரின் கால்வாய்கள் தண்ணீர் இன்றி வறண்டு, படகுகள் அனைத்தும் சேற்றுக்குள் மூழ்கிக் கிடக்கின்றன.

வெனிஸ் நகர கால்வாய்களில் நுழைந்து செல்லும் படகுகள் ரசிக்கத்தக்கவை.

அந்நகரின் பெரும்பாலான போக்குவரத்து சேவை படகுகள் மூலமே இடம்பெற்ற நிலையில், தற்போது நகர மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளது.

வெனிஸ் நகரை சுற்றியிருந்த 150 கால்வாய்கள் தண்ணீர் இன்றி வறண்டுபோனதால், மக்கள் தங்கள் வீடுகளை விட்டு பணியிடங்களுக்கும் கல்வி நிலையங்களுக்கும் செல்ல மிகுந்த சிரமத்தை சந்தித்து வருகிறார்கள்.

பலரும் தங்கள் இருப்பிடங்களுக்கு நடந்தே செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சிலர் சேற்றில் இறங்கி, குறைந்த தொலைவுக்கு இயக்கப்படும் படகுகளில் சென்று மீண்டும் சேற்றில் இறங்கிச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த வறட்சிக்கு மழையின்மை, வெப்பநிலை அதிகரிப்பு, கடல் மட்டம் தாழ்ந்தமை, ஆல்ப்ஸ் மலைத் தொடரில் பெய்த பனிப்பொழிவின் அளவு குறைந்தமை என பல காரணங்கள் கூறப்படுகின்றன.



வழமையாக அதிக வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்படும் வெனிஸ் நகரம் தற்போது வறட்சியால் பாதிக்கப் பட்டுள்ளது.

# சிறீலங்காவில் உண்மையைக் கண்டறிவதற்கான புதிய பொறிமுறை!

சர்வதேச மன்னிப்புச்சபை

மார்ச் 07, 2023

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் போன்ற உள்ளக நீதிப்பொறிமுறைகள் தற்போது அவசியமற்றவையாக மாறியிருப்பதுடன் அவை பாதிக்கப்பட்ட தரப்பினரின் நம்பிக்கையை இழந்திருக்கின்றன.

எனவே பொறுப்புக்கூறல் சார்ந்த பொறிமுறைகளை அரசாங்கம் முழுமையாக அமுல்படுத்துவதுடன் உண்மையைக் கண்டறிவதற்கான புதிய பொறிமுறையானது நாடளாவிய ரீதியிலான விரிவான கலந்துரையாடல்களின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்படவேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின்கீழ் இயங்கும் உபகட்டமைப்பான சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் தொடர்பில் மீளாய்வு செய்யும் மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவின் 137 ஆவது கூட்டத்தொடர் கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமானது.

அதன்படி இலங்கை தொடர்பான மீளாய்வு இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது. மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இம்மீளாய்வுக்குழுவின் கூட்டத்தொடரை முன்னிறுத்தி மனித உரிமைகள் அமைப்புக்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் இலங்கை தொடர்பான தமது அறிக்கைகளைச் சமர்த்துள்ளன.

அந்தவகையில் ஐ.நா மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவிடம் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே சர்வதேச மன்னிப்புச்சபை மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளது.

மன்னிப்புச்சபையின் அறிக்கையில் அமைதிப்போராட்டங்கள் மீதான அடக்குமுறைகள், பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் பயன்பாடு மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படாமை ஆகிய மூன்று விடயங்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அவைகுறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

பொருளாதார நெருக்கடியின் விளைவாகக் கடந்த 2022 பெப்ரவரி மாதம் முதல் இலங்கை மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். அப்போராட்டங்களை இராணுவமயப்படுத்தப்பட்ட முறைமையின் ஊடாக அரசாங்கம் எவ்வாறு கையாண்டது என்பதையும், சில போராட்டங்களுக்கு எதிராக எவ்வாறு அநாவசியமானதும் மிகையானதுமான பாதுகாப்புப் படையினர் பயன்படுத்தப்பட்டனர் என்பதையும் நாம் ஆவணப்படுத்தியுள்ளோம்.

இருப்பினும் இச்சம்பவங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் தற்போதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. இவ்வனைத்துச் சந்தர்ப் பங்களிலும் அமைதிப்போராட்டக்காரர்களைப் பாதுகாப்பதற்கும் அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான உரிமைக்கு இடமளிப்பதற்கும் அதிகாரிகள் தவறியிருக்கின்றார்கள்.

கடந்த 2022 ஆம் ஆண்டு குறைந்தபட்சம் 3 சந்தர்ப்பங்களில் நாட்டில் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டதுடன் உரியவாறான செயன்முறைகள் மற்றும் நீதிமன்ற மேற்பார்வையின்றி நபர்களைக் கைது செய்வதற்கும் தடுத்துவைப்பதற்குமான மட்டுமீறிய அதிகாரங்கள் அதிகாரிகளுக்கு வழங்கப் பட்டன. அதன்படி அதிகாரிகளால் கடத்தல் பாணியிலான கைது நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டன.

மேலும் 2022 ஓகஸ்ட் மாதம் போராட்டங்களுக்குத் தலைமைதாங்கிய இரு மாணவத்தலைவர்களைப் பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் தடுத்துவைப்பதற்கான உத்தரவு ஜனாதிபதியினால் பிறப்பிக்கப்பட்டது. இருப்பினும் அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எவ்வித அடிப்படைகளும் அற்றவையாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் போராட்டங்கள்மீதான அடக்குமுறைகளை முடிவுக்குக்கொண்டுவருமாறும், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

அடுத்ததாக பயங்கரவாதத்தடைச்சட்டத்தை இல்லாதொழிப்பதாக இலங்கையின் கடந்தகால அரசாங்கங்கள் உத்தரவாதமளித்திருப்பினும், அச்சட்டம் இன்னமும் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது.

குறிப்பாக கடந்த 2022 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் மேற்கொள்வதற்கான திருத்தங்கள் முன்வைக்கப்பட்டபோதிலும், 'பயங்கரவாதம்' என்பதற்கான உரிய வரைவிலக்கணம் இன்மை, நீண்டகால தடுப்புக் காவலில் வைக்கப்படல் உள்ளடங்கலாகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் காணப்படும் முக்கிய குறைபாடுகள் அத்திருத்தங்களின் ஊடாக நிவர்த்திசெய்யப்படவில்லை.

இந்நிலையில் பயங்கரவாதத்தடைச்சட்டமானது தேசிய பாதுகாப்புச்சட்டத்தின் ஊடாகப் பதிலீடு செய்யப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது. அதன்படி பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடனடியாக நீக்கும் அதேவேளை, புதிதாகக் கொண்டுவரப்படக்கூடிய எந்தவொரு சட்டமும் சர்வதேச சட்டங்கள் மற்றும் நியமங்களுக்கு அமைவாகக் காணப்படுவதை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்துகின்றோம்.

மூன்றாவதாக பிரகீத் எக்னெலிகொட வழக்கு, கடற்படையினரால் 11 பேர் கடத்தப்பட்ட வழக்கு, திருகோணமலை 5 மாணவர்கள் வழக்கு, ஜோசப் பரராஜசிங்கம் வழக்கு, லசந்த விக்ரமதுங்க வழக்கு உள்ளிட்ட முக்கிய மனித உரிமைகள் வழக்கு விசாரணைகள் முடக்கப்படுவது அல்லது தாமதிக்கப்படுவதானது தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு மேலோங்குவதற்கு வழிவகுக்கும்.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் போன்ற உள்ளக நீதிப்பொறிமுறைகள் தற்போது அவசியமற்றவையாக மாறியிருப்பதுடன் அவை பாதிக்கப்பட்ட தரப்பினரின் நம்பிக்கையை இழந்திருக்கின்றன. எனவே பொறுப்புக்கூறல் சார்ந்த பொறிமுறைகளை அரசாங்கம் முழுமையாக அமுல்படுத்தவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

அதேவேளை உண்மையைக் கண்டறியும் புதிய பொறிமுறையொன்றை ஸ்தாபிப்பது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்துமேயானால், அது நாடளாவிய ரீதியிலான கலந்துரையாடல்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்படவேண்டும் என்று மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.

# கடலில் மிதக்கும் 171 இலட்சம் கோடி பிளாஸ்டிக் துகள்கள் 2040தில் 03 மடங்காக உயர வாய்ப்பு: ஆய்வில் எச்சரிக்கை!



மார்ச் 10, 2023

பெருங்கடலின் தூய்மை தொடர்பாக சர்வதேச விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்படி, உலக பெருங்கடலில் சுமார் 171 ட்ரில்லியனுக்கும் (171 இலட்சம் கோடி) அதிகமான பிளாஸ்டிக் துகள்கள் மிதப்பதாக தெரியவந்துள்ளது.

சர்வதேச விஞ்ஞானிகள் குழு 1979 மற்றும் 2019க்கு இடையில் அட்லாண்டிக், பசிபிக் மற்றும் இந்திய பெருங்கடல்கள் மற்றும் மத்தியதரைக் கடலில் உள்ள 12 ஆயிரம் மாதிரிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட பதிவுகளை ஆய்வு செய்தது.

இதில், 2005ஆம் ஆண்டு முதல் உலக பெருங்கடல் பிளாஸ்டிக் மாசுபாட்டில் விரைவாக முன்னேறி வருவதை கண்டறிந்தனர். 1990ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரை பெருங்கடலில் மிதக்கும் பிளாஸ்டிக்கின் அளவு ஏற்ற இறக்கமான அளவிலும், ஆனால் தேக்கமான நிலையிலும் இருந்துள்ளது. இது தற்போது விரைவாக அதிகரித்துள்ளது.

இதனால், இது தொடர்பாக விஞ்ஞானிகள் அவசர கொள்கை நடவடிக்கை எடுக்காவிட்டால் 2040 ஆம் ஆண்டில் பெருங்கடலில் பிளாஸ்டிக் துகள்கள் மிதக்கும் விகிதம் சுமார் 2.6 மடங்கு அதிகரிக் கக்கூடும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

இதுகுறித்து 5 கையர்ஸ் ஆராய்ச்சி கல்வி நிறு வனத்தின் இயக்குநரும், அறிக்கையின் ஆசிரியருமான லிசா எர்டில் கூறுகையில்,

ஒவ்வொரு ஆண்டும் உலகளாவிய பிளாஸ்டிக்கில் 9 சதவீதம் மட்டுமே மறுசுழற்சி செய்யப்படுகிறது. இந்த பிளாஸ்டிக் துகள்கள் கடலில் சேர்ந்ததும் அது சிதைவடையாமல், மாறாக சிறிய துண்டுகளாக உடைந்துவிடும். இந்த துகள்கள் உண்மையில் எளிதில் சுத்தம் செய்யக்கூடியதில்லை. தங்கள் ஆய்வில், கடல்களை சுத்தப்படுத்துவதற்கும், பிளாஸ்டிக்கை மறுசுழற்சி செய்வதற்கும் பதிலாக உற்பத்தி மற்றும் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் அளவைக் குறைப்பதில் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில், மறுசுழற்சி போன்றவை மாசுபாட்டின் ஓட்டத்தை நிறுத்துவதற்கான வாய்ப்புகள் குறைவு. இவ்வாறு அவர் கூறினார்.

# ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தின் 52 வது கூட்டத்தொடர் நடைபெற்றுவரும் சூழலில் தமிழின அழிப்புக்கு நீதி கேட்டு சுவிஸ் ஜெனீவாவில் நடைபெற்ற போராட்டம்! - 06.03.2023



















# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4





சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்ச்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை

உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# ஒடுக்கப்படும் மக்களே ஒடுக்கு முறைக்கு எதிராக போராட வேண்டும்!

## –தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



பெண் அடிமைத்தனத்தின் விலங்குகளை உடைத்தெறியாத எந்த ஒரு நாடும், எந்த ஒரு சமூகமும், முழுமையான சமூக விடுதலையை பெற்றதாகக் கூறமுடியாது. ஏனென்றால், பெண் விடுதலையே சமூக விடுதலையை முழுமை பெறச் செய்கிறது. பெண்கள் சுதந்திரமாக, கௌரவமாக, சமத்துவமாக வாழ வழிசெய்யும் ஒரு மக்கள் சமூகமே உண்மையில் விடுதலை பெற்ற சமூகமாக இருக்க முடியும். அந்த சமூகமே உயரிய பண்பாட்டின் உன்னத நிலையை அடைய முடியும்.

எமது போராட்டம் தேச விடுதலையை மட்டும் நோக்காகக் கொண்டதல்ல. தேசத்தின் விடுதலையுடன் சமூக விடுதலையையும் இலக்காகக் கொண்டே நாம் போராடி வருகிறோம். சமூக விடுதலை என்ற எமது குறிக்கோளில் பெண் விடுதலை பிரதான இடத்தை வகிக்கிறது. சகல ஒடுக்கு முறைத்தளைகளிலிருந்தும் தமிழீழப் பெண்ணினம் விடுதலை பெறவேண்டும். அப்பொழுதே சமூக விடுதலையானது அர்த்தமுடையதாக முழுமை பெறமுடியும், என்பது எமது நிலைப்பாடு.

ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்ற ரீதியில் எமது தேசத்தின் நலன் கருதி, எமது மக்களின் நல்வாழ்வு கருதி, நாம் முற்போக்கான கொள்கைகளை வரித்து, போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம். இந்தக்கொள்கைகளை மக்கள் பற்றிக்கொண்டு, அவற்றைச் செயற்படுத்த உறுதிபூண்டு, போராட்டத்தில் பங்கு கொள்ளும்பொழுதுதான் போராட்டம் வெற்றிப்பாதையில் செல்லமுடியும். எந்த ஒரு விடுதலை இயக்கமும் தனியாக நின்று, மக்களுக்குப்புறம்பாக நின்று, விடுதலையை வென்றெடுத்ததாக வரலாறு இல்லை. அது, நடைமுறைச் சாத்தியமான காரியமுமல்ல. ஒரு விடுதலை இயக்கத்துக்குப்பின்னால் மக்கள் அணிதிரண்டு, அந்த இயக்கத்தின் இலட்சியத்தில் பற்றுக்கொண்டு போராட்டத்தில் பங்கும் கொள்ளும் பொழுது தான் விடுதலை சாத்தியமாகிறது.

எமது சமூகத்தில் நிலவும் ஒடுக்குமுறை வடிவங்களை ஒழித்துக்கட்டி, சமத்துவத்தையும் சமூக நீதியையும் நிலைநிறுத்த எமது இயக்கம் திடசங்கற்பம் பூண்டிருக்கிறது. சமூக உறவுகளில் அடிப்படையான மாற்றத்தை நிகழ்த்துவதன் மூலமே இதனைச் சாதிக்க முடியும். இந்தச் சமூக மாற்றத்திற்கு முதற்படியாக சமூக வழிப்புணர்வு அவசியம். வழிப்புணர்வு பெற்ற மக்களின் ஆதரவும், ஒத்துழைப்பும், பங்களிப்பும் அவசியம். மக்களின் ஆதரவுடன், மக்களின் மேம்பாட்டிற்காக நிகழ்த்தப்படும் சமூக சீரமைப்புகளே நிரந்தரமானதாக நிலைத்து நிற்கும்.

பெண் ஒடுக்குமுறை என்பது ஒரு சிக்கலான சமூகப் பிரச்சினை. நீண்ட நெடுங்காலமாக, எமது பண்பாட்டு வாழ்வில் ஆழப்புரையோடி நிற்கும் சமூகக் கொடுமை. இந்த சமூக அநீதியை வேரோடு பிடுங்கி எறிய எமது இயக்கம் உறுதி பூண்டு நிற்கிறது. இந்த இலட்சியத்தை நாம் வெற்றிகரமாகச் சாதித்து முடிப்பதாயின் பெண்களின் ஆதரவும் பங்களிப்பும் அவசியம். தமிழீழப் பெண்ணினம் எமது விடுதலை இயக்கத்துடன் அணிசேர்ந்து இந்த புரட்சியை முன்னெடுக்க முன்வரவேண்டும்.

தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்புற்று நிற்பதால், எமது சமூகத்தில் ஒரு புரட்சிகரமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. சமூக மாற்றத்திற்கு ஏதுவான புறநிலை தோன்றியிருக்கிறது. இந்தப் புரட்சிகரமான வரலாற்றுச் சூழ்நிலையைப் பயன்படுத்தப் பெண்ணினம் தவறிவிடக் கூடாது. சமூகப் புரட்சிக்கான அக, புறச் சூழ்நிலைகள் கனிந்துள்ள இவ்வேளையில் பெண் விடுதலைக்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்த பெண்கள் முன்வரவேண்டும்.

ஒடுக்கப்படும் மக்களே ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராட வேண்டும். அநீதிக்கு ஆளாகி நிற்பவர்களே அநீதியை ஒழித்துக் கட்ட முன்வரவேண்டும். இந்த வகையில், பெண் அடிமைத் தனத்திற்கு எதிராகப் பெண்களே போர்க்கொடி உயர்த்த வேண்டும்; போராட வேண்டும். இந்தப் போராட்டம் ஒரு தேசிய விடுதலை அமைப்பின் பக்கபலத்துடன் முன்னெடுக்கப்படுமானால் அது வலுமிக்க சக்தியாக வெற்றியைப் பெற்றுத்தரும்.

இன்று, எமது தேசிய விடுதலைப் போராட்டம் புதிய சவால்களையும், புதிய நெருக்கடிகளையும் எதிர்கொண்டு நிற்கிறது என்றுமில்லாதவாறு சிங்களப் பேரின வாதசக்திகள் ஓரணியில் ஒன்று திரண்டு, தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை நசுக்கிவிட கங்கணம்கட்டி நிற்கின்றன. தமிழ் மக்கள் மீது தொடர்ந்து சாவையும் அழிவையும் கட்டவிழ்த்துவிட்டு தமிழர் நிலத்தை ஆக்கிரமிக்கும் நோக்கில், பெரியதொரு போருக்கான தயாரிப்பு வேலையையும் சிங்கள அரசுமேற்கொண்டு வருகிறது.

அன்றுதொட்டு இன்றுவரை, கடந்த நாற்பது ஆண்டுகளிற்கு மேலாக சிங்களப் பேரினவாதம் இராணுவத்தீர்வுக்கே முதலுரிமை கொடுத்து வருகிறது. யுத்தத்திலும் ஆயுத அடக்குமுறையிலும் நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வருகிறது. சமாதானப்பாதைகளை மூடிவிட்டு வன்முறை மார்க்கத்தையே கடைப்பிடித்து வருகிறது. நீதி கேட்டுப் போராடும் எமது மக்களிற்கு எதிராக மிகவும் கொடூரமான அநீதிகளைப் புரிந்து வருகிறது. பௌத்த தர்மத்திற்கு இழுக்கை ஏற்படுத்தும் மகாபாதகச் செயல்களைப் புரிந்து கொண்டு தமிழரின் உரிமைப் போராட்டத்தை “பயங்கரவாதம்” என வர்ணித்தும் வருகிறது.

அன்று தொட்டு இன்று வரை தமிழரின் போராட்டம் அறவழியைத் தழுவி நிற்கிறது. அகிம்சை வழியிலும் சரி, ஆயுதவடிவிலும் சரி தமிழர் வரித்துக்கொண்ட போராட்டம் தர்மத்தின் நியமத்தில் நெறிக்கப்பட்டிருக்கறிது. இந்தத் தார்மீக அடிப்படையே எமது போராட்த்தின் ஆன்மீக பலமாகவும் இருந்து வருகிறது.

நாம் சமாதானத்தின் கதவுகளை அடைத்துவிடவில்லை. சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பாதைகளை மூடிவிடவில்லை. சமாதான வழி மூலம் எமது மக்களிற்கு நீதி கிடைக்குமானால் நாம் அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

சமாதானத்தைத் தோற்றுவிக்கும் நல்லெண்ண நோக்குடன் இங்குவரும் சமாதானத் தூதுவர்களை நாம் நேசக்கரம் நீட்டி வரவேற்று வருகிறோம். போரை நிறுத்தி, சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வுகாண எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கிறது என்பதை நாம் இவர்களுக்கு மேலும் மேலும் வழியுறுத்தி வருகிறோம். எமது நல்லெண்ணத்துக்குச் சான்றாக சமாதான சமிக்ஞைகளைக் காட்டவும் நாம் தவறவில்லை.

எமது நோக்கத்தையும், நிலைப்பாட்டையும் சர்வதேச சமூகம் இன்று நன்கறியும். சமா தானத்தின் பாதைக்கு முட்டுக்கட்டையாக நிற்பவர்கள் யார் என்பதையும் உலகம் நன்கறியும் உலகத்தின் சமாதான முயற்சிகளுக்கும் ஊறு விழைவிப்பவர்கள் யார் என்பதையும் உலகம் நன்கறியும்.

மனித உரிமைக்கும், மனித நீதிக்கும், சமாதானத்திற்கும் குரலெழுப்பும் இந்த உலகமானது உரிமைகேட்டு, நீதிகேட்டு சமாதான வழியில் தீர்வுகேட்டுநிற்கும் எமது மக்களிற்கு சார்பாகக் குரலெழுப்ப வேண்டும். இதுவே உலகத்தின் இன்றைய தார்மீகக்கடப்பாடாகும்.

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகளின் மகளிர் அமைப்பு இன்று நடாத்தும் பெண்கள் எழுச்சி நிகழ்ச்சிகளுக்கு எனது நல்லாசியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(03.03.1994 அனைத்துலகப் பெண்கள் நாளையொட்டி தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் வெளியிட்ட அறிக்கை)


மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்சுமி
பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


PEEL TAE KWON-DO
PEEL TAE KWON DO
Family Martial Arts
Trusted Local Taekwon - Do
Training School
* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
2016 READERS' CHOICE AWARDS
* Top Quality Training for Kids, Teens and Adults
Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571
Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268



# இந்த மாதத்தில் இப்படி வெயில் அடிப்பது ஏன்?

ஆறு ஆண்டுகள் கழிந்து விட்டன.
எட்டிமிதித்துச் செல்லும் காலத்துக்குத்தான்
எத்தனை வேகம்.
பங்குனி மாதத்தில் தார்வீதி தீப்பிடிக்கும்.
வாசல் நுழையும் காற்றுக்கூட வழிதடுமாறும்.
பூபதித் தாயென்று பொன்மகள்
இந்த மாதத்தில்தான் தேரேறி வீதிக்குவந்தாள்.
சத்தியக்கவசம் நெஞ்சினில் இருந்தது.
தர்மக் காண்டீபம் கையினில் இருந்தது.
நியாயச்சுடர் வழிகளில் ஔிர
மாமாங்க வீதியில் சங்கு முழங்கினாள்.
அன்னைக்கு எதிரே அந்நியப் படைகள் நின்றன.
“பாரதப் போர்“ பதினெட்டு நாட்கள்;
இப்போர் நடந்ததோ முப்பது நாட்கள்.
இது வியாசர் எழுதாத “குருஷேத்திரப் போர்“
குருந்தமர நிழல் குளிரும்.
எங்கள் தாய்க்கோ எரிந்தது.
சித்திரை மாதத் தென்றல் இதமளிக்கும்.
அன்னை பூபதிக்கு அது அனலாகியது.
இன்னும் ஆறாத எரிமலைக் குழம்பாய்
எங்கள் நெஞ்சு கனன்று கொண்டிருக்கிறது.
மட்டக்களப்பில் இவள் மடியுறங்கியபோது
உலகத்தின் விழிகள் உறக்கம் கலைந்தன.
பாரதப் படைகள் பயந்தன.
சுட்டுப் பொசுக்காத பட்டினியுத்தம்.
கிட்ட நெருங்க முடியாது வெலவெலத்துப் போனார்கள்.
பூமிப்பந்தின் புருவம் உயர்ந்தது.
பார்வையை எங்கள் பக்கம் திருப்பியது.
நிலவற்ற வானத்தை எவரும் நிமிர்ந்து பார்ப்பதில்லை.
பூக்காத செடிகளை தேனீக்கள் தேடுவதில்லை.
வற்றிய குளத்தில் யாரும் வலைவீசுவதில்லை.
போராடும் தேசங்களே
பூகோளப் படத்தில் பிரகாசிக்கின்றன.
இமய மலையை
எல்லோரும் எட்டிநின்றே பார்த்தனர்.
உச்சியையும் தொட்டு விடலாமென்று
“டென்சிங்“ மட்டுமே உணர்த்தினான்.
நிலவை முகத்துக்கு உவமை சொல்லி
கவிஞர்கள் கண்ணடித்துக் கொண்டிருந்தபோது
“ஆம்ஸ்ரோங்“ அதிலே பாதத்தையே பதித்தான்.
பெரிய வல்லரசுடன் போராட முடியுமா?
பலர் முடியாதென்ற முடிவுக்கே வந்தனர்.
பிரபாகரன் மட்டும்
இவர்களை ஊதிக்கலைக்கலாமென்று
உணர்ந்திருந்தான்.
இதை வழிமொழிந்தாள்
எங்கள் வரலாற்று நாயகி.
தீக்கு தீமூட்டிய நாட்களென்பதால்தான்
வெளியே
இந்தமாதத்தில் இப்படி வெயில் அடிக்கிறது.
நீண்டகாலமாகத் தமிழன் நித்திரையிற் கிடந்தான்.
உதைத்தகாலுக்கு முத்தமிட்டு உணர்வற்று இருந்தான்.
அடித்தகால்களுக்கு அபிஷேகம் செய்தான்.
பிரபாகரனின் பிறப்புக்குப் பின்னர்தான்
மிண்டும்...
தமிழனின் நரம்புகளில் குருதி குதித்தது
மீசைகள் முறுக்கேறிக் கொண்டன.
தாவணி சுற்றிய தங்கைகளும்
போரணிக்குள்ளே புகுந்து கொண்டனர்.
பூபதி அம்மாவின் பிறப்பின் மூலமே இதுதான்.
வெள்ளரசு நிழலில்
சித்தார்த்தனுக்கு ஞானம் சித்தித்தது.
யுத்தத்தின் பின்னர்தான்
அசோகனுக்குப் புத்தியே தெளிந்தது.
விஜேதுங்காவுக்கு மட்டும் விடிவே இல்லையா?
வயதேறவரும் வளர்ச்சி வளையங்கள்
மரங்களின் முதிர்ச்சியைக் காட்டுமாம்.
மனிதனின் வளர்ச்சியை அளக்கமட்டும்
கடவுளேன் கருவியொன்றைப் படைக்கவில்லை?
“புலிகளை அழிப்பேன்.
இப்பிறப்பில் இயலாவிட்டால்
அடுத்த பிறப்பெடுத்தென்றாலும் அழிப்பேன்”
ஐயோ பாவம்.
விஜேதுங்காவுக்கு
அடுத்த பிறப்பிலும் ஆளும் நினைவுதான்.
சிம்மாசன ஆசைதானே பேச்சில் தெரிகிறது.
மூளைவளராத பிள்ளைக்கு அதிகம் பேசவராதே
இவருக்கு எப்படிப் பேசமுடிகிறது.
“எல்லோரும் ஏறி இளைத்த குதிரையில்
சக்கடத்தார் ஏறிச் சறுக்கி விழுந்தாராம்”
இது இங்கே வழக்கிலிருக்கும் முதுமொழி
யாரேனும் மொழி பெயர்த்து விஜேதுங்காவிற்கு
முகவரியிடுங்கள்.
தமிழீழம் தலைகுனியது.
பிரபாகரன் பெருநெருப்பு.
பூபதி என்பவள் போனவள் மட்டும்தானா?
இல்லை.
வந்து பார்.
கருச்சுமந்த பெண்களிலெல்லாம்
பூபதி அம்மாவின் உருவம் தெரியும்.
“நாவலடி“யில் எரிந்தவளுக்கு
“நாவாந்துறை“யில் விளக்கேற்றியுள்ளோம்.
வந்தபாருங்கள்
நாங்கள் ஒன்றாகியுள்ளதை உணர்ந்துகொள்வீர்கள்.
பூபதி அம்மாவுக்கு
ஆடை கட்டிமட்டும் அழகு பார்ப்பவர்களே!
அவளின் கையில் இருந்த
அஸ்திரங்களையும் கணக்கெடுத்துக் கொள்ளுங்கள்.
நெஞ்சுக்குள் எரிந்த நெருப்பை நினைத்துக்
கொள்ளுங்கள்.
அச்சமில்லாத அவளின் உறுதியை
உற்றுப் பாருங்கள்.
புலிகள்மீது அவளுக்கிருந்த நம்பிக்கையை
அளவெடுத்துக் கொள்ளுங்கள்.
இப்போது பாருங்கள் -
பூபதி அம்மா விஸ்வரூபமாய் விண்தொட நிற்பாள்!

நன்றி: விடுதலைப்புலிகள் ... வியாசன், பங்குனி 1994

# ஒரு சிப்பாய் கண்ட கனவு!

04.03.2023

புத்த பகவான் ராஜபோகங்களையும் குடும்பத்தையும் துறந்து சன்னியாசி ஆகியவர். ஆனால் அவர் இலங்கைத் தீவில் நிலாவரையில் இராணுவ முகாமில் உள்ள ஒரு சிப்பாயின் கனவில் தோன்றி தனது சிலையை நிலாவரையில் வைக்குமாறு கூறியதாக அந்த சிப்பாய் கடந்த கிழமை கூறியுள்ளார். ரவூப் ஹக்கீம் முன்பொருமுறை கூறியது போல நாட்டில் புத்தர் சிலைகள் எல்லைக் கற்களாக மாற்றப்பட்டு விட்டன.

அந்தச் சிப்பாய் நிலாவரையில் யாருக்காக நிலத்தை பாதுகாக்கின்றாரோ, அந்த மக்கள் மத்தியில் உள்ள மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அவ்வாறு வெளியேற வேண்டாம் என்று நாட்டின் ஜனாதிபதி மன்றாடிக் கொண்டிருக்கிறார். யாருடைய நிலத்தை யாரிடமிருந்து பாதுகாப்பதற்காக அந்த சிப்பாய் நிலாவரையில் குந்திக் கொண்டிருக்கிறார்?

இலங்கைத்தீவின் மொத்த படைத் தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பகுதி தமிழ்ப் பகுதிகளில் நிலைகொண்டிருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. மிகச்சிறிய இலங்கைத்தீவு தனது அளவுப் பிரமாணத்திற்கு அதிகமாக படையினரைக் கொண்டிருக்கிறது. இப்படையில் மூன்றில் இரண்டு பகுதி வடக்கு கிழக்கை படைமயப்படுத்த நிறுத்தப்பட்டிருக்கிறது என்று ஒரு புள்ளிவிபரம் உண்டு. நாட்டின் பொதுத்துறை ஊதியத்தில் சுமார் 50 மூபடைத்தரப்புக்கு வழங்கப்படுகிறது என்றும், உலகில் 100 பேர்களுக்கு எத்தனை படைவீரர்கள் என்ற விகிதத்தில் இலங்கை பத்தாவது இடத்தில் உள்ளது என்றும் நிஷான் டி மெல்- வெரிற்றே ரிசேர்ச் இன்ஸ்ரிரியூட்டின் பணிப்பாளர்-கூறுகிறார். இலங்கைத்தீவின் பாதுகாப்புச் செலவினம் நாட்டின் கல்வி மற்றும் சுகாதாரச் செலவினங்கள் இரண்டையும் கூட்டிவரும் தொகையைவிட அதிகமாக இருப்பதும் பொருளாதார சீரழிவுக்கு ஒரு காரணம் என்று நிஷான் கூறுகிறார்.

சிறிய இலங்கைத் தீவு பாகிஸ்தானைப் போலவே தனது பருமனை விடப் பெரிய படைக்கட்டுமானத்தைக் கொண்டிருக்கிறது. பாகிஸ்தானிலும் இப்பொழுது பொருளாதார நெருக்கடி. சில நாட்களுக்கு முன் பாகிஸ்தானிய ஊடகங்களில் வந்த செய்திகளின்படி, அங்கு படையினருக்கு ஒதுக்கப்பட்ட சிறப்பு நிதி குறைக்கப்பட்டதால்,அங்கே படையினருக்குச் மூன்று வேளையும் சாப்பாடு போடக் காசில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் இலங்கைத்தீவில் 13ஆவது திருத்தத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டஞ் செய்யும் பிக்குகளுக்கு மூன்று வேளையும் சாப்பாடு கிடைக்கிறது. நிலாவாரையில் கனவுகண்ட சிப்பாய்க்கும் மூன்று வேளை சாப்பாடு கிடைக்கிறது .

நாட்டின் பெருமளவு செல்வத்தையும் தலைப்பேறானவற்றையும் அனுபவிக்கும் படைக்கட்டமைப்பின் ஆட்தொகையைக் குறைத்தாலே போதும் நாட்டின் செல்வத்தில் பெரும் பகுதியை மிச்சப்படுத்தலாம். அவ்வாறு படைதரப்பில் ஆட்குறைப்பை செய்ய வேண்டும் என்பது ஐ.எம்.எஃப்பின் நிபந்தனைகளில் ஒன்று என்று முன்பு கூறப்பட்டது. ஆனால், அண்மையில் கண்டியில் உரையாற்றிய பொழுது ஜனாதிபதி ஐ.எம்.எஃப் விதித்த 15 நிபந்தனைகளை நிறைவேற்றியது பற்றிப் பேசியிருக்கிறார். ஆனால் அதில் படை ஆட்குறைப்பு தொடர்பாக எதுவும் பேசவில்லை. சிங்கள பௌத்த பெருந்தேசியவாத அரசியலில் படை ஆட்களின் எண்ணிக்கையை குறைக்க முற்படுவது அரசியல் தற்கொலைக்கு நிகரானது என்பது ரணிலுக்கு தெரியும். அதனால் அவர் அதனை அடக்கி வாசிக்கின்றாரா, அல்லது 13-வது திருத்தத்தை எதிர்த்து வீதியில் இறங்கியதுபோல படை ஆட்குறைப்பைச் செய்தால் அதற்கும் எதிராகவும் பிக்குகளும் எதிர்க்கட்சிகளும் வீதியில் இறங்கலாம் என்ற ஒரு சாட்டைக் கூறி அந்த விவகாரத்தை ஒத்திவைத்து வருகிறாரா?

ஆனால் படையினரை ஆட்குறைக்காமல் தமிழ்ப் பகுதிகளை இராணுவ மயநீக்கம் செய்யமுடியாது. எனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை அரசாங்கத்தை பிணையெடுக்க முற்படும் ஐ.எம்.எஃப் போன்ற தரப்புகள் படை ஆட்குறைப்பை ஒரு நிபந்தனையாக முன் வைக்கவில்லையா? அதை ஒரு நிபந்தனையாக முன்வைக்கும்படி தமிழ்த்தரப்பு குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகம் மேற்கு நாடுகளை வற்புறுத்தவில்லையா? படையினரை ஆட்குறைக்காமல் பொருளாதாரத்தை நிமிர்த்த முடியுமா? படை ஆட்களின் எண்ணிக்கையை குறைக்காமல் ஐ.எம்.எஃப்பின் ஏனைய நிபந்தனைகளை நிறைவேற்றலாம் என்று அரசாங்கம் நம்புகின்றதா?

ஆனால் அரசாங்கம் ஐ.எம்.எஃப்பின் ஏனைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்காக மானியங்களை வெட்டி, உரத்தின் விலை மின்கட்டணம், வங்கி வட்டி விகிதம் போன்றவற்றை உயர்த்தியதனால் அடிமட்ட மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இன்னொருபுறம் அரசாங்கம் புதிதாக விதித்திருக்கும் வரியினால் படித்த நடுத்தர வர்க்கம் அதாவது நாட்டில் அதிக வருமானத்தை பெறும் வகுப்பினர் பதட்டமடையத் தொடங்கியுள்ளார்கள்.

உரமானியத்தை வெட்டியதனால் உரத்தின் விலை கூடியது. அதனால் விவசாயிகள் நெல்லின் விலையைக் கூட்டினார்கள். நெல்லை வாங்கி விற்கும் வியாபாரிகள் தங்களுடைய லாபத்தையும் சேர்த்து மேலும் விலையைக் கூட்டினார்கள். அதாவது மானிய வெட்டு, வரி உயர்வு, வங்கி வட்டி அதிகரிப்பு



போன்றவற்றின் சுமைகள் அனைத்தும் சாதாரண மக்களின் தலைகளிலேயே சுமத்தப்படுகின்றன. அதனால்தான் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜே.வி.பி ஒழுங்குபடுத்திய ஆர்ப்பாட்டத்தில் பெருமெண்ணிக்கையான சிங்கள மக்கள் பங்குபற்றினார்கள். அதுபோலவே கடந்த புதன்கிழமை 40க்கும் குறையாத தொழிற்சங்கங்கள் இணைந்து தமது எதிர்ப்பை காட்டின. இது ஒருபுறம். இன்னொருபுறம் அரசாங்கம் விதித்திருக்கும் புதிய வரியினால் நாட்டின் படித்த மேல் நடுத்தர வர்க்கம் நாட்டை விட்டுத் தப்பியோடத் தொடங்கியுள்ளது.

கடந்த ஒரு வருடத்தில் மின்சார சபையின் 72 பொறியியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் அவர்களில் 22 பேர் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரிவதாகவும் மின்சார சபையின் பொறியியலாளர் சங்கத்தின் இணைச் செயலாளர் இசுரு கஸ்தூரிரத்ன கூறியுள்ளார். நுரைச்சோலை மின்உற்பத்தி நிலையத்தை வழமையாக நடத்துவதற்கு 123 பொறியியலாளர்கள் பணியாற்ற வேண்டும், ஆனால் இன்று 100 பேரே பணிபுரிவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும், இந்த பொறியியலாளர்கள் பற்றாக் குறையால், வருங்காலத்தில் ஆலையை நிறுத்த வேண்டிய நிலைகூட ஏற்படலாம் என்றும், அப்படி நடந்தால், மின் நெருக்கடி கடுமையாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சமில் விஜேசிங்க பின்வருமாறு கூறியுள்ளார்... “இந்த மாதத்தில் மாத்திரம் 50 முதல் 60 வரையிலான அரச வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். குறிப்பாக, சில வைத்தியர்கள் விடுமுறை பெறாமல் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இருப்பினும், நாட்டை விட்டு வெளியேறியுள்ள மருத்துவ நிபுணர்களின் பெயர் விபரங்களும் எண்ணிக்கையும் சுகாதார அமைச்சினால் இதுவரையில் வெளியிடப்படவில்லை. எமக்கு கிடைக்கப்பெற்றுள்ள தகவலுக்கு அமைவாக மொத்தமாக 1,000க்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன”...

“அதேவேளை, கிராமமட்ட மற்றும் நகர்ப்புற வைத்தியசாலைகளில் வைத்தியர்களின் வெளியேற்றத்தால் வைத்தியசாலை நடவடிக்கைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. எனினும், கொழும்பு தேசிய வைத்தியசாலை, லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை மற்றும் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை போன்றன இதுவரை மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறையால் பாதிக்கப்படவில்லை...மேலும், அங்கு விசேட வைத்திய நிபுணர்கள் வைத்தியசாலையில் காணப்பட்ட போதிலும், தாதியர்கள் மற்றும் ஏனைய சுகாதார ஊழியர்கள் வைத்தியசாலைகளை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் தொழில்நிமித்தம் சென்றுள்ளனர். அதேவேளை, அதிகளவிலான வைத்திய ஆலோசகர்களும் வைத்தியசாலைகளை விட்டு வெளியேறியுள்ளனர்” என்று சமில் விஜேசிங்க கூறுகிறார்.

இவ்வாறு ஒருபுறம், மூளைசாலிகளும் படித்தவர்களும் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இன்னொருபுறம், அண்மையில், அமெரிக்க யுத்தவிமானங்கள் படை அதிகாரிகளோடு நாட்டுக்குள் வந்து போயுள்ளன. திருகோணமலையில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து ஒரு கூட்டுத்தளத்தை உருவாக்கப் போவதாக “சிறீலங்கா கார்டியன்” எனப்படும் இணைய இதழ் கடந்த மாதம் 14ஆம் திகதி ஒரு கட்டுரையைப் பிரசுரித்திருந்தது. ஏற்கனவே இந்திய பாதுகாப்புத்துறை ஆலோசகரும் உளவுத்துறையின் தலைவரும் ரகசியமாக இலங்கைக்கு வந்து போனதாக செய்திகள் கிடைத்தன.

பிச்சையெடுத்த போதிலும் இச்சிறிய தீவு அதன் கேந்திர முக்கியத்துவம் காரணமாக இப்பொழுதும் அதன் கவர்ச்சியை இழக்கவில்லை. அதனால்தான் பேரரசுகள் இச்சிறிய தீவைத் தேடிவருகின்றன. ஏற்கனவே சீனா அம்பாந்தோட்டையில் 99 ஆண்டுகளுக்கு நிரந்தரமாக குந்திவிட்டது. கொழும்புத் துறைமுகத்தில் ஒரு பட்டினத்தை கட்டியெழுப்பி விட்டது. சீன விரிவாக்கத்துக்கு எதிராக இந்தியா இலங்கையில் எங்கு தனது கால்களைப் பரப்பலாம் என்று தீவிரமாக உழைக்கின்றது. வடக்கில் கடலட்டை ஒரு ராஜதந்திரப் பொருளாக மாறிவிட்டது. இச்சிறிய தீவு பேரரசுகள் பங்கிடும் அப்பமாக எப்பொழுதோ மாறிவிட்டது. ஒருபுறம் இச்சிறிய தீவைப் பேரரசுகள் தேடி வருகின்றன. இன்னொருபுறம் இச்சிறிய தீவின் படித்த மூளைசாலிகளோ நாட்டை விட்டுத் தப்பிச் செல்கிறார்கள். யாருடைய நிலத்தை யாரிடமிருந்து பாதுகாப்பதற்காக அந்த சிப்பாய் நிலாவரையில் முகாமிட்டிருந்து கனவு காண்கிறார்?

நன்றி: நிலாந்தன்

# தந்தையும் தனயர்களும்

**சிறுகதை**



செம்மலை, முல்லைத்தீவு

செம்மலையின் ஜீவனாக, அந்தக் கிராமத்தைச் சுற்றியோடும் கிரவல் அடித்த சிவப்பு வீதி நெடுஞ்சாலையின் ஏறுகின்ற இடம், பூமணி மாமி, வளைவில்லாமல் - கரிய பாம்பு போல நீண்டிருக்கும் அந்த நெடுஞ்சாலையைக் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"ஆனையிறவில சண்டை நடக்கிறதாம்."

இன்று மட்டுமல்ல - அவள் இப்போது கொஞ்ச நாட்களாக இப்படித்தான். எங்கு சண்டை நடந்தாலும் கலவரம் தோய்ந்த விழிகளோடு - ஏக்கத்தோடு இந்த இடத்தில் நிற்பாள்.

அவளுடன் யாரும் கதைக்க மாட்டார்கள். அவளுக்காக ஒரு அனுதாபப் பார்வையை மட்டும் வீசிவிட்டு நகர்வார்கள்.

இரவுகள் பூமணி மாமிக்கு மிகக் கொடுமையானதாக இருக்கும். எதுவுமே விளங்காத வெறுமையான அமைதி இதயத்தை ஆக்கிரமித்திருக்கும். கிராமத்தை - மக்களை எல்லாம் அதிரவைக்கும் குண்டுச் சத்தங்கள் இவள் செவிகளிற்குள் செல்ல மறுத்து நிற்கும்.

விடித்ததும், அந்தச் சந்திக்கு ஓடுவாள்.

"ஆனையிறவில சண்டை நடக்கிறதாம்."

மெல்லிய பச்சை நிறத்தில் ஒரு வாகனம்; உள்ளுக்குள்ளும் பின்னுக்கும் சிலர் ஆயுதங்களுடன் நின்றனர். அந்த வீதியின் பள்ளம் திட்டிகளுக்கு ஏற்றமாதிரி, அழகாக வீதியைப் பிடித்துக் கொண்டு வந்த வாகனம் பூமணி மாமிக்கு அருகில் நின்றது.

"குணத்தான்ர அம்மா" என்றான் ஒருவன்.

அந்த வாகனத்தின் சாரதி ஆசனத்தில் இருந்தவன் இறங்கினான். அவனது இடுப்புடன், நட்சத்திரம் இடப்பட்ட கைத்துப்பாக்கி அழகாகப் பொருந்தி இருந்தது.

"அவ பேசமாட்டா" என்றான் அருகின் இருந்தவன். சாரதி ஆசனத்தில் இருந்தவனோ மிகப்பழக்கப்பட்டவன் மாதிரி கைகளை அசைத்து, மாமியுடன் இயல்பாகக் கதைத்தான்.

"ஏனம்மா நிக்கிறீங்கள்?"

"ஆனையிறவில சண்டை நடக்கிறது..." பூமணி மாமி, தனது கையசைப்பு அவனுக்கு விளங்கிவிட்டதா என ஏக்கத்தோடு பார்த்தாள்.

"உங்கட மகனுக்கு ஒரு பிரச்சனையும் இல்லையம்மா. அப்படி ஏதும் என்றாலும் நான் வீட்டை வந்து சொல்லுறன். நீங்கள் போங்கோ" என்றான் அவன்.

அவள் தவறு செய்தவன் போல் கூச்சத்துடன் கீழே பார்த்தாள். பின் ஒருவாறு நிமிர்ந்தாள். அவனின் கண்களில் கனிவும் பாசமும் இருந்தன பூமணி மாமி திரும்பிநடத்தாள். கொஞ்சத் தூரத்தின் பின் திரும்பிப் பார்த்தாள். அவன் நடந்து கொண்டிருந்தாள். இடுப்பில் நட்சத்திரம் இடப்பட்ட கைத்துப்பாக்கி அழகாகப் பொருந்தி இருந்தது குணத்தான் மாதிரி ஒரு பக்கம் இழுந்தபடி...

★★★

பூமணி மாமியின் இரண்டாவது மகன் குணம் இயக்கத்திற்குப் போனதற்குப் பிறகு, அவள் இப்படித்தான், இரவுகளில் அமைதி அற்று தூக்கமில்லாமல் இருந்தாள். வார்த்தைகளற்ற குரலால்..., குணத்தானுக்குத்தான்..., ஏதேதோ எல்லாம் பேசிக்கொண்டிருந்தாள்.

ஒரு நாள் - வானம் மப்புப் போட்டிருந்த காலை நேரம் குணத்தான் வந்தான். திண்ணையிலிருந்த சின்னையர் ஓடிப்போய் தன் மகனை மகிழ்ச்சியுடன் வரவேற்றுக் கொண்டிருந்தார். சிவப்பியும் வெள்ளையனும் அவனைக் கண்டதும் ஓடிப்போய் தங்கள் வாலையும் பின்பக்கத்து உடம்பையும் வளைத்து வளைத்து, அவனுடன் ஓடிக்கொண்டே வரவேற்றன.

"வெட்கம் ரோசமில்லாத பிறவியள்." - பூமணி மாமி கோபத்துடன் உள்ளே போய்விட்டாள்.

அவள் பெரிதாக விம்முவது கேட்டது.

குணத்தான் உள்ளே போனான், சின்னையர் வெளியே ஒதுங்கிக் கொண்டார். தாயும் மகனும் நீண்ட நேரமாக ஏதேதோவெல்லாம் பேசிக் கொண்டார்கள். ஒரு சின்னச் சிரிப்புடன் குணத்தான் வெளியே வந்தான். அவன் கைகளிலிருந்த, "சினைப்பர்" துப்பாக்கி இடை இடையே அழகாகவும் இயல்பாகவும் கை மாறிக் கொண்டது.

தகப்பன் மாதிரியே உயர்ந்து வளர்ந்து, அவரைப் போலவே கையில் ஒரு துப்பாக்கியுடன் முற்றத்தில் நடக்கும் மகனைப் பார்க்க, பூமணி மாமிக்குப் பெருமையாக இருந்தது மனதில் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

"அவன் சின்னனிலேயே சரியாத் தகப்பனை மாதிரி."

குணத்தானுடன் தங்கச்சிகளும், தம்பிகளும், சின்னையரும், மாமியும் கூட அன்று இரவு முழுவதும் கதைத்தபடி இருந்தார்கள். விடிந்தவுடன் குணம் எழும்பிப் போய் விட்டான். கடைசித் தங்கை, அண்ணன் தன்னிடம் சொல்லாமல் போனதற்காக வீட்டில் எல்லோருடனும் சண்டைபிடித்தாள்; முகத்தை இரண்டு நாட்களாக உம் என்று வைத்திருந்தாள்.

ஊரில் கதை பரவியது.

"குணத்தான் சரியான திறமை சாலியாம் - குறிபார்த்துச் சுடுவதில் கெட்டிக்காரனாம்."

சில நாட்கள் சென்றன, குணத்தானுக்கு அடுத்ததாகப் பிறந்த செல்வனும் இயக்கத்திற்குச் சென்றுவிட்டான்.

"குணத்தானும் இயக்கத்தில தானே இருக்கின்றான். மூத்தவனும் யாழ்ப்பாணத்தில் இயக்க வேலைகள் செய்துகொண்டு இயக்கமாகத்தான் திரியிறான். நீ போய்க் கேட்டால் செல்வனை வீட்டை விடுவாங்கள்" என்று, சிலர் சொன்னார்கள். பூமணி மாமி அமைதியாக இருந்தாள். குணத்தான் சொல்லிவிட்டுப் போனது நினைவிற்கு வந்தது.

"இந்த மண்ணில நாங்கள் வாழவேண்டும் என்றால் நாங்கள் தானேம்மா போராட வேண்டும்?"

அன்று தொடக்கம்தான் பூமணி மாமி இட்படி, எங்கு சண்டை நடந்தாலும் இந்தச் சந்திக்கு வந்து ஏக்கத்தோடு காவல் நிற்கத் தொடங்கினாள்.

நாட்கள் சென்றன, சின்னையர் இலக்கில்லாமல் எதையோ சிந்தித்தபடி அலைந்து திரிந்தார். சில நேரங்களில் நாய்களைக் கூட்டிக்கொண்டு களப்புக் கரைகளில் வேட்டைக்குப் போனார். மற்றும் படி நிலத்தையும் வானத்தையும் பார்த்துக்கொண்டு கடற்கரையில் நின்றார். இருந்தாற் போல ஒரு நாள் சின்னையர் தோளில் ஒரு துப்பாக்கியைச் சுமந்து வந்தார். முகம் தெளிவாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

"நான் துணைப்படையில இருக்கிறன்" என்றார். பூமணி மாமிக்கு எதுவுமே புரியவில்லை. சின்னையரில் அவளுக்கு உயர்ந்த அன்பும், மதிப்பும் இருந்தது. அவர் செய்வது எதுவென்றாலும் அது சரியாகத்தான் இருக்கும். இல்லை என்றால் சின்னவயதில் அவரின் சொந்தங்கள் எல்லாம் எதிர்த்தபோதும் அவர் பூமணியைக் கைப்பிடித்திருக்க மாட்டார்.

★★★

சின்னையருக்கு அப்போது இளம் வயது. ஒரு தேக்கு மரம் மாதிரி உயர்ந்த உறுதியான தோற்றம். வேட்டை என்றால் அவருக்கு ஒரு கலை. குறிவைத்தால் இலக்குத் தவறாது. அவரின் தேகத்தில் கட்டை ஏறுவது மாதிரி - துப்பாக்கி இறங்குவதும் குறைவு.

பூமணிமாமியைப் பார்த்தவுடன் சின்னையர் ஒரு முடிவுக்கு



வந்து விட்டார்.

“அவள் வாய் பேசமாட்டாள் - காதும் கேளாது, இவளையோ கட்டப் போறாய்” என்று சொந்தங்கள் கிளர்ந்தன.

“அது பிரச்சனை இல்லை, வாழப்போறது நான்.” சின்னையர் உறுதியாகக் கூறிவிட்டு பூமணியைக் கூட்டிக்கொண்டு போய் விட்டார். அதன் பின்புதான் வெறும் பூமணியாய் இருந்த மாமி அந்தக் கிராமம் முழுவதும் பூமணி மாமியாகிவிட்டாள்.

அந்த மணற்காணிக்குள் இருக்கும் சின்னக் குடிசையில்தான் அவர்களின் குடும்ப வாழ்க்கை ஆரம்பித்தது.

அடுத்த வருடமே மூத்தவன் பிறந்தான். சின்னையர் முன்பக்கமாக ஒரு “மால்” அமைத்துக்கொண்டார். குணமும், செல்வனும் பிறந்து அடுத்தடுத்து இரண்டு பெண்களும் பிறந்தவுடன் குடும்பம் பெரிதாகி விட்டது. பெரிதாக வசதி இல்லாவிட்டாலும், அவர்களின் வாழ்க்கை பட்டினி இல்லாமல் தொடர்ந்தது.

வீடுமுழுவதும் குழந்தைகள் தவழ்ந்த அந்த நேரங்களில் சின்னையர் ஊர் சுற்றுவதைப் பெரிதும் குறைத்துக் கொண்டார். தனது குஞ்சுகளுக்கும் தாயக் குருவிக்கும் பாதுகாப்பளிப்பதற்காக, கூட்டை விட்டு விலகாமல் கூட்டையே சுற்றி வரும் ஆண் குருவி போல, சின்னையார் வீட்டையே சுற்றி வந்தார்.

இரவு நேரங்களில் குழந்தைகளின் அழுகைக்குரல் பூமணிக்குக் கேட்பத்தில்லை. சின்னையர் எழும்புவார்; மனைவியின் தூக்கத்தைக் கலைக்காமலேயே குழந்தைகளைத் தூங்க வைப்பார். சின்னையருக்குக் கஷ்டம் தரக்கூடாது என்பதற்காக, அணையக் காத்திருக்கும் குமிழி விளக்கின் வெளிச்சத்தில் சில நேரங்களில் பூமணி விழித்திருப்பாள். அந்த நேரங்களில்தான் சின்னையர் எரிந்து விழுவார்.
“பேசாமல் படப்பா; நான் எழுப்பி விடுவன்தானே” என்பார், சினத்துடன்.

பூமணி மாமிக்கு உள்ளம் குளிரும். தன் கணவன் தன்னில் வைத்திருக்கும் பாசத்தை நினைத்து அவள் கண்ணில் கண்ணீர் கோலமிடும்.

குணத்தானில் மட்டும் பூமணி மாமிக்கு ஏதோ இனந்தெரியாத அந்த அன்பு - “அவன் சரியாத் தகப்பனை மாதிரி.”

★★★

மணலாற்றில் சண்டை தொடங்கிவிட்டது.

பூமணி மாமிக்கு இப்போது ஓய்வில்லை; ஒரே வேலை. அந்தச் சந்திக்குப் போகவும் கலவரத்துடன் காத்திருக்கவும் அவளுக்கு நேரமில்லாமல் போய்விட்டது.

சின்னையர் திண்ணையில் காவலிருப்பார். காட்டுக்குச் சாப்பாடு கொண்டுபோக வேண்டும். அவரது துப்பாக்கி கைகளில் இறங்காமல் எப்போதும் கிடக்கும் ஒரு நாள், பூமணி மாமியின் கடைசி மகள் விழுந்தடித்து ஓடிவந்தாள்.

“அம்மா, குணம் அண்ணை எங்கட ஊருக்காலை காட்டுக்குப் போகிறார்” என்றாள்.

பூமணி மாமி சேலைத் தலைப்பை உதறியபடியே வெளியே வந்தாள்.

“உங்களை வரவேண்டாமாம். தான் போகேக்கை உங்களைப் பாக்க வாறதாம்.” அவள் தயங்கியபடியே மெதுவாகச் சொன்னாள். பூமணி மாமிக்குக் கோபம். விளங்காத வார்த்தைகளால் ஏதேதோவெல்லாம் ஏசினாள். சின்னையர் எழுந்து வாசலுக்கு வந்தார்.

“மகன், உடைஞ்சு கிடக்கிற பள்ளிக் கூடத்தைப்பார்த்துக் கொண்டு நிக்கிறான்” என்றுவிட்டு மண்டாடிக் கிழவர் சென்றார்” சின்னையர் அந்த இடத்திற்குப் போகுமுன்பே, அவன் போய் விட்டான்.

பூமணி மாமிக்கு இப்போது ஒரே வேலை. அவள் ஒரு இடத்தில் நிற்காமல் சுழன்று கொண்டிருந்தாள்.

சின்னையர் காத்திருப்பார், காட்டுக்குச் சாப்பாடு கொண்டு போக வேண்டும். இரவிலும் பகலிலும் மாமியின் அடுப்புப் புகைந்து கொண்டிருக்கும். இடை இடையே அவளின் நினைவுகள் பிள்ளைகளிடம் செல்லும்.

“மூன்று பேரும் எங்கெங்கயோ எப்படியோ? அதுவும் குணத்தான் காட்டுக்கை போயிருக்கிறான்.” அவள் விழிகள் கலங்கும். நாட்கள் சென்று கொண்டிருந்தன. மணலாற்றில் சண்டை தொடர்ந்து கொண்டிருந்தது.

ஒரு பகற் பொழுதில், பூமணி மாமி அடுப்புடன் போராடிக்கொண்டிருந்த போது... மாமி நெடுகவும் காத்திருக்கும் அந்தக் கரிய நெடுஞ்சாலையால் - எழு எட்டு உடல்களைக் சுமந்துகொண்டு ஒரு அழுக்குப் பச்சை வாகனம், செம்மலையைக் கடந்து மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது.

அதில் பூமணி மாமியின் இரண்டாவது மன் குணத்தானும்...

★★★

சின்னையரின் படலைக்குள் நான்கு ஐந்து இளைஞர்கள் நின்றனர். அவர்களின் கைகளில் ஆயுதங்கள் இருந்தன. சின்னையர் எழுந்து சென்றார். சின்ன மகளும் அவருக்குத் தெரியாமல் பின்னால் போனாள் சின்னையருக்கு அவர்கள் ஏதோ இரகசியமாக...

சின்னவள் ஓடி வந்தாள்.

“அம்மா - குணமண்ணை...” பூமணி மாமி வெளியே வந்தாள். சின்னையர் தளர்ந்த நடையுடன் வந்து கொண்டிருந்தார்.

“என்ன... என்...ன... ப்பா...?”

“குணத்தான்...”

பூமணி மாமி வீட்டுக்குள் ஓடினாள் நிலையில் தலையை அடித்தடித்து ஏதேதோ எல்லாம் சொல்லி அழுதாள். அவளின் மனதின் தாகங்களை வெளிப்படுத்த முடியாமல், வார்த்தைகளைப் பேசும் சக்தி அற்று - இது வரை நாளும் கதைகளைப் பேசிய கைகள் அர்த்தமற்று அசைந்தன.

காற்றுக்கு மட்டும் விளங்கும் அவள் குரல், ஊர் முழுவதும் இதயத்தை வெடிக்க வைத்து விடும் சோகத்துடன் பரவியது. சின்னையர் தளர்வுடன் திண்ணையில் இருந்தார்; கைகள் துப்பாக்கியை இறுகப் பற்றியவாறே இருந்தது.

அன்று கடற் காற்று மிக மோசமாக இருந்தது அலைகள் பெரிய சத்தத்துடன் - கரையை மோதின. தென்னைகள் நிலத்தைத் தொட்டுவிடுமாற் போலத் தடுமாறின. கடலில் பீரங்கிப் படகு ஒன்று அவலப்பட்டு அங்கும் இங்கும் ஓடி ஓடியே கண்டபடி குண்டுகளை வீசியது. இராட்சத விமானங்கள் இரவிலும் வந், குடி மனைகள் மீது குண்டுகளைப் போட்டன.

“அவங்களிலையும் சரியான இழப்பாம்” ஊர் கூடிப் பேசிக் கொண்டது.

★★★

பூமணி மாமியின் மூத்த மகன் பல்கலைக்கழகத்திலிருந்து வந்தான். தன்னால் இயன்ற மட்டும் விடாமல் அழுதான். பூமணி மாமி, சிறுவயதில் செய்த மாதிரியே அவன் தலையை அறுதலாகத் தடவிவிட்டாள்.

சின்னையர் இப்போதெல்லாம் இரவும் பகலும் காவலுக்குப் போகத் தொடங்கிவிட்டார். அந்தத் துப்பாக்கி அவரின் உடலுடன் ஒன்றிப் போய்விட்டது.

ஊரில் கதை பரவியது.

“செல்வனும் சரியான திறமை சாலியாம்.”

“அவன் குணத்தானை மாதிரி - தமையனை மாதிரி - அவனும் கெட்டிக்காரன்.” மாமி மனத்திற்குள் சொல்லிக் கொள்வாள். இப்போதும், எங்கு சண்டை நடந்தாலும் பூமணி மாமி அந்தப் பாம்பு போன்ற கரிய நெடுஞ்சாலையை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டு நிற்பாள்.

அந்த அழகான பச்சை நிற வாகனம், வீதியை ஒட்டிப்பித்தபடியே அமைதியாக வரும்; பூமணி மாமியைக் கண்டதும் நிற்கும். பூமணி மாமிக்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்லும் அந்த அன்பு நிறைந்த - கனிவான இளைஞன், இறங்கி வருவான். அவனது இடுப்பில் நட்சத்திரம் இடப்பட்ட கைத்துப்பாக்கி அழகாகப் பொருந்தி இருக்கும். குணத்தான் மாதிரி ஒரு பக்கம் இழுத்தபடியே, அவன் நடந்து வருவான்.

நன்றி: விடுதலைப்புலிகள் ... பங்குனி - சித்தரை 1992





அன்னையின் உண்ணாவிரதத்தை தடுத்து நிறுத்துவதற்காக மேடையை முற்றுகையிட்ட நிலையில் இந்திய இராணுவத்தினர்







# சர்வதேச மகளிர் தினம் 08.03.2023

03.02.2023

சர்வதேச மகளிர் தினம் ஒவ்வொரு வருடமும் மார்ச் 8-ம் திகதி ஒவ்வொரு கருப்பொருளின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பெண்களின் உரிமைகளும் மனித உரிமைகள் தான் என உலகிற்கு உரத்துக்கூறும் அதே வேளை அவர்களின் சம உரிமையுடன் மரியாதையோடு எந்த வித வேறுபாடுமின்றி வாழ வழி செய்ய அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த நாள் அனைவராலும் பின்பற்றப்படுகிறது.

இன்றைய நாள் நாம் நடந்து வந்த பாதையை திரும்பி பார்க்கும் பொழுது பல பெண்கள் பல சாதனையாளர்களாக உலகமே வியந்து பார்க்கும் வண்ணம் வரலாறு படைத்திருப்பதை காண்கின்றோம். பெண்களால் முடியாது என்று சொல்லப்பட்ட துறைகளில் பெண்கள் அனாயசமாக புகுந்து விளையாடுவதுடன் விமானிகளாக, விஞ்ஞானிகளாக , விண்வெளி ஆராச்சியாளர்களாக, நாட்டின் தலைவர்களாக, விவசாயிகளாக, தொழில்நுட்ப வல்லுனர்களாக சாதித்துக் கொண்டிருக்கின்றார்கள். என்னதான் ஒரு சில பெண்கள் இப்படி வியந்து பார்க்கும் நிலையில் இருந்தாலும் எல்லா பெண்களுக்கும் சமத்துவம் கிடைத்துள்ளதா என்று பார்த்தால், பல பெண்கள் கல்வி கற்கும் வாய்ப்போ அல்லது வன்முறையற்ற சுதந்திரமான, கௌரவமான வாழ்க்கை வாழும் நிலையோ இன்னும் உருவாக்கபட இல்லை என்பது தான் நிஜம்.

எவ்வாறு இந்த சர்வதேச தினம் உருவானது? 1908- ம் ஆண்டு கிட்டத்தட்ட 15,000, பெண்கள் மிக தைரியத்தோடு நியூயார்க் வீதிகளில் இறங்கி, நல்ல சம்பளத்திற்காகவும், ஒரு சிறந்த வேலை செய்யும் சூழலுக்காகவும், தமது வாக்களிக்கும் உரிமைகளுக்காகவும் போராடினார்கள். அடுத்த ஆண்டு அமெரிக்காவின் சோசலிஸ்ட் கட்சி வேலைநிறுத்தம் செய்தவர்களைக் கௌரவிப்பதற்காக ஒரு தேசிய மகளிர் தினத்தை அறிவித்ததையடுத்து, 1901-ல் அது உலக மயமானது. 1911-ல் முதலாவது சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. அதில் கிட்டத்தட்ட ஒரு மில்லியனுக்கும் அதிகமான பெண்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

முதலாவது பெண்களுக்கான சர்வதேச தினம் முன்னெடுக்கப்பட்டு நூற்றிப்பத்து வருடங்கள் உருண்டோடிவிட்டன. ஆனால் இன்றும் பெண்கள் தமது உரிமைகளுக்காகவும் சமத்துவத்திற்காகவும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். பெண்களின் புரட்சிகர போராட்டங்களின் விளைவாக பெண்கள் வாக்குரிமை, காணி உரிமை, கல்வி உரிமை போன்ற உரிமைகளை பெற்று சுதந்திரத்தை சுவீகரித்தாலும், இன்றும் அவர்கள் தமது சம உரிமைக்காக குரல் கொடுத்து வருகின்றார்கள்.

இன்றும் இந்தியா, கம்போடியா, பாகிஸ்தான், நேபால், யெமன் , பப்புவா நியூ கினி, ஹெய்டி, எகிப்து, குவாத்தமாலா, போன்ற நாடுகளில் ஆண்களின் கல்விற்கு முன்னுரிமை அளிக்கப் படுவதோடு, பெண்கள் இரண்டாம் தரமாகவே பார்க்கப்படுகிறார்கள். ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் பெண்களின் உயர் கல்வி முற்றாக மறுக்கப்பட்டுள்ளது. ஐந்தாம் ஆண்டு வரை மட்டுமே இந்நாட்டில் பெண்கள் கல்வியை தொடர முடியும்.

கல்வியில் பாலின சமத்துவமின்மையானது, பெண்களின் வளர்ச்சியை பாதிப்பதோடு அவர்களின் சுயமதிப்பையும் பாதிப்பதாகவும் அது அமைகின்றது. சமமான கல்வியை பெறுதல் என்பது அடிப்படை மனித உரிமைகளில் ஒன்று என்பதை கடந்து சமூக மாற்றத்திக்கான முக்கிய காரணியாக அமைகின்றது. பொருளாதார ரீதியில் பெண்கள் முன்னேறி ஒரு நிலையான மேம்படுத்தப்பட்ட வளர்ச்சியை நோக்கிய பயணத்திற்கு கல்வி இன்றியமையாத ஒன்றாகின்றது. பெண்கள் சுதந்திரமாக கல்வி கற்கும் பாலின சமத்துவத்தை உருவாக்கும் கடமை சமூகத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் உள்ளது.

அடுத்த மிகப்பெரிய சமூகப் பிரச்சனையாக பெண்களுக்கெதிரான வன்முறைகள் பலவடிவங்களில் இன்று அரங்கேறிக் கொண்டிருக்கின்றது, ஒரு சில பெண்கள் பாதுகாப்பாக இந்த சமூகத்தில் வாழ முடிந்தாலும் பல பெண்கள் பல சவால்களுக்கும், வன்முறைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய சூழலே இந்த சமூகத்தில் உள்ளது. 2020- ல் வெளிவந்த உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின் படி கிட்டத்தட்ட 47,000. பெண்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களாலே கொல்லப்படுகிறார்கள். தங்கள் சொந்த குடும்ப உறுப்பினர்களால் பெண்கள் அடிக்கப்படுவதும் , அடிமைகளாக நடத்தப்படுவதும் கொலை செய்யப்படுவதும் சமூகத்தில் ஏற்று கொள்ள முடியாத கொடுமையாகும். ஒரு குடும்பம் ஒரு பெண்ணுக்கு பாதுகாப்பாக இருப்பதுடன் அவள் முன்னேற்றத்திற்கு உறுதுனையாய் இருப்பது அவசியமாகும். கிட்டத்தட்ட 47, நாடுகளில் கணவன்மார்களின் துஸ்பிரயோகத்தில் இருந்து பெண்களை பாதுகாக்க இதுவரை எந்த சட்டங்களும் உருவாக்கப்படவில்லை. கிட்டத்தட்ட 45, நாடுகளில் குடும்ப வன்முறைக்கு எதிரான சட்டங்கள் கொண்டுவர படவில்லை.




இதுவரை பெரும்பான்மையான நாடுகளில் பெண்களுக்கு சமனான ஊதியத்தை நடை முறைப்படுத்தவில்லை. ஒரே துறையில், நிகரான கல்வியை பெற்று, ஆணுக்கு நிகராக அவர்கள் கடினமாக உழைத்தாலும் ஆணுக்கு ஒரு ஊதியமும் பெண்ணுக்கு ஒரு ஊதியமும் வழங்கப்படுவது அவர்கள் உழைப்பை சுரண்டுவதற்கு சமமாகும்.

ஆகவே சமூகம் என்ற அடிப்படையில் நம் அனைவருக்கும் உள்ள கடமை என்ன? ஒரு பெண் நமது சமூகத்தில் பாதுகாப்பாக கௌரமாக வாழ முடிகிறதா? ஒரு பெண் அல்லது ஒரு பெண் குழந்தை வன்முறைக்கு முகம் கொடுக்கும் போது சமூகம் எவ்வாறு எதிர்வினையாற்றுகின்றது? சமூகத்தில் வாழும் ஒவ்வொரு குடும்பமும் தங்கள் பெண்குழந்தைகள் ஒவ்வொருவரும் கல்வி கற்று, துணிவாக முடிவெடுக்கும் ஒரு தலைமைத்துவ பண்பு கொண்ட ஒரு பெண்ணாக பிரகாசிக்க வேண்டும் என்று நினைத்தாலே பல மாற்றங்கள் தானாக உருவாகும். பாடசாலைகளில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, வன்முறைகளை எவ்வாறு தடுக்க முடியும் என்பதை அனைத்து ஆண் பெண் மாணவர்களுக்கும் போதிக்க வேண்டும். துஸ்பிரயோகங்கள் மற்றும் வன்முறைகளை எவ்வாறு அடையாளம் காண முடியும் என்பதை கற்றுக்கொடுப்பதுடன், அப்படி முகம் கொடுக்கும் பட்சத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

சிறு வயதில் இருந்தே சக மாணவர்களை மதிக்க கற்றுக் கொடுக்கும் போது மற்றவர்களும் மரியாதைக்கு உரியவர்கள் என்கிற விதையினை அவர்கள் மனதில் விதைக்கும் போது அனைவரும் ஒருவரையொருவர் சமமாக மதிக்க பழகுவதுடன் ஒரு அழகான பண்பை வளர்த்துக் கொள்வார்கள். இந்த பண்பு ஒவ்வொரு குடும்பங்களில் கூட வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் குழந்தைகளை ஆண் பெண் பேதமின்றி சமமாக வளர்ப்பதுடன் எந்த காரணத்திற்காகவும் வன்முறையை ஊக்குவிக்க கூடாது. பெண்களை தலைமைத்துவத்தில் தட்டி கொடுக்கலாம். பொதுசேவையில் ஈடுபட அவர்களை ஊக்குவிக்கலாம். வறுமையான குடும்பங்கள் அல்லது பெண் தலைமை குடும்பங்களை சேர்ந்த பெண் குழந்தைகள் கல்வியை தொடர வாய்ப்புக்களை உருவாக்கலாம். பெண்களை பாதுகாப்பதற்கு என்னென்ன கொள்கைகளை உருவாக்க முடியுமோ அவற்றை அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து உருவாக்கவும் செயற்படுத்தவும் சமூகப் பொறுப்புள்ளவர்கள் இணைந்து முன் வர வேண்டும்.

ஒரு அழகான சமத்துவமான சமூகத்தை எமது குழந்தைகள் வாழ நாம் அனைவரும் இணைந்து உருவாக்க இந்த சர்வதேச பெண்கள் நாளில் உறுதியெடுத்துக் கொள்ளலாம்.

நன்றி: ராஜி பாற்றர்சன்




# 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம்!

தவிசாளர் எஸ். ஜே. வி. செல்வநாயகம், கியுசி, பா.உ (காங்கேசன்துறை)



**1976 மே 14ஆந் தேதியன்று வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் முதலாவது தேசிய மாநாட்டில் ஏகமனதாகக் கைக்கொள்ளப்பட்ட தீர்மானம்.**

1976 மே 14ஆந் தேதியின்று (வட்டுக்கோட்டைத் தொகுதி யிலுள்ள) பண்ணாகத்தில் கூடுகின்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் முதலாவது தேசிய மாநாடு, இலங்கைத் தமிழர்கள் தங்களின் தொன்மைவாய்ந்த மொழி யினாலும் மதங்களினாலும் வேறான கலாசாரம், பாரம்பரியம் ஆகியவற் றினாலும் ஐரோப்பிய படையெடுப்பாளர்களின் ஆயுதப்பலத் தினால் அவர்கள் வெற்றி கொள்ளப்படும் வரை பல நூற்றாண் டுகளாக ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் தனிவேறான அரசாகச் சுதந்திரமாக இயங்கிய வரலாற்றின் காரணமாகவும் எல்லா வற்றுக்கும் மேலாக தமது சொந்தப் பிரதேசத்தில் ஒரு தனி நாட்டினமாக வாழ்ந்து தம்மைத் தாமே ஆளும் உலவுருதி யாலும், இலங்கை வாழ் தமிழ் மக்கள் சிங்களவரில் இருந்து வேறுபட்ட ஒரு தனிநாட்டினம் என்று இதனால் பிரகடனப் படுத்துகிறது.

மேலும் 1972 இன் குடியரசு அரசியலமைப்பு தமிழ் மக்களைப் நவ காலனித்துவ எஜமானர்களான சிங்களவர்களால் ஆளப் படும் ஓர் அடிமைத் தேசிய இனமாக ஆக்கியுள்ளதென்றும் தமிழ்த் தேசிய இனத்தின் ஆட்சிப்பிரதேசம், மொழி, பிரசாவுரிமை, பொருளாதார வாழ்க்கை, தொழில் மற்றும் கல்வி வாய்ப்புக்கள் ஆகியவற்றை இழக்கச்செய்வதற்கு சிங்கள வர்கள் தாம் முறை கேடாகப் பறித்துக் கொண்ட அதிகாரத்தைப் பயன்படுத்துகின் றனரென்றும் அதன்மூலம் தமிழ் மக்களின் தேசியத்திற்கான இயற்பண்புகள் யாவும் அழிக்கப்படுகின் றனவென்றும் இம் மாநாடு உலகுக்கு அறிவிக்கின்றது.

மேலும் தமிழ் ஈழம் என்ற தனிவேறான அரசொன்றைத் தாபிப் பதற்கான அதன் ஈடுபாட்டுக்கடப்பாடு தொடர்பில், வடக்கு மற் றும் கிழக்குப் பிரதேசங்களுக்கு வெளியே வாழ்கின்றவர்களும் வேலை செய்கின்றவர்களுமான பெரும்பான்மையான பெருந் தோட்டத் தொழிலாளர்களின் ஒரு தொழிற்சங்கமான இலங் கைத் தொழிலாளர்காங்கிரஸ் வெளிப்படுத்திய அதன் ஒவ் வாமைகளைக் கருத்தில் கொள்கின்ற அதேவேளையில்,

ஒவ்வொரு தேசிய இனத்தினதும் உள்ளியல்பான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான, இறைமை பொருந் திய, சமயச்சார்பற்ற, சமதர்மத் தமிழீழ அரசை மீட்டளித்தலும் மீள உருவாக்குதலும் இந்நாட்டில் தமிழ்த் தேசிய இனம் உளதா யிருத்தலைப் பாதுகாக்கும் பொருட்டுத் தவிர்க்க முடியாததாகி யுள்ளதென இம்மாநாடு தீர்மானிக்கின்றது.




**இம்மாநாடு மேலும் பிரகடனப்படுத்துவதாவது:**

**(அ)** தமிழ் ஈழ அரசு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களிலுள்ள மக்களைக் கொண்டதாக இருக்கவேண்டுமென்ப துடன் இலங் கையின் எந்தப்பகுதியிலும் வசிக்கின்ற தமிழ் பேசுகின்ற மக் களுக்கும் தமிழ் ஈழத்தின் பிரசாவுரிமையை விரும்பித்தெரி கின்ற உலகின் எப்பகுதியிலும் வசிக்கின்ற ஈழ வம்சாவழித் தமிழர்களுக்கும் முழுமையான, சமமான பிரசாவுரிமைகளை உறுதிப்படுத்தவும் வேண்டும். தமிழ் ஈழத்தின் ஏதேனும் சமயத்தைச் சேர்ந்த அல்லது ஆட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த சமூகமொன்று வேறு ஏதேனும் பிரி வினரின் மேலாதிக்கத் திற்குட்படாதிருத்தலை உறுதிப்படுத்தும் பொருட்டு தமிழ் ஈழத் தின் அரசியலமைப்பு சனநாயகப் பன் முகப்படுத்தற்கோட் பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

**(ஆ)** தமிழ் ஈழ அரசில் சாதி ஒழிக்கப்படவேண்டுமென்பதுடன், பிறப் பின் அடிப்படையில் பின்பற்றப்படும் பெருங்கேடான பழக்கமான தீண்டாமை அல்லது ஏற்றத்தாழ்வு முற்றாக ஒழித்துக் கட்டப்படவும் எவ்வகையிலேனும் அதனைக் கடைப் பிடித்தல் சட்டத் தால் தண்டிக்கப்படவும் வேண்டும்.

**(இ)** தமிழ் ஈழம் அவ்வரசிலுள்ள மக்கள் சார்ந்திருக்கக்கூடிய எல் லாச்சமயங்களுக்கும் சமமான பாதுகாப்பும் உதவியும் வழங்கு கின்ற சமயச்சார்பற்ற ஓர் அரசாக இருக்க வேண்டும்.

**(ஈ)** தமிழ் அரச மொழியாக இருக்க வேண்டும் எனினும் தமிழ் ஈழத்தில் சிங்களம் பேசுகின்ற சிறுபான்மைகள் அவர்களின் மொழியில் கல்வியையும் அலுவல்களையும் தொடர்வதற்கான உரிமைகள் சிங்கள அரசிலுள்ள தமிழ் பேசும் சிறுபான்மைகள் பாதுகாக்கப்படும் சரி எதிரிடையான அடிப்படையில் பாதுகாக்கப் பட வேண்டும்.

தமிழ் ஈழத்தில் மனிதனால் மனிதன் சுரண்டப்படுதல் தடை செய்யப்படும். உழைப்பின் மகத்துவம் பாதுகாக்கப்படும். சட்டத் தினால் அனுமதிக்கப்படும் எல்லைகளுக்குள் தனியார் துறை யின் இருப்புக்கு அனுமதி வழங்கப்படுகின்ற அதே வேளையில், பண்டங்களின் உற்பத்தி மற்றும் விநியோகம் என்பன அரச உரிமையின் கீழ் அல்லது அரச கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளப் படும். பொருளாதார அபிவிருத்தி சோசலிசத் திட்டமொன்றின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும். ஒரு தனிநபரின் அல்லது குடும் பத்தின் செல்வம் தொடர்பில் உச்சவரம்பு விதிக்கப்படும். இவ் வகையில் தமிழ் ஈழம் ஒரு சமதர்ம அரசாக இருக்க வேண்டும்.

தமிழ் தேசிய இனத்தின் இறைமையையும் சுதந்திரத்தையும் வென்றெடுப்பதற்கான போராட்டத்திற்கான செயல்திட்ட மொன்றை மிதமிஞ்சிய தாமதமின்றி வகுத்தமைத்து அதனைத் தொடங்கவேண்டுமென தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி யின் செயற்குழுவை இம்மாநாடு பணிக்கின்றது.

மேலும் இம்மாநாடு, சுதந்திரத்திற்கான இப்புனிதப்போரில் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க முன்வரும்படியும் இறைமையுள்ள தமிழ் ஈழ அரசென்ற இலக்கு எட்டப்படும்வரை அஞ்சாது போரிடும் படியும் பொதுவில் தமிழ்த் தேசிய இனத் துக்கும் குறிப்பாக தமிழ் இளைஞர்களுக்கும் அறைகூவல் விடுக்கின்றது.

**(இது 1976 மே 15 ஆந் தேதியன்று திரு. செல்வநாயகம், கியு.சி., பா.உ. அவர்கள் தலைமையில் வட்டுக்கொட்டைத் தொகுதி யிலுள்ள பண்ணாகத்தில் நடைபெற்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் 1 ஆவது தேசிய மாநாட்டில் ஏகமனதாகத் கைக் கொள்ளப்பட்ட தீர்மானம். 1977 இல் இதனை முன்வைத்தத் தேர்தலுக்குச் சென்ற த.ஐ.வி.மு. தமிழ் வாக்காளர்களிடமிருந்து அமோகமான ஆணையைப் பெற்றது. இதுவே ஈழத்தமிழர் சனநாயக முறையில் நடத்தப்பட்ட ஒரு வாக்கொடுப்பில் சுதந்திரமாகத் தமது விருப்பை வெளிப்படுத்தக் கூடுமாயிருந்த இறுதித் தடவையாயிருந்தது.)**


AFFORDABLE REFRIGERATION SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install used &
new Walk in Cooler, Walk in Freezer
Kapil: 647.515.8643
kapil.afr@gmail.com


New
RANGANAS
JEWELRY
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
NEW RANGANAS JEWEL HOUSE
SINCE 1996
கனடா வரலாற்றில்
எங்கும் கண்டிடாத
சேவை
சிங்கப்பூர், டுபாய் நகைகள்
மிகவும் மலிவான விலையில்
Singapore, Dubai Jewellery
for Lowest Price
1%
முதல் தங்க
நகை
அடைகு
சேவை
Markham & Steeles
(Yellow Building)
திருமணத்துக்கான தாலிக்கொடி
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள கனடாவில்
நம்பிங்கை நாணயம் கைராசி
ஒரே இடம் நியூ ரங்கனாஸ்
Tel: 647.702.2159
647.947.2864
New
RANGANAS
JEWELLERY
647-947-2864
6055 Steeles Ave., E. Unit C102, Scarborough ON M1X 0A7
www.newranganasjewelhouse.com kprranga@hotmail.com


MORTGAGE
Residential/Commercial/Industrial
& Investment Properies
SUBRA
MORTGAGES INC.
1st, 2nd & 3rd Mortgages
Purchase Refinance
Renewal Switches
Equity Line of Credit
Pre-Approvals
Self-Employed
Multi Rental Properties
New Immigrants
Mortgage In
Any Situations
WE
DEAL
WITH
ALL
BANKS
LOAN
LINE OF
CREDIT
NESAN
416-908-5656
www.subra.com or www.nesan.ca
email:mortgage@subram.com
MORTGAGE ALLIANCE
Independently Owned & Operated
Lic. No: M15001465, Brokerage No: 10530
Corp Off: 2005 Sheppard Ave E, Suite 200
North York, ON M2J 5B4
Office: 1585 Markham Rd, Unit 406, Scarborough ON M1B 2W1
Off: 416-660-5656/Fax: 647-351-3099/ Toll: 1-844-878-2721




# கிளாலிப் படுகொலைகள் 02 ஜனவரி 1993 தொடக்கம் 29 யூலை 1993 வரை




யாழ் குடாநாட்டினையும் அதன் வெளி நிலப் பரப்பையும் ஊடறுத்துச் செல்லும் பிரதான தரைவழி மார்க்கம் ஆனையிறவு ஆகும். 1990 ஆம் ஆண்டு ஏப்பிரலுக்கு முன்னர் யாழ் குடாநாட்டிலிலுள்ள எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் போக்குவரத்து, விநியோகப் பாதையாக ஆனையிறவு ஊடான தரை வழிப் பாதையே அருந்தது. 1990ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மீண்டும் ஆரம்பமான போரின் விளைவால் தரைவழிப் பாதை மூடப்பட்டது.

இதன் பின்னர் யாழ் மக்களின் போக்குவரத்து நகர்வுகள், உணவு விநியோக மார்க்கங்கள் என்பன ஆனையிறவுக்கு மேற்குப் புறமாக அமைந்துள்ள பூநகரி-கேரதீவு சங்குப்பிட்டியினூடாக அமைந்தது. இப்போக்குவரத்து மார்க்கம் கடல் நீரேரியூடாக இருந்தது. மக்கள் பெருஞ்சிரமங்களிற்கு மத்தியில் கேரதீவு சங்குப்பிட்டியினூடான கடல்நீரேரியைக் கடப்பதற்கு பயணப் படகு (Ferry) ஒன்றைப் பயன்படுத்தினார்கள். இதன்மூலம் விநியோகப் பொருட்களைக் கொண்ட பாரவூர்திகள் பலமான வாகனங்கள் என்பன நகர்த்தப்பட்டன.

மக்கள் பயணஞ்செய்த இப்பாதையும் 1991 ஆம் ஆண்டில் பூநகரியை இராணுவத்தினர் கைப்பற்றியதனால் தடைப்பட்டது. பின்னர் யாழ் குடாநாட்டு மக்களின் போக்குவரத்துப் பாதையாக வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஊடான கடற்கரையோரப்பாதை இருந்தது. இதுவும் 1991 ஆம் ஆண்டு “ஒப்பறேசன் பலவேகயா-01” இராணுவ நடவடிக்கையின் மூலம் இராணுவதத்தினரால் கைபப்பற்றப்பட மக்களின் போக்குவரத்தும் தடைப்பட்டு. குடாநாட்டு மக்கள் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஊடான கடற்கரையோரப் பாதைக்கும் ஆனையிறவுக்குமிடையில் அமைந்த கொம்படிப் பாதையினைப் பயன்படுத்தினர். இப்பாதை பிரயாணத்திற்கு ஒவ்வாத பாதையாகக் காணப்பட்டது. அப்படியிருந்தும் இதனூடாக மக்கள் பயணித்தார்கள். இயற்கையால் பிரயாணத்திற்கு ஒவ்வாத பாதையாக விளங்கிய கொம்படிப் பாதையினூடு கடுந்துன்பங்களுக்கு மத்தியில் மக்கள் பயணித்தார்கள்.




“பலவேகய 02” இராணுவ நடவடிக்கை மூலம் இராணுவம் ஆனையிறவு, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு போன்றவற்றில் இராணுவத் தளங்களை தொடர் இராணுவ வேலிகளாக அமைத்ததனால் மக்கள் பயணஞ்செய்த இக் கொம்படிப் பாதையும் தடைப்பட்டது. இதன் பின்னர் யாழ் குடாநாட்டிற்கும் ஏனைய இடங்களுக்குமான வெளித் தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்ட நிலையில் எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களிற்கான உணவு, மருந்து உட்பட அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் எடுத்துச் செல்வதற்கான பாதை இல்லாது தவித்த ஆயிரக்கணக்கான மக்கள், 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கிளாலிக்கடல் நீரேரியினூடான கடற் போக்குவரத்தினை மேற்கொண்டார்கள்.

யாழ் குடாநாட்டையும், அதன் வெளி நிலப்பரப்பையும் ஊடறுத்து ஏறத்தாழ முப்பது மைல் உள்நுழைந்து, பொன்னாலைதொட்டு தலைமன்னார் வரை நீண்டு, பரந்த கடலால் நீரூட்டப்பட்டு இருந்தது யாழ்ப்பாணக் கடல் நீரேரி. கிளாலிக்கரையிலிருந்து மறுகரையில் ஆலங்கேணிவரை ஏறக்குறைய இருபது கடல்மைல் தூரங்கொண்ட இக்கடற்பிரதேசம் பயணங்களிற்கு, விநியோக மார்க்கங்களிற்கு ஒவ்வாததாக, அமைந்தாலும் பெருஞ்சிரமங்களின் மத்தியில் ஏறக்குறைய நான்கு மணித்தியாலம் பயணித்தே மறுகரையை அடைய முடியும். பகல் நேரங்களிற் பயணிக்க முடியாத நிலையிருந்து. இரவு நேரங்களிலேயே பயணிக்கக்கூடியதாக எட்டு குதிரை வலு கொண்ட இயந்திரப் படகுகள் மூலம் தமது பிரயாணங்களை மக்கள் மேற்கொண்டனர்.

1992ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்போக்குவரத்து மார்க்கத்தை தடைசெய்யும் நோக்கில் தாக்குதல்கள் கடல் நீரேரியின் இருபக்கமும் அமைத்திருந்த ஆனையிறவு இராணுவத்தளம் மற்றும் பூநகரி இராணுவத்தளம் ஆகியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. மேலும் வான்படையும் இத் தடைநோக்கிற்கு



உதவியது.

1993 ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாம் திகதி கிளாலியிலிருந்து ஆலங்கேணிக்குச் சென்று கொண்டிருந்த இயந்திரப் படகுகளில் இயந்திரப் பழுது காரணமாக நடுக்கடலில் நின்ற நான்கு படகுகளிலிருந்த பயணிகள் மீது மிக அண்மித்து வந்த கடற்படையினர் கூரிய ஆயுதங்களாலும், துப்பாகிகளாலும் தாக்கியதால் படகிற் பயணித்த அரச உத்தியோகத்




தர்கள், மாணவர்கள் உட்பட முபப்த்தைந்து பேர் வெட்டப்பட்டும், சுடப்பட்டும் உயிரிழந்தாடகள். ஐம்பது பேர்வரையானவர்கள் காயங்களுடன் மறுநாள் காலை கரையினை அடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் உயிர் தப்பியவர்களில் ஒருவரான கந்தையா செல்லத்துரை (வயது 68) என்பவர் கிளாலிக்கடலில் ஏற்பட்ட சம்பவங்கள் பற்றி ஊடகங்களுக்கு மறுநாள் அளித்த பேட்டியில் விரிவாக வெளிப்படுத்தியிருந்தார்.

1993 ஆம் ஆண்டு ஜனவரி இரண்டு, யூலை இருபத்தொண்பது எனப் பல்வேறுபட்ட காலப் பகுதியிலுமாக 1993ஆம் ஆண்டு டிசம்பர் வரைக்கும் நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கிளாலிக் கடற்பரப்பில் பயணித்த போது, கடற்படையினரின் தாக்குதல்களினால் உயிரிழந்துள்ளதுடன், நூறிற்கும் மேற்பட்டவர்கள் அங்கவீனமானார்கள். மேலும் நூற்றிஜம்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். இச்சம்பவங்களில் கிளிநொச்சி மாவட்டக் கல்வி அதிகாரி உட்பட யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள், ஆசிரியர்கள், வெளிநாட்டிலிருந்து தமது உறவுகளைப் பார்வையிட வந்தவர்கள் எனப் பலதரப்பட்ட பொதுமக்களும் பாதிக்கப்பட்டார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இ.இன்பராசா இ.மி.ச.ஊழியர் 47
02. இ.ஜெராட் கடற்றொழில் 26
03. இளையதம்பி மகேஸ்வரி வீட்டுப்பணி 51
04. இளையதம்பி சிவசீலன் பல்.கலை மாணவன் 25
05. இரத்தினம் சிறீறஞ்சன் - 29
06. இரத்தினசிங்கம் எருமின் ஜசேக் இன்பராசா இ.மி.ச.ஊழியர் 47
07. ந.இராசன் கமம் 28
08. ந.கிளி கமம் 26
09. ந.இராசலிங்கம் வியாபாரம் 32
10. ந.நாகம்மா - 60
11. ந.துரை கமம் 36
12. நா.பரிமளம் - 37
13. க.கமலதாசன் கடற்றொழில் 17
14. க.செல்லத்துரை - 46
15. க.சிவானந்தன் வியாபாரம் 35
16. க.ஏகாம்பரம் கமம் 45
17. குப்புசாமி செல்லமுத்து - 45
18. கா.சின்னத்தம்பி கமம் 60
19. கதிரமலை ஜெயந்தி மாணவி 25
20. த.கமலராசன் மாணவன் 10
21. த.பூபதி வீ.பணி 28
22. த.றாகினி மாணவி 17
23. தர்மராஜா பகீரதன் - -
24. தம்பிஜயா ராகினி இல்லை 18
25. தற்பரநாதன் முகுந்தன் மாணவன் 20
26. ம.இராசையா கடற்றொழில் 23
27. ம.யோசப்யூட் கடற்றொழில் 18
28. முத்தையா சந்திரலீலா - 35
29. மதுரநாயகம் அமிர்தநாயகி - 39
30. மி.ஜேசுதாசன் மாணவன் 19
31. மிக்கேல் ஜேசுதாசன் மாணவன் 19
32. முருகேசு சடராசா கடற்றொழில் 40
33. அ.அடைக்கலம் சாரதி 63
34. அப்புக்குட்டி பரமசிங்கம் சாரதி 38
35. யோசெப்யேசுராஜா யேசுநாயகம் தனிதாஸ் கடற்றொழில் 18
36. தெ.கனகாம்பாள் வீட்டுப்பணி 42
37. செ.ரூபன் ஞானசீலன் கடற்றொழில் 19
38. செ.பாக்கியராசா கடற்றொழில் 30
39. செ.அருள்தாஸ் கடற்றொழில் 21
40. செல்வராசா பாக்கியராசா - 27
41. செல்லத்துரை சாந்தலிங்கம் கடற்றொழில் 50
42. ஞானசூரியர் வின்சன்நிக்கிளஸ் - 22
43. ஞானப்பிரகாசம் ஞானபாலன் படகோட்டி 32
44. ஞானபாலன் படகோட்டி 33
45. ச.பாலசுப்பிரமணியம் சுயதொழில் 54
46. சந்திரன் அருணானந்தி கூலி 29
47. சி.கனகலிங்கம் கடற்றொழில் 45
48. சின்னவன் கதிரவேலு - 44
49. சிவலிங்கம் அன்னபூரணம் - 40
50. சிவலிங்கம் செல்லத்துரை நீதிமன்ற ஊழியர் 45
51. சண்முகம் சபாநாதன் - 65
52. ரவீந்திரன் இந்திரவதனா - 41
53. ஏரம்பமூர்த்தி அசோகன் - 36

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. க.கணேந்திரநாதன் முகாமையாளர் 63
02. கந்தையா செல்லத்துரை - 68
03. கநத் சாமி மதியரசன் வியாபாரம் 20
04. தவராசா தயாளினி மாணவி 05
05. செல்வராசா குணசிங்கம் - 40
06. செல்வரத்தினம் ஜங்கரன் - 27
07. சின்னையா சந்திரகுமார் - 20
08. வி.,ன்பநாதன் கடற் றொழில் 37
09. விநாயகமூர்த்தி இன்பநாதன் - 26

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



30-07-1993

கிளாலிக் கடலில் நேற்றுக்காலை சிறிலங்கா கடற்படையினரால் கோரமாகக் கொல்லப்பட்ட பொதுமக்களில் பெண்மணி ஒருவரின் சடலத்தை முதலாவது படத்திலும், வயோதிபரின் சடலத்தை இரண்டாவது படத்திலும் காணலாம். படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் நால்வரின் சடலங்கள் கரையில் வைக்கப்பட்டுள்ளதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# சுன்னாகச் சந்தைப் படுகொலை – 28 மார்ச் 1984

யாழ் மாவட்டத்தின் வலிகாமம் தெற்குப் பகுதியில் யாழ் நகரிலிருந்து பத்து கி.மீ. தூரத்தில் கே.கே.எஸ். வீதியில் சுன்னாகச் சந்திக்கு அருகில் சுன்னாகச் சந்தை அமைந்துள்ளது. யாழ் குடாநாட்டின் மிகப் பெருமளவான விவசாயப் பொருட்களை விற்பனை செய்யும் இடமாக இச்சந்தை அமைந்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட பல மாவட்டங்களிலிருந்தும் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்கள் இச்சந்தையில் விற்கப்பட்டன.

28.03.1984 அன் று மதியம் சுன்னாகம் பஸ் நிலையப் பகுதியிலும், சந்தைப் பகுதிகளிலும் தமது அன்றாட வேலைகளில் பெருமளவான மக்கள் கூடியிருந்தனர். திடீரென பஸ்நிலையப் பகுதிக்கு ட்ரக் வண்டியிலும், ஜீப்பிலும் வந்திறங்கிய விமானப் படையினர் பெரும் பரபரப்புடன் காணப்பட்டதுடன், யாரும் எதிர்பாராத வகையில் திடீரெனச் சுன்னாகப் பஸ் நிலையப் பகுதிகளிலும், சந்தையிலும் குழுமியிருந்த மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

விமானப் படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி அன்றைய தினம் தமது நாளாந்த அலுவல்களில் ஈடுபட்ட எட்டுப் பொதுமக்கள் உயிரிழந்ததுடன், ஐம்பது பொதுமக்கள் வரை படுகாயமடைந்தனர். சந்தை தீயூட்டப்பட்டதில் பல கடைகள் எரிந்து அழிந்தன. இதன் பின்னர் அவ்விடத்தை விட்டு விலகி மல்லாகப் பகுதியூடாக கே.கே.எஸ் வீதி வழியாக காங்கேசன்துறை நோக்கிச் சென்ற இராணுவத ்தினர் மல்லாகம் பகுதியில் தங்களது கண்களுக்குத் தென்பட்ட எல்லாப் பொதுமக்களையும் தாக்கினார்கள். இதில் ஒருவர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து தெல்லிப்பளைப் பகுதிக்குச் சென்ற விமானப் படையினர் யூனியன் கல்லூரியில் பரீட்சை முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவர்கள், மற்றும் அங்கு நடமாடிய பொதுமக்கள் மீதும் தாக்குதலை நடத்தினார்கள், இதில் இருபத்தாறு மாணவர்கள் காயமடைந்ததுடன், அவ்வீதி வழியாகப் பயணம் செய்த இருபது பொதுமக்களும் காயமடைந்தார்கள். பின்னஉ விமானப் படையினர் பலாலி முகாமிற்கு திரும்பிச் சென்றார்கள்.

இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது தொழில்)

01. கந்தையா பாலசுபப்பிரமணியம், 52, பாதுகாவலர்
02. நாகலிங்கம் சிவசுப்பிரமணியம், 54, சந்தை மேற்பார்வையாளர்
03. தம்பிமுத்து சுந்தரலிங்கம், 38, தொழிலாளி
04. வல்லிபுரம் சின்னத்துரை, 68 வியாபாரம்
05. வைரவி தியாகராசா, 42. நெசவு
06. பசுபதி தவமணி, 43, வீட்டுப்பணி
07. நடராசா யோகராசா, 27, வியாபாரம்

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# நாச்சிக்குடா படுகொலை — 16 மார்ச் 1996

வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு தொன்மையான பிரதேசமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரிப் பிரதேசம் விளங்குகின்றது. பண்டைய தமிழ் மன்னர்களின் தொன்மையான ஆட்சி மையமாகவும், வர்த்தக மையமாகவும் இது இருந்து வந்துள்ளது. அத்தோடு ஆரம்பகாலத்தில் கிளிநொசச்சி மாவட்டத்தில் அதிகூடிய மக்கள் தொகையினைக் கொண்ட பிரதேசசெயலர் பிரிவாகவும் பூநகரி இருந்தது. பூநகரிப் பிரதேசத்தில் பல மீனவர் குடியிருப்புக்களை உள்ளடக்கிய கிராமம் நாச்சிக்குடாக் கிராமம் ஆகும்.

16.03.1996 அன்று அதிகாலை 5:20 மணியளவில் வான்படையின் பைற்றரென அழைக்கப்படும் எம்.ஐ. இருபத்துநான்கு ரக உலங்குவானூர்தி நாச்சிக்குடா அன்னை வேளாங்கன்னிப் பகுதியிலுள்ள மீனவர் குடியிருப்புக்கள் மீது தாக்குதலை நடாத்தியது. அவ்வேளை வீடுகளில் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த பெண்கள், குழந்தைகள் மற்றும் கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களென மொத்தமாக இருபது பேர் இத்தாக்குதலில் உயிரிழந்ததுடன், அறுபத்திரண்டு பேர் பலத்த காயங்களுக்கும் உள்ளானார்கள்.

நூற்றுக்கணக்கான மீனவக் குடிசைகள் எரிந்து சாம்பலாகின. சம்பவத்திற் காயப்பட்ட அனைவரும் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர், இறந்தவர்களை அவர்களது உறவினர்கள் அடக்கம் செய்தனர். இத்தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதி மீனவர்கள் இடம்பெயர்ந்து வேறிடங்களில் வாழ்கின்றனர். இச்சம்பவம் தொடர்பாக நாச்சிக்குடாவைச் சேர்ந்த்த ஜேசுதாசன் ஆன்மேரி தெரிவிக்கையில்,

“என்னுடைய சொந்த இடம் நவாந்துறை யாழ்ப்பாணம். தற்போது கடற்கரை வீதி நாச்சிக்குடாவில் வசித்து வருகின்றேன். 1996ம் ஆண்டு மூன்றாம் மாதம் பதினாறாம் திகதி விடியற்காலை நாங்கள் நித்திரையாக இருக்கும் போது திடீரெனக் கடற்கரையோரமாக வந்த எம்.ஐ-இருபத்துநான்கு ரக உலங்கு வானூர்தி ஒன்று தாக்குதல் நடத்தியது. இதன் போது என்னசெய்வதென்று தெரியாத நிலையில் நாங்களனைவரும் சிதறி ஓடினோம். அதன்போது எங்களுடைய அண்ணையின் மகனுக்கும் மைத்துனரின் மகனுக்கும் காயம்பட்டது. எங்களுடைய உறவினர்கள் கை, காலை இழந்தனர். இச் சம்பவத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இருபது பேர் சம்பவ இடத்திலும் உயிரிழந்தனர். காயமடைந்தவர்கள் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கடல்வழியாக யாழ்ப்பாண வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். விமானம் திரும்பவும் வருமோ என்ற பதற்றத்தின் மத்தியில் இறந்தவர்களை உறவினர்கள் அடக்கம் செய்தார்கள். அதன் பின்னர் நாங்கள் இடம்பெயர்ந்து போய் காடுகளில் வாழ்ந்தோம். கிட்டத்தட்ட ஒரு கிழமைக்கு மேல் தொழிலுக்கு கடலுக்குப் போகமுடியவில்லை. காட்டுக்குள் இருந்த நாங்கள் பின்னர் படிப்படியாக கடற்கரையில் குடியேறத் தொடங்கினோம்.

திடீரென ஒரு நாள் மாலை 5மணியளவில் இரணைமாதா நகர்ப் பக்கமாக இருந்து வந்த வானூர்தி எங்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தியதில் செய்வதறியாத நாங்கள் திரும்ப காடுகளுக்குள் ஓடினோம். நாம் தற்போதும் பயந்த நிலையிற் தான் கரையோரத்தில் இருக்கின்றோம்.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சூசைப்பிள்ளை அல்பேட் கடற்றொழில் 50
02. யூலியஸ் டெவின் குழந்தை 1
03. கனகசிங்கம் தர்சினி மாணவி 10
04. கந்தையா இரமேஸ்வரன் மாணவன் 18
05. கந்தசாமி செந்தில்குமார் மாணவன் 16
06. குவாட்டஸ்கேஸ் சின்ராசன் - -
07. தவரி வேலாஜி - 68
08. மரியநாயகம் திரேசம்மா - -
09. மரியதாஸ் எட்வின் கடற்றொழில் 30
10. மகேந்திரன் யாழினி மாணவி 18
11. அன்ரன் டயஸ்கா - -
12. அன்ரன் ஜெகதீபா மாணவி 12
13. ஆசைப்பிள்ளை அல்போன்ஸ் கடற்றொழில் 50
14. அருளானந்தம் சேவியர் விசிற்றம்மா வீட்டுப்பணி 55
15. அலபே பான்ஸ் அமலோறப் வராணி வீடடுபப்ணி 22
16. பொன்னம்பலம் செல்வராசா கடற்றொழில் 68
17. மேரி அமலினி மாணவி 18
18. சேவியர் கொன்சலா மாணவி 14
19. விக்ரர் லூசியா - 24

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. சூசைப்பிரபா குழந்தை 02
02. இமிறோன் - -
03. இராசம்மா - 30
04. இருதயசீலன் - 34
05. யூனிற்று மாணவன் 16
06. யூத் - 90
07. நாகராணி - 62
08. நாச்சியம்மா - 40
09. கனகம்மா - 65
10. கந்தசாமி - 52
11. புஸ்பாயினி மாணவி 08
12. பரிமளம் - 44
13. பத்மசிறி - 25
14. பிரியா குழந்தை 04
15. பவானி - 20
16. பற்றிக் - 62
17. தர்மராசா - 22
18. திரேசம்மா - 65
19. மகிந்தன் மாணவன் 07
20. மாசில்தா - 24
21. மதிஜெனி - 20
22. மதியோகராசா - 25
23. மனோகரன் மாணவன் 15
24. மனோதா - 16
25. டன் - 23
26. அன்னைமேரி - 37
27. அன்ரன் - 34
28. அன்ரனிக்குயின்ரஸ் யூனிதா மாணவி 16
29. ஆனந்தி - 23
30. அனிஸ்ரா மாணவி 06
31. அனுசியா மரியனிட்டா - 20
32. அமுதராசு மாணவன் 10
33. அருள்சீலன் தர்மஜோதி - 22
34. அருள்சீலன் அருள்மேரி குழந்தை 04
35. அருளம் மேரி - -
36. அரவிந்தன் மாணவன் 07
37. கொன்ஸ்பேனல் - 32
38. கொன்சியா குழந்தை 4
39. பொன்னம்பலம் - 43
40. தேவராசா - 45
41. மேரி சிங்கராசா - 30
42. மேரிகொன்சலா - 18
43. மேரிறீட் மரியா - 28
44. செபமாலை - 65
45. சேவியர் - 30
46. செல்வநாயகி - 31
47. செல்வநிதி - -
48. செல்வராணி - 25
49. சுப்பையா - 76
50. சுதர்சன் - 21
51. சித்திரா - 34
52. சசிரேகா - -
53. சரண்யா - -
54. விமலதாஸ் - 26
55. வளர்மதி - 30
56. இராஜ்குமார் மாணவன் 14
57. ரசுபாலன் - 18
58. எமில்டா குழந்தை 04
59. எல்டா மாணவன் 14

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# பழைய வட்டக்கச்சி குண்டுவீச்சு — 26 மார்ச் 1998

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள பழைய வட்டக்கச்சி என்னும் கிராமம் கிளிநொச்சி மாவட்டத்தின் புராதன காலக் குடியேற்றக் கிராமங்களில் முதன்மையான ஒரு கிராமமாகக் காணப்படுகிறது. இக்கிராமம் இரணைமடுக் குளத்தின் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நீர் பெற்றுக் கொள்ளும் நெற்செய்கைப் பிரதேசமாகும். இதனால் இங்கு சிறுபோக நெற்செய்கையும் அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றது.

பழைய வட்டக்கச்சிக் கிராமம் தற்போது பெரியகுளமென அழைக்கப்படுகிறது. இக்கிராமம் தனக்கென சில சிறப்பான இயல்புகளைக் கொண்டுள்ளது. வளமான மண்ணும் சிறந்த நீர் வளமும் இப்பிரதேசத்தில் இருப்பதனால் இப்பிரதேச மக்கள் செல்வச் செழிப்புடனும் கல்வி வளத்துடனும் வாழ்கின்றார்கள்.

இராணுவதத்தினர் 1996ஆம் ஆண்டு காலப்குதியில் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றும் நோக்கில் “சத்ஜெய” இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர். விமானத் தாக்குதல் எறிகணைத் தாக்குதல் என்பவற்றை நடத்தியபடி முன்னேறி, மக்களின் வாழ்விடங்களையும், சொத்துக்களையும் அழித்தனர். இதன்போது பல பொதுமக்களும் உயிரிழந்தார்கள்.

1998.03.26ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.00மணிக்கு கிளிநொச்சி வான் பரப்பினுள் பெரும் இரைச்சலுடன் நுழைந்த விமானப் படையின் இரண்டு கிபீர் விமானங்கள் வட்டக்கச்சிப் பிரதேசத்தைச் சுற்றி வட்டமிட்டன. முதலில் கண்டாவளை - வெளிக் கண்டற் பகுதியில் ஒரு குண்டினையும் அதனைத் தொடர்ந்து பழைய வட்டக்கச்சிப் பிரதேசத்திலுள்ள உடையார் என்றழைக்கப்படும் அருணாசலம் வேலாயுதம் என்பவரது வீட்டிலும், வீட்டிற்கு அண்மித்த பிரதேசத்திலும் ஐந்து குண்டுகளையும் வீசியது. இதன்போது வீட்டு முற்றத்தில் பனங்கிழங்கைச் சுத்தப் படுத்திக் கொண்டிருந்த இருவரும் வீட்டினுள்ளிருந்த டையாரின் மகளும் மற்றும் காணியில் வேலை செய்துகொண்டிருந்த இருவரும் முன் வீட்டில் ஒருவருமாக மொத்தம் ஆறு பேர் உயிரிழந்தார்கள். ஐந்து பேர் காயங்களுக்குள்ளானார்கள். காயமடைந்தவஉகள் தருமபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இச்சம்பவத்தின் போது அருணாசலம் வேலாயுதத்தின் வீடு முற்றாக அழிந்ததுடன், அவருடைய இரண்டு உழவு இயந்திரங்கள், களஞ்சிய அறைகள் உட்பட அனைத்து உடமைகளும் அழிந்தன. அருணாசலம் வேலாயுதம் தெரிவிக்கையில், “எமது பகுதியில் நடந்த வான் தாக்குதலால் எனது மகளான மங்கயற்கரசி படுகொலை செய்யப்பட்டதுடன், எனது வீடு முற்றாக சேதமடைந்தது. இதில் ஐந்து பேர் உடல்சிதறிப் பலியானார்கள். எனது நெல்லு மூட்டைகள் யாவும் எரிந்துவிட்டன.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சண்முகம் தனபாலு தொழிலாளி 55
02. தியாகராசா பாலு தொழிலாளி 50
03. இராமநாதன் செல்லம்மா வீட்டுப்பணி 56
04. வேலாயுதம் மங்கயற்கரசி மாணவி 20
05. முத்தையா வசந்தகுமாரி வீட்டுப்பணி 26
06. கிஸ்ணசாமி வள்ளியம்மை வீட்டுப்பணி 65

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. வீரய்யா செல்வராசா - 40
02. கதிர்காமு பேபி - -
03. இராமநாதன் தேவகி - 23
04. பஞ்சலிங்கம் பாமினி அரசஊழியர் 32
05. வேலாயுதம் சிவகுமார் அரசஊழியர் 26

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# கச்சத்தீவு திருக்கச்சேச்சரநாதர் திருக்கோயில் எங்கே?

கூகுள் வரை படத்தில் கச்சத் தீவைப் பெரிதாக்கிப் பார்த்தால் அங்கு மேற்குக் கரையில் அண்ணமார் கோயில் இந்துக் கோயில் என இடுகை இருக்கும்.

கய், கயர், காய், தமிழின் வேர்ச் சொற்கள். அறு சுவைகளுள் கயர், கய்ப்புச் சுவை ஒன்று. உப்புச் சுவை கய்க்கும் சுவை. உப்பு நீர், உவர்நீர். கய்க்கும் நீர்.

தமிழில் நேயம், நேசம் ஆகும். பையன்கள், பசங்கள் ஆவார். வாயில், வாசல் ஆகும். வயம், வசம் ஆகும். யகர உச்சரிப்புக் காலப்போக்கில் சகர உச்சரிப்பாக மாறுவது இயல்பு. கயர், கசர். கயப்பு, கசப்பு. உப்புக் கயக்கும் அதே உப்புக் கசக்கும். கடல் நீர் , கச்சல் நீர். கடல் நீர் ஊறும் நிலம் கச்சல் நிலம் .

ஒரு தீவில் கிணறு தோண்டக் கயர் நீர் வருமாயின் கச்சல் நீர் வரும் தீவு, கச்சல் தீவு, கச்சத் தீவு. நாகப்பட்டினத்திலிருந்து கடாரம் நோக்கி வணிகக் கப்பல்கள் பயணிக்கின்றன. நக்கா வரம் தீவுக் கூட்டங்களைக் கடக்கும் இடத்தில் நன்னீர் கிடைக் குமா? எனத் தமிழ்க் கடலாடிகள் தேடுகின்றனர். கிணறு தோண்டக் கயர் நீர் ஊறுகிறது. எனவே அத் தீவில் நன்னீர் கிடைக்காது என்பதைத் தெரிவிக்கக் கச்சத் தீவு என்று பெயரிடு கின்றனர். பல்லாயிரம் ஆண்டுகளாக அத் தீவு கச்சத் தீவு.

நக்காவரம் தீவுக் கூட்டங்களில் தெற்கு எல்லையில் சுமாத்திரா விற்கு வடக்கே இந்திரா முனை என இன்று அழைக்கும் தீவின் பெயர் இன்றும் கச்சத் தீவு. கடலாடித் தமிழர் சூட்டிய பெயர். அட்மிராலிற்றி வரை படங்களில் (கப்பல் ஓட்டிகட்கு உதவும் பிரித்தானியத் தாயாரிப்பான வரை படங்களில்) இப் பெயரே உண்டு (ஆத்மிரலித்ய் ஊஹர்த்ஸ்)

அவ்வாறே நெடுந்தீவுக்கு மேற்காக உள்ள தீவில் கிணறு தோண்டினால் உவர் நீர் அல்லது கயர் நீர் அல்லது கச்சல் நீர் வருவதால் அந்தத் தீவின் பெயர் கச்சத் தீவு. பசுத் தீவு அல்லது நெடுந்தீவுக்கும் இராமேச்சரத்துக்கும் இடையே பயணிக்கும் வழிபடு பயணிகள், நன்னீர் கொண்டு செல்ல வேண்டும். வழியில் கச்சத் தீவு வரும் தங்கலாம். அங்கே நன்னீர் கிடைக் காது என்பதைச் சுட்டுவதே கச்சத் தீவு என்ற பெயர்.

கச்சத் தீவில் உள்ள சிவன்கோயில் திருக்கச்சேச்சரம். அருள் மிகு கயற்கண்ணி உடன் உறை கச்சேச்சரநாதர் திருக்கோயில் அமைந்த தீவு கச்சத் தீவு.

திருக்கோயில் வாயிலில் அருள்மிகு பிள்ளையார். அவரை வணங்கி உட்சென்று அருள்மிகு கயற்கண்ணி உடனுறை கச்சேச்சரநாதரை வணங்கி, சுற்று மண்டபங்களில் உள்ள அருள்மிகு வள்ளி தெய்வானை உடனுறை முருகப் பெரு மானை வணங்கி, அருள்மிகு பைரவரை வணங்கி, அருள்மிகு வீரபத்திரரை வணங்கி, வெளியே வந்து நெடுந்தீவில் இருந்தோ இராமேச்சரத்தில் இருந்தோ கொண்டு சென்ற பொங் கலுக்கு உரிய பொருள்கள், நீர் முதலியவற்றால் பொங்கல் பொங்கி வழிபடுவது ௧௦ (10) ஆயிரம் ஆண்டுகளாக நெடுந் தீவு மற்றும் இராமேச்சரச் சைவத் தமிழரின் மரபு..




௪௦௦ (400) ஆண்டுகளுக்கு முன்பு சங்கிலி மன்னனைத் தோற்கடிக்க மன்னார்த் தீவில் இருந்து இருமுனைத் தாக் குதலை மேற்கொண்டவன் போர்த்துக்கேயத் தளபதி பிலிப்பு டி ஒலிவரா. முதலில் தனது கடற்படையை அனுப்பினான். நெடுந் தீவுக்குப் போர்த்துக்கேயக் கடற்படை வந்தது. அங்கே சங்கி லிக்கு உதவியாக நிலைகொண்டிருந்த மலையாளத்துக் குஞ் சலியின் கடற்படை, போர்த்துக்கேயக் கடற்படையைத் தாக் கியது.

பின்வாங்கிய போர்த்துகேயக் கடற்படை, கச்சத்தீவில் தங்கியது. அங்கே இருந்த அருள்மிகு கயற்கண்ணி உடனாய கச்சேச்சர நாதர் திருக்கோயிலை முற்றுமுழுதாக உடைத்தது. பின்வாங்கிய போர்த்துக்கேயக் கடற்படையைக் குஞ்சலி துரத் தினான். கச்சத் தீவு சென்றான். போர்த்துக்கேயக் கடற்படையை முற்றாக அழித்தான். போர்த்துக்கேய வீரர்களைச் சிறைப் பிடித்தான். நெடுந் தீவுக்குக் கொண்டு வந்தான்.

வைகாசி தேய்பிறை எட்டாம் நாள் யாழ்ப்பாணத்தில் சங்கிலி யனைப் பிலிப்பு டி ஒலிவரா சிறைப் பிடித்ததும் நெடுந்தீவில் இருந்த குஞ்சலி வீரர் கடற்படை மலையாளத்துக்குப் புறப்பட்டது. நெடுந்தீவு போர்த்துக்கேயர் வயமானது. துப்பாக்கி முனையில் நெடுந்தீவில் வாழ்ந்த சைவர் சிலரைப் போர்த்துகேயர் கத்தோலிக்கராக மாற்றினர்.

கத்தோலிக்கத்துக்கு மாறாத சைவர்கள் கச்சத்தீவில் உடைந்து தரைமட்டமாகிய அருள்மிகு கயற்கண்ணி உடனாய கச்சேச்சர நாதர் திருக்கோயில் இருந்த இடத்தில் அண்ணமார் (சிவனின் சூலம்) திருமேனி வைத்து வழிபட்டு வருகின்றனர். நெடுந்தீவு மீனவருக்கும் தொண்டி தொடக்கம் இராமேச்சரம் வரை வாழும் தமிழக மீனவர்களுக்கும் இடையே திருமண உறவுகள் நெடுங்கால மரபு. எனவே நேர்த்திக் கடன்களை நிறைவேற்றத் தமிழகக் கரைகளில் இருந்தும் கச்சத் தீவுக்கு மீனவர் வருவர்.




கடந்த ௧௦௦ (100) ஆண்டுகளுக்குள் நெடுந் தீவுக் கத்தோலிக்க மீனவர் அந்தோணியார் சிலையை அமைத்து வழிபடத் தொடங்கினர். சைவ வழிபடு மரபுகள் தொய்வுற, கத்தோலிக்கத் திருவிழா மரபு அண்மையக் காலத்தில் தொடங்கியது.

௪௦௦ (400) ஆண்டுகளுக்கு முன்பு வரை பத்தாயிரம் ஆண்டு களுக்கும் கூடுதலாகக் கச்சத் தீவில் அமைந்திருந்த அருள்மிகு கயற்கண்ணி உடனாய கச்சேச்சரநாதர் திருக்கோயிலை மீண் டும் திருப்பணி செய்வித்துக் கட்டிக் குடமுழுக்கு நீராட்டினால் இலங்கையில் வாழ்கின்ற சைவர்களின் துன்பங்கள் துய ரங்கள் நீங்கும்.

நன்றி: **மறவன்புலவு க. சச்சிதானந்தன்**

# வடக்கில் வரலாற்று சிறப்பு ஆலயங்கள் அழிக்கப்பட்டு ஜனாதிபதிக்கு மாளிகை!

## நடராசா லோகதயாளன்

மார்ச், 09 2023





யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமம் வடக்குப் பகுதியில் மிகப் பழமை வாய்ந்த ஆலயங்களை இடித்து அழித்து அந்த இடத்திலேயே ஜனாதிபதிக்கு ஆடம்பர மாளிகை அமைக்கப்பட்டுள்ள விடயம் தற்போது தெரியவந்துள்ளது.

கீரீமலையில் மிகப் பழமை வாய்ந்த சிவன் ஆலயம், சடையம்மா மடம், கதிர்காமத்திற்கு யாத்திரை ஆரம்பிக்கும் முருகன் ஆலயம் என்பன அமைந்திருந்த இடங்கள் முழுமையாக இடித்து அழிக்கப்பட்டே மகிந்தவின் காலத்தில் அவருக்கு ஆடம்பர மாளிகை அமைக்கப்பட்டுள்ளது எனப் பலரும் குற்றம் சாட்டியபோதும் அதனை ஆவண ரீதியில் நிரூபணம் செய்ய முடியாமல் போனது. ஆனால் தற்போது அது நிரூபணம் செய்து வெளிவந்துள்ளது.



வலி. வடக்கு கீரிமலை பகுதியில் இருந்த சிவன் ஆலயம் அருகே கிருஸ்ணன் ஆலயம் ஒன்றும் இருந்தது. இந்த ஆலயத்தின் ஆலய நிர்வாகத்தினர் சிலர் அண்மையில் கடற்படையினரின் பாதுகாப்பு வலயத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டு கிருஸ்ணர் ஆலயத்தின் தற்போதைய நிலையைக் காண்பித்துள்ளனர்.

கிருஸ்ணர் ஆலய நிர்வாகத்தினர் 1990ஆம் ஆண்டின் பிற்பாடு, முதல் தடவையாக இந்த ஆலயத்தைச் சென்று பார்வையிட்டுள்ளனர். ஆலயத்தைச் சென்று பார்வையிட்ட ஆலய பரிபாலனசபையினருடன் அப்பகுதி கிராம சேவகரும் பயணித்துள்ளார்.

கிருஸ்ணர் ஆலயப் பகுதியை பார்வையிட்டு ஏங்கியவர்கள் எதிர் திசையை திரும்பி பார்வையிட்டபோது பேரிடியுடன் அதிர்ச்சி அடைந்து விட்டனர். வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவன் ஆலயம் இருந்த தடயமே தெரியாது இடித்து அடியோடு அழிக்கப்பட்டே மகிந்த ராஜபக்சவின் காலத்தில் உல்லாச விடுதி அமைத்துள்ளனர்.

அங்கு சென்று திரும்பிய கிருஸ்ணர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் கதிரவேலு நாகராசா ஆலய நிலை தொடர்பில் தனது கருத்துக்களை மிகவும் வேதனையுடன் பகிர்ந்து கொண்டார்.

“கிருஸ்ணர் ஆலயத்தின் வசந்த மண்டபம் முழுமையாக இடித்து அழிக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் ஏனைய பகுதிகள் அங்கு உள்ளன. அதேபோல் ஆலய விக்கிரகங்களில் இரு பிள்ளையார், முருகன் என்பனவற்றை காணவில்லை”.

அங்கு சில பழங்கால விக்கிரகங்கள் மட்டுமே எஞ்சியவை உள்ளதாகவும் ஆனால் அதைக்காட்டிலும் அருகிலிருந்த சிவன் கோவிலின் தடயமே இப்போது இல்லை என்று கூறினார்.

”கிருஸ்னர் கோவில் அருகில் இருந்த பழமைவாய்ந்த சிவன் ஆலயமும் அங்கேயிருந்த சிவலிங்கமும் முழுமையாகக் காணவில்லை. அந்த இடம்வரை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ளதனால் அவை இடித்து அழிக்கப்பட்டுவிட்டதாகவே தெரிகின்றது. இதே போன்று கதிரை ஆண்டவர் ஆலயமும் அதன் அருகே இருந்த சடையம்மா மடத்தையும் இப்போது காண முடியவில்லை. அவை இருப்பதாகவும் தெரியவில்லை” என்றார்.

எனினும் கிருஸ்ணன் ஆலயத்தை விரைவில் விடுவிப்பதாக படைத்தரப்பிலிருந்து தமக்கு வாக்குறியளித்துள்ளனர் எனவும் கூறினார்.

சிவன் ஆலயம் இடித்து அழிக்கப்பட்ட செய்தி சைவ மக்களை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளமை தொடர்பில் சிவ தொண்டாற்றி வரும் அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர் ஆரு.திருமுருகனைத் தொடர்பு கொண்டு இது தொடர்பில் என்ன நிலைமை எனக் கேட்டேன்.

”இங்கு போர்த்துக்கீசர் காலத்து ஆதிசிவன் ஆலயத்தில் பாதாள கங்கை எனப்படும் கிணற்றுடன் கூடிய சிவன் ஆலயம், அதன் அருகே சித்தர்களின் தியான மடம், அதிலே நல்லூர் தேரடிச் சித்தரான சடையம்மாவின் சமாதி மற்றும் அவரது மடம் ஆகியவையும் இருந்தன”.

அது மட்டுமின்றி அந்த பிரதேசமே இந்துக்களின் புனித பூமியாக திகழ்ந்ததற்கு ஏராளமான சான்றுகளும் உள்ளன என்ற அவர் மேலும் பல தகவல்களைப் பகிர்ந்து கொண்டார்.

“நல்லை ஆதீனத்தின் முதலாவது குரு முதல்வரான மணி ஐயரின் குரு சங்கர சுப்பையாவின் சமாதி ஆகியவையும் அங்கே இருந்தன. அதேபோன்று மிகவும் பழமையான கதிரை ஆண்டவர் ஆலயமும் இருந்தது. இவ்வாறான ஆண்மீக அடையாளங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது. இவற்றை மீள அமைத்தே ஆக வேண்டும் என்பதோடு அவற்றினை அழித்தமைக்கும் எமது வன்மையான கண்டனங்களையும் நாம் பதிவு செய்கின்றோம்” என்றார்.





**கீரிமலையில் ஆதிச்சிவன் கோவில் அருகே சடையம்மா மடம் கட்டிய சடையம்மாவின் புகைப்படம்.**

**அம்மையார் 1936 இல் மடத்தில் சமாதி யடைந்தார். அவரது சமாதிக்கோவிலும் மடத்துக்கு சமீபமாக அமைந்திருந்து. இன்று...?**

இவற்றின் அருகே இருந்த மற்றுமோர் சைவ ஆலயமான சோலை வைரவர் கோவில் இருந்த சமயம் அதற்கு பூசகராக இருந்த ந.பரமேஸ்வரன் தற்போது திருநெல்வேலியில் வசிக்கின்றார். இந்த ஆலயம் தொடர்பான விவரங்களை அவர் பகிர்ந்து கொண்டார்.

“1952ஆம் ஆண்டு சீமேந்து ஆலை அமைக்கும்போது காணிகள் கொள்வனவு மற்றும் சுவீகரிப்பில் ஈடுபட்டபோது எமது ஆலயப் பகுதியினையும் சுவீகரிக்க முற்பட்டனர். அதன் பின்பு மேலும் விஸ்தரிக்க முனைந்த சமயம் 1960ஆம் ஆண்டு காணி சுவீகரிப்பிற்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் ஆலய முகாமையாளர் சரவணமுத்து வழக்கு தொடுத்தார். இதற்கு பேராசிரியரும் சட்டத்தரணியுமான சுந்தரலிங்கம் ஆஜராகி வென்றபோது வணக்கஸ்தலத்தில் கை வைக்ககூடாது என அன்றே நீதிமன்றம் உத்தரவிட்டதனால் ஆலயம் அன்று தப்பிப் பிழைத்த நிலையில் இன்று அந்த ஆலயம் இருக்கிறாதா இல்லையா என்பதனைக் கூட அறிய முடியவில்லை” என்றார்.

இதேநேரம் இப்பகுதியில் அமைந்திருந்த கதிரை ஆண்டவர் ஆலயத்தின் மதகுருவாக இருந்த 71 வயதான கிருஸ்ண மூர்த்திக் குருக்கள் கணேசமூர்த்தி சர்மாவை தேடி இது தொடர்பான விபரங்களை கேட்டேன்.

“கதிரைமலை முருகன் ஆலயத்திற்கு எனது குடும்பத்தில் மூன்றாம் தலைமுறையாக நான் பூசை மேற்கொண்டு வந்தேன். இந்த ஆலயத்தின் மூல மூர்த்தியாக வேலே இருந்து வந்தது. பண்டயகால சிற்ப முறையிலே அமைக்கப்பட்ட ஆலயம் இது. அதனோடு குருக்கள் தங்குமிடம், மடப்பள்ளி மட்டுமன்றி 3 கேணிகள் ஒன்றாக காணப்பட்ட வரலாறும் உண்டு. அதே நேரம் இந்த ஆலயம் கடற்கரையோடு ஒட்டியிருந்த போதும் இந்த ஆலயத்திற்கு அப்பால் இருந்த கிணற்று நீரே உவராக இருந்தது. எனினும் ஆலயத்தின் கேணியிலிருந்த நீர் நன்னீராகவே இருந்ததால் அயலவர்களின் பாவனைக்கும் பெரிதும் உதவியது. இந்தப் பிரதேசம் அனைத்து சைவ மரபுகளோடு இருந்தமையால் திருச்செந்தூரை ஒத்த வடிவில் அமைக்க கனவு கண்டோம் அது வெறும் கனவாகவே போய்விடுமோ என்ற அச்சம் காணப்படுகின்றது. ஏனெனில் இந்தப் பிரதேசம் மீண்டும் விடுவிக்கப்படுமா இல்லையா என்ற கேள்வி ஒரு புறமும் அவை இருக்கின்றனவா இல்லையா என்ற அச்சம் மறு புறமும் எம்மை சூழ்கின்றது”.



தான் பூசை செய்த ஆலயத்தைச் சென்று பார்வையிட முடியாத நிலை குறித்து  மிகவும் வருந்திய ஐயாவின் கண்களிலிருந்து வடிந்த கண்ணீரைக் காண எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அந்த மண் மற்றும் இறைவனின்பால் அவர் வைத்திருந்த பற்றும் நம்பிக்கையும் அவரது குரலில் எதிரொலித்ததை என்னால் அவதானிக்க முடிந்தது.



“இப்பகுதியை விடுவிப்பதற்கு முன்பு எனது ஆயுள் காலத்திலேயே ஒரு தடவையேனும் அந்த இடங்களை மீண்டும் ஒரு தடவை பார்வையிட வேண்டும் அதற்கு இறைவன் அருள்புரிந்திட வேண்டும்” என்றார்.

இவ்வாறான வரலாற்று சரித்திரம் மிக்க 7 சைவ (ஆலய) அடையாளங்களை அழித்தே ஜனாதிபதிக்கு 30 ஏக்கரில் ஆடம்பர மாளிகை அமைத்தனர். இன அழிப்பை மட்டுமல்ல எமது நாட்டின் கலை, கலாச்சாரத்தையும் அழித்தனர் தற்போதும் அழிக்கின்றனர் என்பதற்கு அடையாளமாகவே இந்த உண்மைகள் சான்று பகிர்கின்றன.

இந்த வரலாற்றுச் அடையாளங்களை அழித்து ஜனாதிபதி மாளிகை அமைக்கும்போது சிலர் எதிர்த்து குரல் கொடுத்தாலும் பலர் ஏன் குரல் எழுப்பவில்லை என வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தனைத் தொடர்பு கொண்டு வினவினேன்.

“இந்த ஜனாதிபதி மாளிகையை 2013ஆம் ஆண்டிற்கு முன்பே இரகசியமாக அமைத்துவிட்டனர். இந்த மாளிகை அமைக்கப்படும் காலத்தில் எமது மக்களையோ மதகுருமார்களையோ, ஆன்மீக ஆர்வலர்களையோ தெல்லிப்பளைச் சந்திக்கு அப்பால் செல்ல படையினர் அனுமதிக்கவில்லை”.

அந்த காலகட்டத்தில் கீரிமலை மற்றும் மாவிட்டபுரம் ஆலயத்திற்கு நித்திய பூசைக்குச் செல்வதற்கு குருக்களிற்கு கூட பிரச்சனைகள் இருந்தன என்கிறார் சுகிர்தன்.



“ஜனாதிபதி மாளிகை அமைக்க அங்குள்ள புராதன சிவன்



மற்றும் இதர இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டன அல்லது இல்லாது ஆக்கப்பட்டன என்பது உண்மை. ஏன்? கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் மற்றும் மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்திற்கான நித்திய பூசைக்காக செல்வதற்கு குருக்களும் நிர்வாகமும் பெரும் பிரச்சனைகளை சந்தித்தனர். அதேவேலை அவர்களுடன் இணைந்து நாமும் பல முயற்சிகளை மேற்கொண்டோம்” என்றார்.

இவையெல்லாம் இவ்வாறு இருக்க 2012 ஆம் ஆண்டு மக்களினதும் வரலாற்றுச் சின்னங்களும் இருந்த 29.1 ஏக்கர் நிலத்தை மகிந்த ராஜபக்ச காலத்தில் அபகரித்து கட்டிய இந்த ஜனாதிபதி மாளிகையை மீள மக்களிடமே கையளிக்குமாறு கோரிய போதும் அது இடம்பெறாத நிலையில் 2021-09-09 அன்று 2244/21 இலக்க அரச வர்த்தமானி அறிவித்தல் மூலம் அக்கட்டிடத்தினையும் அதனோடு இணைந்த நிலப்பரப்பையும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பாவனைக்கு கையளிப்பதாக பிரகடணப்படுத்தப்பட்ட போதும் அக்கட்டிடம் இன்று வரை கடற்படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

இவ்வாறு அரச வர்த்தமானி அறிவித்தல் விடப்பட்டமை தொடர்பில் தமக்கு அறிவித்தல் வழங்கவோ அல்லது தமது சம்மதத்



தைப் பெற்றுக்கொள்ளவோ இல்லை என நில உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

**சிவன் சொத்து குலம் நாசம் என்பதை இலங்கை ஆட்சி யாளர்கள் உணர்ந்துள்ளார்களா என்பது அந்த ஈசனிற்கே வெளிச்சம்!**

இதேநேரம் இந்த விடயம் தொடர்பில் மேலும் தேடியவேளை 2019ஆம் நில அளவைத் திணைக்களம் வரைந்த ஓர் வரைபடம் கிட்டியது. அந்த வரைபடந்தில் சடையம்மா மடம் என அடையாளம் இடப்படுவதன் மூலம் 2019ஆம் ஆண்டும் சடையம்மா மடம் இருந்தமை உறுதி செய்யப்படுவதனால் தற்போது அங்கே அந்த மடம் உண்டா, இல்லையா என்பதும் மிகப் பெரும் கேள்வியாகவுள்ளது.




JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Free Estimate!
Call today
$50 OFF
Broken Glass...?
We will fix it within 24 hour.
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# குமரன்கடவை காட்டுப் பகுதியில் அழிவடைந்த நிலையில் சிவாலயமும் அழிவடைந்த நிலையில் பாரிய கட்டிட அத்திவாரங்களும்!




திருகோணமலை நகரில் இருந்து ஏறத்தாழ 50 கி.மீ தொலைவில் திருகோணமலை மாவட்டத்தில் தனி நிர்வாகப் பிரிவாக உள்ள கோமரன்கடவல பிரதேசத்தில் உள்ள முக்கிய வீதியுடன் இணைந்திருக்கும் காட்டுப்பகுதியில் காணப்படுகின்றது.

முன்னர் இப்பிரதேசம் கட்டுக்குளப்பற்று நிர்வாகப் பிரிவாக இருந்த போது இந்த இடம் குமரன்கடவை எனவும் அழைக்கப் பட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது.

இங்குள்ள காட்டுப்பகுதியில் கல்வெட்டுடன் அதன் சமகாலத்திற்குரிய அழிவடைந்த சிவாலயமும், அதன் சுற்றாடலில் அழிவடைந்த கட்டிட அத்திவாரங்களும் காணப்படுகின்றன.

இவ்வாலயமானது

* கர்ப்பகிரகம்

* அர்த்த மண்டபம்

* மகா மண்டபம்

* மணி மண்டபம்

* உள் சுற்று பிரகாரம்

* வெளிச் சுற்று பிரகாரம்

* பிரகாரத்தெய்வங்கள்

* கருவறைத் தூண்கள்

* செங்கல்சுவர்கள்

* கருங்கற் செதுக்கள் தூண்கள்

* அழிவடைந்த அதன் கட்டிடப் பாகங்கள் என்பனவற்றுடன் காணப்படுகிறது

அவற்றுள், அழிவடைந்த சிவாலயம் அதேநிலையில் தொல்லியற் திணைக்களத்தால் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாலயத்திற்கு மிக அருகிலுள்ள சிறு மலையிலேயே கல்வெட்டும் காணப்படுகின்றது.

இக்கல்வெட்டின் 8-10 வரிகளில் வரும் "திருக்காமக்கோட்ட நாச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பண்ணுவித்து" என்ற சொற்தொடர் இப்பிரதேசத்தில் சக்திக்கென தனிக்கோவில் (காமக்கோட்டம்) அமைக்கப்பட்ட புதிய செய்தியைக் கூறுவதாக உள்ளது.

பேராசிரியர் பத்மநாதன் இது போன்ற செய்தி இலங்கையில் கிடைத்த பிற தமிழ்க் கல்வெட்டுகளில் இதுவரை காணப்படவில்லை எனக் குறிப்பிடுகின்றார்.

தமிழகத்தில் இரண்டாம் இராஜராஜ சோழன் காலத்தில் இருந்து சிவன் கோயிலுக்குப் பக்கத்தில் சக்திக்கு தனிக்கோயில் அமைக்கும் மரபு இருந்தமை தெரிகின்றது .

அம்மரபு சமகாலத்தில் இலங்கையிலும் பின்பற்றப்பட்டமைக்கு இக்கல்வெட்டு சான்றாகும்.

கோமரன்கடவல சிவன் கோயில் குலோத்துங்கசோழக் காலிங்கராயன் காலத்திற்கு முன்பே பன்நெடுங்காலமாக இருந்திருக்கின்றது என்பதும் கல்வெட்டில் வரும் ஆதிக்ஷேத்ரம் என்ற




சொற்தொடரால் தெரிகின்றது.

காலிங்கராயன் ஈழத்தை வெற்றி கொண்டதற்கும் கலிங்கமாகனுக்குப் பட்டம் சூட்டியதற்கும் பிறகு இக்கோயிலுக்கு வந்து வழிபட்டு, சக்திக்காக தனிக்கோயில் எடுப்பித்து, தனக்கு சொந்தமாகக் கிடைத்த நிர்வாகப் பிரிவில் இருந்து சில நிலங்களை நிவந்தமாக கொடுத்தமையை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

இந்த நிலங்களுக்கும் கோயில் நிர்வாகத்திறகும் உரித்துடையவர்களாக ஏற்பாடு செய்யப்பட்டவர்கள் காலிங்கராயன் சொற்படி இக்கல்வெட்டை பொறித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

கல்வெட்டின் ஓம்படைக்கிளவியில் குலோத்துங்கசோழக் காலிங்கராயனின் இந்த ஏற்பாடுகளுக்குப் பங்கம் செய்பவர்கள் கங்கைக் கரையில் ஆயிரம் குரால் (கபிலை) பசுக்களை கொன்ற பாவத்திற்கும், ஆயிரம் பிராமணர்களைக் கொன்ற பாவத்திற்கும் உட்பட்டு நாயாகவும், காகமாகவும் பிறப்பார்கள் எனக் குறிப்பிட்டு அவற்றின் உருவங்களும் கல்வெட்டுப் பொறிப்புக்கு கீழே கோட்டுருவமாக வரையப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டால் அறியப்படும் முக்கிய வரலாற்றுச் செய்திகளோடு, அவற்றில் இடம்பெற்றுள்ள சில பெயர்கள், சொற்கள் தொடர்பாக அறிஞர்கள் கூறும் கருத்துக்களும், விளக்கங்ளும் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன.

முதலில் "ஸ்வயம்புவுமாந திருக்கோ (ணமலை) யுடைய நாயநாரை" என படிக்கப்பட்டதை பேராசிரியர் இரகுபதி "ஸ்வயம் புவுமாந திருக்கோயிலுடைய நாயநாரை" எனப் படித்திருப்பதை பேராசிரியர் சுப்பராயலு பொருத்தமானதென எடுத்துக்கொண்டுள்ளார்.

இச்சிவாலயத்தில் காணப்படும் சிவலிங்கத்தின் அமைப்பு ஸ்வயம்பு என்ற சொல்லுக்குப் பொருத்தமாக இருப்பதினால் இக்கல்வெட்டு இந்தக்கோயிலையே குறிப்பிடுகின்றது என்பது பேராசிரியர் இரகுபதியின் விளக்கமாகும்.

மேலதிக இணைப்பு ....

**இலங்கை தமிழர் வரலாறு பற்றி இதுவரை அறியப்படாத புதிய கல்வெட்டு திருகோணமலையில் கண்டுபிடிப்பு – பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்**

தமிழ் இராச்சியத்தின் தோற்றம் பற்றிய முன்னைய வரலாற்று பார்வையை மீள்வாசிப்பிற்கு உற்படுத்தும் அரிய தமிழ் கல்வெட்டு திருகோணமலையில் கண்டுபிடிப்பு.

திருகோணமலை மாவட்டத்தில் தற்போது கண்டுபிடிக்கப் பட்டுள்ள கி.பி.13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த இக்கல்வெட்டு இலங்கைத் தமிழர் வரலாறு பற்றி இதுவரை அறியப்படாதிருந்த புதிய பல வரலாற்று உண்மைகள் கூறுகின்றது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

புகைபடர்ந்திருக்கும் இலங்கைத் தமிழரின் ஆதிகால, இடைக்கால வரலாற்றுக்குப் புது வெளிச்சமூட்டி வருவதில் தொல்லியற் கண்டுபிடிப்புக்களுக்கு முக்கிய இடமுண்டு.



அக்கண்டுபிடிப்புக்களில் கல்வெட்டுக்கள் நம்பகரமான முக்கிய சான்றுகளாகப் பார்க்கப்படுகின்றன.

அவை இலக்கியங்களைப் போல் விரிவான வரலாற்றுச் செய்திகளைத் தராவிட்டாலும் அவை வரலாற்றுச் சம்பவங்கள் நடந்த சமகாலத்திலேயே பெரும்பாலும் எழுதப்பட்டிருப்பதினால் அவற்றில் இருந்து அறியப்படும் வரலாற்றுச் செய்திகள் நம்பகரமானதாகவே பார்க்கப்படுகின்றன.

இவை ஒரு நாட்டில் வாழும் பல இன மக்கள் பற்றிய பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகளை மீளாய்வு செய்வதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இதற்கு திருகோணமலை மாவட்டத்தில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டையும் உதாரணமாகக் குறிப்பிடலாம்.

முதலில் இக்கல்வெட்டுப் பற்றிய செய்தி திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் (J.S.Arulraj) என்பவரால் வைத்திய கலாநிதி த.ஜீவராஜிக்கு (T. Jeevaraj) தெரியப்படுத்தப்பட்டதன் மூலம் அது பற்றிய தகவல் எமக்கும் பரிமாறப்பட்டது.

அவர்கள் அனுப்பிய புகைப்படத்தைப் பார்த்து இக்கல்வெட்டின் முக்கியத்துவத்தைத் தெரிந்துகொண்ட நாம் அக்கல்வெட்டை ஆய்வு செய்வதற்கு தொல்லியற் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்று யாழ்ப்பாணப் பிராந்திய தொல்லியற் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்களான பா. கபிலன், வி. மணிமாறன் மற்றும் முன்னாள் தொல்லியல் விரிவுரையாளர் க.கிரிகரன் ஆகியோருடன் 30.01 2021 அன்று திருகோணமலை சென்றிருந்தோம்.



இந்நிலையில் திருகோணமலை மாவட்ட வரலாற்றுச் சின்னங்களைக் கண்டறிந்து பாதுகாப்பதில் அதிக அக்கறையுடன் செயற்பட்டுவரும் வைத்திய கலாநிதி த.ஜீவராஜுடன் வைத்திய கலாநிதி அ.ஸதீஸ்குமார், கிராம உத்தியோகத்தர் நா.சந்திரசேகரம் மற்றும் கோமரன்கடவல பிரதேச செயலக உத்தியோகத்தர் நா.ஜெகராஜ் ஆகியோரும் கல்வெட்டைப் படியெடுக்கும் பணியில் ஆர்வத்துடன் இணைந்து பணியாற்றியமை எமக்கு மனமகிழ்வைத் தந்ததுடன், அச்சமற்ற சூழ்நிலையில் இக்கல்வெட்டைப் படியெடுக்கவும் வாய்ப்பாக இருந்தது.

இக்கல்வெட்டு திருகோணமலை நகரில் இருந்து ஏறத்தாழ 50 கி.மீ தொலைவில் திருகோணமலை மாவட்டத்தில் தனி நிர்வாகப் பிரிவாக உள்ள கோமரன்கடவல பிரதேசத்தில் உள்ள முக்கிய வீதியுடன் இணைந்திருக்கும் காட்டுப்பகுதியில் காணப்படுகின்றது.

முன்னர் இப்பிரதேசம் கட்டுக்குளப்பற்று நிர்வாகப் பிரிவாக இருந்த போது இந்த இடம் குமரன்கடவை எனவும் அழைக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது.

இங்குள்ள காட்டுப்பகுதியில் கல்வெட்டுடன் அதன் சமகாலத்திற்குரிய அழிவடைந்த சிவாலயமும், அதன் சுற்றாடலில் அழிவடைந்த கட்டிட அத்திவாரங்களும் காணப்படுகின்றன.

அவற்றுள், அழிவடைந்த சிவாலயம் அதேநிலையில் தொல்லியற் திணைக்களத்தால் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாலயத்திற்கு மிக அருகிலுள்ள சிறு மலையிலேயே கல்வெட்டும் காணப்படுகின்றது.

இம்மலையின் மேல்பகுதியில் திருவாசிபோன்ற வட்டமும், அதனுடன் இணைந்த ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கமும் செதுக்கப்பட்டுள்ளன.

சிவலிங்கத்திற்கு மேலிருக்கும் வட்டம் சக்தி வழிபாட்டு மரபுக்குரிய சக்கரமாக இருக்கலாம் எனப் பேராசிரியர் பொ.இரகுபதி குறிப்பிடுகின்றார்.

இக்குறியீடுகளுக்கு கீழே 22 வரிகளில் தமிழ்க் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது.

முதல் இரு வரிகளும், ஏனைய வற்றில் சில சொற்களும் சமஸ்கிருதத்தில் இருக்கின்றன.

கல்வெட்டின் வலப்பக்கத்தில் உள்ள பல எழுத்துப் பொறிப்புக்கள் மலையின் மேற்பகுதியில் இருந்து கீழ்நோக்கி வழிந்தோடும் நீரினால் சிதைவடைந்தும், தெளிவற்றும் காணப்படுகின்றன.

இடப்பக்க எழுத்துப் பொறிப்புக்கள் தெளிவாகக் காணப்பட்டதால் கல்வெட்டைப் படியெடுத்தவர்கள் ஆர்வமிகுதியால் பல சொற்களைப் படித்தனர்.

ஆயினும் கல்வெட்டின் ஒரு பாகம் தெளிவற்றுக் காணப்பட்டதால் அது கூறும் வரலாற்றின் முழுமையான உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இதனால் தென்னாசியாவின் முதன்மைக் கல்வெட்டு அறிஞரும், எனது கலாநிதிப்பட்ட ஆய்வு மேற்பார்வையாளருமான பேராசிரியர் வை.சுப்பராயலுவுக்கும், தமிழக தொல்லியற் துறையின் முன்னாள் மூத்த கல்வெட்டறிஞரான கலாநிதி சு.இராஜகோபாலுக்கும் இக்கல்வெட்டுப் படிகளின் புகைப்படங்களை அனுப்பி வைத்தேன்.

அவர்கள் இருவரும் ஒருவார காலமாக கடும் முயற்சி செய்து கல்வெட்டின் பெரும்பகுதியை வாசித்து அதன் வாசகத்தை தற்போது எமக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அதன் வாசகம் பின்வருமாறு:

01)… … க்ஷகே ஸ்ரீவிம்ஜங்கோ3ஸ நௌ ம்ருகே3 விம்ச0 திப4.

02)…. …..ச0க்தி ப்ரதிஷ்டா2ம் கரோத் க்ருதி: ஸ்வஸ்தி ஸ்ரீ…

03) [த்திகள்] [ஸ்ரீகுலோஸத்துங்கசோழக் காலிங் கராயநேன் ஈழ [ம

04) ண்டலமான மும்முடி] சோழமண்டல மெறிந்தும் கங் கராஜ காலிங்க வி-



05) ஜயவாகு தே3வற்கு வீராபி4ஷேகம் பண்ணுவித்து அநந்தரம் அஷ்ட-

06) [நேமி பூசை கால]ங்களில் ஆதி3க்ஷேத்ரமாய் ஸ்வயம்பு4வுமாந திருக்கோ-

07) [யிலை]யுடைய நாயநாரை தெ3ண்டன் பண்ணி இன்னாய-

08) நாற்கு ச0ஜக்திஸ ப்ரதிஷ்டையில்லாமையில் திருக்காமக்கோட்ட நா

09) ச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பன்னுவித்து நமக்கு [ப்

10) ராப்தமாய்] வருகிற காலிங்கராயப் பற்றில் மாநாமத்[துஸ நாட்டில் ல-

11) ச்சிகா[தி]புரம் இதுக்குள் நாலூர் வேச்சர்களுள்ளிட்ட நில-

12) மும் . . .றிதாயாளமு . . .ட்டும் இதில் மேநோக்கிய

13) மரமும் கீநோக்கிய கிணறும்பேருடரை நீக்கி குடிமக் களுள்பட

14) இந்நா[ச்சியார்க்கு திருபப்]படிமாற்றுக்கும் மண்டபக் கொற்று-

15) க்கும்சாந்த்3ராதி3த்தவரையும் செல்லக் கடவதாக ஹஸ்தோதகம் ப-

16) ண்ணிக் குடுத்தேன்இ .... லுள்ளாரழிவு படாமல்

17) ...ண்ண..ட்ட......ப் பெறுக்கிவுண்டார்கள் [ஆ]ய்

18) நடத்தவும் இதுக்கு . . . . ண்டாகில் காக்கையும் நாயும்

19) மாக . . டையார் பி... கெங்கைக் கரையிலாயிரங்

20) குரால் பசுவைக் கொன்றா[ர்பாவங்] கொண்டார்கள் ஆயிரம் ப்3ரா-

21) ஹ்மணரைக் கொன்றார் பாவ[ங் கொண்]டார்கள் மேலொரு ...

22) மாற்றம் விலங்குரைப்பார் .. காலிங்கராயரின் ஜசொல்படிஸ ... ...

23) த்தியஞ் செய்வார் செய்வித்தார்

கி.பி.13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த இக்கல் வெட்டுப் பற்றிய தமிழக அறிஞர்களின் வாசிப்பிலிருந்து இலங்கைத் தமிழர் வரலாறு பற்றி இதுவரை அறியப்படாதிருந்த புதிய பல வரலாற்று உண்மைகள் தெரியவந்துள்ளன.

அவை சோழர் ஆட்சியிலிருந்து ஐரோப்பியர் காலம் வரை தமிழர் பிராந்தியங்களின் ஆட்சியுரிமை, நிர்வாக ஒழுங்கு என்பன தனிப்போக்குடன் வளர்ந்தமையைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளன.

மேலும் யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றகாலப் பின்னணி, அது தோன்றிய காலம், தோற்றுவித்த வம்சங்கள் தொடர்பான முன்னைய வரலாற்றுப் பார்வையை மீளாய்வு செய்வதிலும், தெளிவுபடுத்துவதிலும் இக்கல்வெட்டு அதிக முக்கியத்துவம் பெறுகின்றது.

இக்கல்வெட்டுப் படியெடுத்த காலப்பகுதியிலேயே இக்கல் வெட்டின் புகைப்படங்களை எனது ஆசிரியர்களான பேராசிரியர் கா.இந்திரபாலா, பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் பொ. இரகுபதி ஆகியோருக்கு அனுப்பி அவர்களின் கருத்துக்களைப் பெற்றிருந்தேன்.

பேராசிரியர் இரகுபதியால் கல்வெட்டின் சில பாகங்கள் வாசிக் கப்பட்டு அதற்குரிய பொருள் விளக்கத்தையும் அவர் அவ்வப் போது எனக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில் தமிழக அறிஞர்களால் பெருமளவு வாசித்து முடிக் கப்பட்ட கல்வெட்டு வாசகத்திற்கு மேற்கூறிய அனைவருமே வழங்கிய கருத்துக்கள், விளக்கங்கள் என்பன இலங்கைத் தமிழர் வரலாற்றிற்குப் புதிய செய்திகளைச் சொல்வதாக உள்ளன.

தென்னிந்தியாவில் நீண்டகால வரலாறு கொண்டிருந்த சோழ அரசு தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு பத்தாம் நூற் றாண்டிலிருந்து ஒரு பேரரசாக எழுச்சியடைந்த போது அவ் வரசின் செல்வாக்கால் சமகால இலங்கை வரலாற்றிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன.





இதனால் தமிழ் நாட்டு அரச வம்சங்களை வெற்றி கொண்டதன் பின்னர் சோழர்கள் இலங்கைக்கு எதிராகவும் படையெடுத்து வந்தனர்.

இது முதலாம் பராந்தகசோழன் காலத்தில் ஆரம்பித்துப் பின்னர் இராஜராஜசோழன் காலத்தில் கி.பி. 993 இல் இலங்கைளின் வடபகுதி வெற்றி கொள்ளப்பட்டது.

கி.பி. 1012 இல் முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் இலங்கை முழுவதும் வெற்றி கொள்ளப்பட்டு புதிய தலைநகரம் ஜனநாதபுரம் என்ற பெயருடன் பொலன்னறுவைக்கு மாற்றப் பட்டதாக சோழர்காலச் சான்றுகளால் அறிகின்றோம்.

சோழரின் 77 ஆண்டுகால நேரடி ஆட்சியில் அவர்களது நிர்வாக முறையே பின்பற்றப்பட்டது.

இதன்படி இலங்கை மும்முடிச் சோழ மண்டலம் என்ற பெயரைப் பெற்றதுடன் வளநாடு, நாடு, ஊர் போன்ற நிர்வாக அலகுகளும் இங்கு பின்பற்றப்பட்டன.



திருகோணமலையில் மட்டுமே ஐந்து வளநாடுகள் இருந் துள்ளன.

அத்துடன் சோழரின் அரசியல், இராணுவ, நிர்வாக நடவடிக் கைகளின் முக்கிய மையமாக திருகோணமலை இருந்ததை அவர்களின் ஆட்சிக்கால ஆதாரங்களும் உறுதிப்படுத் துகின்றன.

பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்ட சோழரின் ஆட்சி கி.பி.1070 இல் வீழ்ச்சியடைந்தாலும் சோழரின் ஆதிக்கம், நிர்வாக முறை, பண்பாடு என்பன தமிழர் பிராந் தியங்களில் தொடர்ந்திருக்கலாம் எனக் கருதமுடிகின்றது.

இதை உறுதிப்படுத்தும் புதிய சான்றாகவே கோமரன்கடவலக் கல்வெட்டுக் காணப்படுகின்றது.

பொலன்னறுவையில் சிங்கள மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டு ஏறத்தாழ 125 ஆண்டுகளின் பின்னரும் தமிழர் பிராந்தியங் களில் மும்முடிச் சோழ மண்டலம் என்ற நிர்வாகப் பெயரும், தமிழ் நிர்வாக முறையும் இருந்தன என்ற புதிய செய்தியை இக்கல்வெட்டுத் தருகின்றது.

கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட காலத்தில் இப்பகுதியில், சோழர் ஆட்சிக்குப் பொறுப்பாக மூன்றாம் குலோத்துங்க சோழனது படைத்தளபதிகளுள் ஒருவனான அல்லது அரச பிரதிநிதியான குலோத்துங்கசோழக் காலிங்கராயன் இருந்துள்ளான் என்ற புதிய செய்தியும் தெரியவருகின்றது.

மேலும் இவனே கங்கராஜகாலிங்க விஜயபாகுவிற்கு (கலிங் கமாகனுக்கு) பட்டாபிஷேகம் செய்தான் என்ற அதிமுக்கிய புதிய வரலாற்றுச் செய்தியும் இக்கல்வெட்டிலேயே முதல் முறையாகச் சொல்லப்பட்டுள்ளது.

பேராசிரியர்.சுப்பராயலு இக்கல்வெட்டில் (வரிகள் (3-5) வரும் "ஸ்ரீகுலோத்துங்கசோழக் காலிங்கராயநேன் ஈழமண்டலமான மும்முடி சோழமண்டல மெறிந்தும் கங்கராஜ காலிங்க விஜய வாகு தேவற்கு வீராபிஷேகம்" என்ற சொற்தொடரை புதிய செய்தி எனக் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் இந்திரபாலா இத்தொடரில் உள்ள கங்கராஜ காலிங்கவிஜயவாகு என்பவன் 1215 இல் பொலன்னறுவை அரசை வெற்றி கொண்டு ஆட்சி செய்த கலிங்கமாகன் (மாகன் மாகோன்) என அடையாளப்படுத்துகின்றார்.

அவன் விஜயபாகு என்ற பெயராலும் அழைக்கப்பட்டான் என் பதற்கு 14ஆம் நூற்றாண்டில் எழுந்த நிகாயசங்கிரஹய என்ற சிங்கள இலக்கியத்தில் வரும் குறிப்பை முக்கிய ஆதாரமாகக் காட்டியுள்ளார்.

இவற்றிலிருந்து, இலங்கையை வெற்றிகொண்டு பொலன் னறுவையில் ஆட்சிபுரிந்த கலிங்கமாகன், குலோத்துங்கசோழ காலிங்கராயனால் அபிஷேகம் செய்யப்பட்டு ஆட்சியில் அமர்த் தப்பட்டவன் என்ற புதிய ஆதாரம் கிடைத்துள்ளது.

இக்கல்வெட்டில் கூறப்படும் குலோத்துங்கசோழக் காலிங் கராயன் மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் இருந்த சோழப்படைத் தளபதியாக அல்லது சோழ அரசப் பிரநிதியாக இருந்திருக்கவேண்டும்.

ஏனெனில் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சிக்காலத் தில் (கி.பி 1178-1218) அவன் இலங்கை மீது படையெடுத்து சில வெற்றிகளைப் பெற்றதாக அவனது பத்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கூறுகின்றது.

இங்கே கலிங்கமாகன் பொலன்னறுவை இராச்சியத்தை கி.பி.1215 இல் வெற்றி கொண்டான் எனக் கூறப்படுகிறது.

இதனால் குலோத்துங்க சோழ காலிங்கராயனால் கலிங்க மாகனுக்கு நடத்தப்பட்ட பட்டாபிஷேகம் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சியின் இறுதிக் காலப்பகுதியில் நடந்ததெனக் கூறமுடியும்.

பொலன்னறுவை இராசதானியில் நிஸங்கமல்லன் ஆட்சியைத் தொடர்ந்து பல குழப்பங்களும், அயல்நாட்டுப் படையெடுப் புக்களும் ஏற்பட்டதை பாளி சிங்கள இலக்கியங்கள் குறிப் பிடுகின்றன.

இந்நிலையில் சோழ, கேரள, தமிழ்ப்படை வீரர்களின் உதவி யுடன் இலங்கை மீது படையெடுத்து வந்த கலிங்கமாகன் 1215 இல் பொலன்னறுவை இராசதானியைக் கைப்பற்றி 44 ஆண் டுகள் வரை ஆட்சி செய்தான் என்ற வரலாறு காணப்படு கின்றது.

இவனது ஆட்சியில் வெறுப்படைந்த சிங்கள மக்களும், சிங்கள தலைநகரும் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்த போது கலிங்க மாகன் தலைமையில் வடக்கே இன்னொரு அரசு தோன்றிய தாக சூளவம்சம், ராஜவெலிய முதலான வரலாற்று இலக் கியங்கள் குறிப்பிடுகின்றன.

ஆயினும் இக்கலிங்கமாகன் யார்? எந்த நாட்டிலிருந்து படை யெடுத்து வந்தவன் என்பதையிட்டு இதுவரை அறிஞர்கள் மத்தியில் வேறுபட்ட கருத்துக்களே இருந்துள்ளன.

சில அறிஞர்கள் இவனை மலேசியா நாட்டிலுள்ள கலிங்கத்தி





லிருந்து படையெடுத்தவன் எனவும் கூறியுள்ளனர்.

இந்நிலையில் தற்போது கிடைத்துள்ள கல்வெட்டில் கலிங்க மாகன் கங்கை வம்சத்துடனும், கலிங்க நாட்டுடனும் தொடர்புடையவன் என்ற புதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

சோழர்கள் தம் திருமண உறவுகளால் கீழைச்சாளுக்கியரது (வேங்கி அரசு) கங்கை வம்சத்துடனும், படையெடுப்புகள் மூலம் கலிங்க நாட்டுடனும் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதைக் கலிங்கத்துப்பரணியும், சோழக் கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன.

யாழ்ப்பாணத்தில் அரசமைத்த ஆரியச்சக்கரவர்த்திகளும் கங்கை வம்சத்துடன் தொடர்புடையவர்கள் என அவ்வரசு தொடர்பாக எழுந்த இலக்கியங்கள் கூறுகின்றன.

இவ்வாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாண அரசின் தோற்றத்தை கலிங்கமாகனுடன் தொடர்புபடுத்தி பேராசிரியர் இந்திரபாலாவினால் எழுதப்பட்ட அரிய கட்டுரை ஒன்று தற்போது எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக்கட்டுரையை மக்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் இலங்கை ஊடகங்களில் விரைவில் பிரசுரமாக இருப்பது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இக்கல்வெட்டின் 8-10 வரிகளில் வரும் "திருக்காமக்கோட்ட நாச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பண்ணுவித்து" என்ற சொற்தொடர் இப்பிரதேசத்தில் சக்திக்கென தனிக்கோவில் (காமக்கோட்டம்) அமைக்கப்பட்ட புதிய செய்தியைக் கூறுவதாக உள்ளது.

பேராசிரியர் பத்மநாதன் இது போன்ற செய்தி இலங்கையில் கிடைத்த பிற தமிழ்க் கல்வெட்டுகளில் இதுவரை காணப்படவில்லை எனக் குறிப்பிடுகின்றார்.

தமிழகத்தில் இரண்டாம் இராஜராஜ சோழன் காலத்தில் இருந்து சிவன் கோயிலுக்குப் பக்கத்தில் சக்திக்கு தனிக்கோயில்



அமைக்கும் மரபு இருந்தமை தெரிகின்றது .

அம்மரபு சமகாலத்தில் இலங்கையிலும் பின்பற்றப்பட்டமைக்கு இக்கல்வெட்டு சான்றாகும்.

கோமரன்கடவல சிவன் கோயில் குலோத்துங்கசோழக் காலிங்கராயன் காலத்திற்கு முன்பே பன்நெடுங்காலமாக இருந்திருக்கின்றது என்பதும் கல்வெட்டில் வரும் ஆதிக்ஷேத்ரம் என்ற சொற்தொடரால் தெரிகின்றது.

காலிங்கராயன் ஈழத்தை வெற்றி கொண்டதற்கும் கலிங்க மாகனுக்குப் பட்டம் சூட்டியதற்கும் பிறகு இக்கோயிலுக்கு வந்து வழிபட்டு, சக்திக்காக தனிக்கோயில் எடுப்பித்து, தனக்கு சொந்தமாகக் கிடைத்த நிர்வாகப் பிரிவில் இருந்து சில நிலங்களை நிவந்தமாக கொடுத்தமையை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

இந்த நிலங்களுக்கும் கோயில் நிர்வாகத்திறகும் உரித்துடையவர்களாக ஏற்பாடு செய்யப்பட்டவர்கள் காலிங்கராயன் சொற்படி இக்கல்வெட்டை பொறித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

கல்வெட்டின் ஓம்படைக்கிளவியில் குலோத்துங்கசோழக் காலிங்கராயனின் இந்த ஏற்பாடுகளுக்குப் பங்கம் செய்பவர்கள் கங்கைக் கரையில் ஆயிரம் குரால் (கபிலை) பசுக்களை கொன்ற பாவத்திற்கும், ஆயிரம் பிராமணர்களைக் கொன்ற பாவத்திற்கும் உட்பட்டு நாயாகவும், காகமாகவும் பிறப்பார்கள் எனக் குறிப்பிட்டு அவற்றின் உருவங்களும் கல்வெட்டுப் பொறிப்புக்கு கீழே கோட்டுருவமாக வரையப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டால் அறியப்படும் முக்கிய வரலாற்றுச் செய்திகளோடு, அவற்றில் இடம்பெற்றுள்ள சில பெயர்கள், சொற்கள் தொடர்பாக அறிஞர்கள் கூறும் கருத்துக்களும், விளக்கங்ளும் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன.

முதலில் "ஸ்வயம்புவுமாந திருக்கோ (ணமலை) யுடைய



நாயநாரை" என படிக்கப்பட்டதை பேராசிரியர் இரகுபதி "ஸ்வயம் புவுமாந திருக்கோயிலுடைய நாயநாரை" எனப் படித்திருப்பதை பேராசிரியர் சுப்பராயலு பொருத்தமானதென எடுத்துக்கொண்டுள்ளார்.

இச்சிவாலயத்தில் காணப்படும் சிவலிங்கத்தின் அமைப்பு ஸ்வயம்பு என்ற சொல்லுக்குப் பொருத்தமாக இருப்பதினால் இக்கல்வெட்டு இந்தக்கோயிலையே குறிப்பிடுகின்றது என்பது பேராசிரியர் இரகுபதியின் விளக்கமாகும்.

மேலும் அவர் கல்வெட்டில் வரும் இடப்பெயரை "லச்சிகாமபுரம்" என வாசித்து அது இப்பிரதேசத்திற்கு உட்பட்ட ஒரு இடத்தின் பெயர் எனக் குறிப்பிடுகின்றார்.

இதில் வரும் வேச்சார் நிலம் என்பது குளத்தோடு ஒட்டிய பயிர் நிலம் என்ற பொருளில் சிங்களக் கல்வெட்டுக்களில் வரும் வேசர(வாவி சார்ந்த) என்ற சொல்லுடன் தொடர்புடையது என்பதும் அவரது கருத்தாகும்.

பேராசிரியர் சுப்பராயலு கல்வெட்டில் வரும் "மாநாமத்துநாடு" என்ற பெயர் இங்குள்ள பரந்த பிரதேசத்தை குறித்த இடமாக இருக்கலாம் எனக் கருதுகின்றார்.

இக்கூற்றை பொருத்தமாக கருதும் பேராசிரியர் பத்மநாதன் இதற்குப் பெரியகுளம் கல்வெட்டில் வரும் இதையொத்த பெயரை ஆதாரமாகக் காட்டுகின்றார்.

இக்கல்வெட்டில் "பற்று" என்ற நிர்வாகப் பிரிவு பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இப்பெயர் சோழர் ஆட்சியில் வளநாடு என்ற நிர்வாகப் பிரிவிற்குச் சமமாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனப் பேராசிரியர் பத்மநாதன் கருதுகின்றார்.

பற்று என்ற தமிழ்ச் சொல் சிங்களத்தில் "பத்து" என அழைக்கப்படுகின்றது.

இச்சொற்கள் தற்காலத்திலும் இலங்கையின் பல பாகங்களிலும் நிர்வாக அலகுச் சொற்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இக்கல்வெட்டைப் படியெடுத்த போது கடும் மழையாக இருந்தாலும், பிற்பகல் மூன்று மணிக்குப் பின்னர் இங்குள்ள காட்டில் யானைகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும் எனக் கூறப்பட்டதாலும் குறுகிய நேரத்திற்குள் இக்கல்வெட்டை படியெடுக்க வேண்டியிருந்தது.

ஆயினும் மீண்டும் இக்கல்வெட்டைப் படியெடுக்க வேண்டியிருப்பதால் மேலும் பல புதிய தகவல்கள் வெளிவரக்கூடும்.

இவ்விடத்தில் இக்கல்வெட்டைப் படிப்பதற்கும், அதன் வரலாற்று முக்கியத்துவத்தை வெளிக்கொண்டுவரவும் உதவிய என் ஆசிரியர்களுக்கும், எனது தொல்லியல் பட்டதாரி மாணவர்களுக்கும், ஆய்விடத்தை அடையாளப்படுத்திக் காட்டியதுடன் எம்முடன் இணைந்து பணியாற்றிய திருகோணமலை நண்பர்களுக்கும் என் நன்றிகள் என அவர் தெரிவித்துள்ளார்.

உலக வணிகம் ULAGA VANIKAM

2024

LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY

உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஒர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஒர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

தொலைபேசி எண்: 437.345.4203

அகரம்

Akaram

வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்

Graphic Design Consultant

தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)

இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள

அழையுங்கள் (Call):
437.345.4203

விளம்பரம் என்பது
உங்கள் வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு

437.345.4203



# பறிபோகும் தமிழ் தாயகம் இனம் புரியாமல் கனவில் நம் சமூகம்

வடக்குக் கிழக்கு, தமிழர் தாயகம். அது தமிழர்களின் கைகளில் இருக்கிறது என நம்பிக்கொண்டிருக்கிறோம். தமிழர்கள் ஆண்ட பூமி என சொல்லிக் கொண்டிருக்கிறோம். மேற்குலக நாடுகளில் வாழும் பெரும்பாலான தமிழர்கள் வடக்குக் கிழக்கு இன்னமும் தமிழர் பிரதேச மாக இருக்கிறது என நம்பிக்கொண டிருக்கின்றனர். தமிழர் பிரதேசங்கள் தமிழர்களின் கையை விட்டுப்போய்க்கொண்டிருக்கின்றன. என்பதை உணராத நிலையில் தானே எங்களில் பலர் கனவுகளிலும் கற்பனை களிலும் மிதந்து கொண்டி ருக்கிறோம்..?

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் பின்னர் இலங்கை வரை படத்தில் சரத் பொன்சேகா வெற்றி பெற்ற பிரதேசங்களை பச்சை நிறத்திலும், மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்ற இடங்களை நில நிறத்திலும் அடையாளம் இட்டுக் காட்டியிருந் தார்கள்.



பச்சை நிறம் தீட்டப்பட்ட பகுதிகள் அனைத்தும் தமிழர் தாயகம் என்று எங்களில் பலர் பெருமைப்பட்டுக் கொண்டோம். அதற்கு ஒரு படி மேலே சென்ற சிலர் பச்சை நிறம் தீட்டப்பட்ட இடங் களை உள்ளடக்கியதே தமிழீழம் என்றும் பெருமை பேசிக் கொண்டோம்.

அப்போது வெளியான வரைபடத்தில் பச்சை வர்ணம் தீட்டப்பட்டு காட்டப்பட்டிருந்த வடக்குக் கிழக்கு பிரதேசத்தின் பெரும் பகுதிகள் இன்று தமிழர்களின் கைகளில் இல்லை என்பதை எங்களில் எத்தனை பேர் உணர்ந்திருக்கிறோம்?

மின்னாமல் முழங்காமல் தமிழர் பிரதேசங்கள் அபகரிக்கபட்டு வருகிறன என்பதையும் அந்த இடங்களில் தமிழர்கள் இனமேல் கால் வைக்க முடியாத வாறான கட்டமைப்புகள் சிங்களவர்களால் உருவாக்கப்பட்டு வருகின்றன என்பதை நாம் உணர்ந் திருக்கிறோமா? வடக்குக் கிழக்கு தமிழர் தாயகம், அந்த தமிழீழத்தை அடைந்தே தீருவோம். தமிழீழம் இல்லை என்றால் ஒரு துளி மண்ணும் வேண்டாம் என நாங்கள் மேற்குலக நாடுகளில் இருந்து வீரவசனம் பேசிக் கொண்டிருக்கும் போது, எங்கள் முற்றங்கள் வேரோடும் வேரடி மண்ணோடும் பிடுங்கப்பட்டு வருகின்றனவே. இந்த யதார்த் தங்களையும் புரிந்து கொண்டு செயற்படுங்கள் என்றுதான் நாங்கள் உங்களை மன்றாட்டமாகக் கேட்டு வருகிறோம்.

இதைச் சொல்லி வரும் துரைரத்தினம், நிராஜ் டேவிட் ஆகி யோர் சம்பந்தரின் நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற் படுகிறார்கள் என்று குற்றம் சாட்டுபவர்களும் உண்டு. சம்பந்தரின் நிகழ்சி நிரல் என்று ஒரு மண்ணாங்கட்டியும் எங்களிடம் இல்லை.

எங்களின் நோக்கம் ஒன்றுதான். எங்கள் மண் பறிபோவதை தடுக்க வேண்டும். தமிழர் தாயகம் என்று நாங்கள் சொல்லும் இடங்களில் தமிழர் பிரதிநிதித்துவம் காக்கப்பட வேண்டும் என்பதைத் தவிர வேறு எந்த நோக்கமும் எங்களிடம் இல்லை. வேறு நோக்கங்களில் செயற்பட வேண்டிய அவசியமும் எமக்கு இல்லை.

தமிழர் பிரதேசங்களில் தமிழர்கள் தெரிவு செய்யப்பட வேண் டும் என்பதும் அவ்வாறு தெரிவு செய்யப்படும் தமிழர்கள், சிங்களப் பேரினவாத அரசுக்கு கைகட்டி சேவகம் செய்பவர் களாக இல்லாமல், தமிழர்களின் உரிமையை நிலை நிறுத்தக் கூடிய தமிழர்களாக இருக்க வேண்டும் என்பதுமே எமது நோக்கம். அந்தத் தமிழர்கள் சம்பந்தராகவும் இருக்கலாம். அல்லது எந்தக் கந்தப்பராகவும் இருக்கலாம்.

தமிழீழம்தான் என்ற உறுதியோடு இருக்கும்போது வடக்குக் கிழக்குப் பிரதேசம் எங்கள் கைகளில் இல்லை என எங்கள் உணர்வுகளை மழுங்கடிக்கப் பார்க்கிறீர்களே எங்கள் கனவு களை கலைக்கப்பார்க்கிறீர்களே என்று வெளி நாடுகளில் உள்ள ஒரு சிலர் என் மீது ஏவுகணை வீசுவீர்கள் என்றும் எனக் குத் தெரியும். ஆனால் அந்தக்கனவுகளுடன் மட்டும் என்னைப் போன்ற ஊடகவியலாளர்களால் வாழமுடியாது என்பதால் தான் யதார்த்தங்களையும் இடைக்கி டையே சொல்ல விழைகிறோம்.

முதலில் கிழக்கு மாகாணம் தமிழர்களின் கைகளில் இருக் கிறதா என்பதைப் பார்ப்போம். கடந்த முறை எழுதிய கட்டு ரையில் தமிழர் பிரதேசம் எனச்சொல்லுகின்ற பிரதேசம் தமிழர்களின் கைகளில் இருக்கிறதா? எனக் கேட்டிருந்தேன்.

திருகோணமலை

புள்ளிவிவரத் திணைக்களத்தின் விவரங்களின்படி திருகோண மலை மாவட்டத்தின் சனத்தொகை இனவிகி தாசாரரீதியில் எவ்வாறு மாற்ற மடைந்து சென்றிருக்கிறது என்பதையும் இனி பார்ப்போம்.

1932ஆம் ஆண்டிலிருந்து சிங்களவர்கள் கிழக்கு நோக்கிய நகர்வுகளை மேற்கொள்ள ஆரம்பித்தனர். கல்லோயா திட்டம் முதல் 1977இல் ஆரம்பிக்கப்பட்ட துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம்வரை கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற் றங்களை இலக்கு வைத்து 24 குடியேற்றத் திட்டங்கள் இலங்கை அரசுகளால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

1950ஆம் ஆண்டுகளின் பின்னர் தமிழர்கள் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களை இணைத்து தமது அரசியல் நகர்வுகளையும், அதன் பின்னர் வட கிழக்கு இணைந்த சுயாட்சிக் கோரிக்கை யையும் முன்வைத்து போராட ஆரம்பித்தனர். அப்போது சிங்கள ஆட்சியாளர்கள் வடக்கையும் கிழக்கையும் துண்டாடி கிழக்கை முழுமையாக சிங்கள மயப்படுத்த வேண்டும் என்ற திட்டத்தைத் துரிதப்படுத்த ஆரம்பித்தனர்.

சிங்களவரகளின் இந்த நகர்வை உணர்ந்து கொண்ட இலங்கை தமிழரசுக் கட்சி 1952ஆம் ஆண்டில் திருகோண மலையில் தனது மாநாட்டை நடத்தியது. அத்துடன் அந்த மாநாட்டில் திருகோணமலையை தமிழர்களின் தலை நகராகவும் பிரகடனம் செய்தது.

திருகோணமலை தமது தலைநகர் என தமிழர்கள் பெருமை யாக பேசிக் கொண்டிருக்க, மறுபுறத்தில் திருகோணமலையை தமது வசப்படுத்துவதற்காக சிங்கள தேசம் பாரிய செயற்றிட்டாங் களை மேற்கொள்ள ஆரம்பித்தது. கந்தளாய், கல்லோயா, மகாஓயா, தீகவா பித்திட்டங்களை உருவாக்கி திருகோண மலை, அம்பாறை மாவட்டங்களில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கினர்.

கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக் கிய அதேவேளை, சிங்களவர்களின் சனத்தொகை கிழக்கில் அதிகரிக்கும் வகையில் திருகோணமலை மட்டக்களப்பு மாவட் டங்களின் எல்லை களிலும் மாற்றங்களையும் உருவாக்கினர்.

மட்டக்களப்பு மாவட்டம் எவ்வாறு பிரிக்கப்பட்டு திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டம் உருவாக்கப்பட்டது என்பதைப் பின்னர் பார்ப்போம்.

திருகோணமலை மாவட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தின் கிழக்கு எல்லையான தென்னமரவாடியிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்கு எல்லையான வெருகல் ஆறு வரையான நீண்ட கரையோரப் பிரதேசமாகும். இதன் தெற்கு எல்லையாக அனுராதபுரம், பொலன்னறுவை மாவட்டங்கள் உள்ளன.

1827ஆம் ஆண்டில் திருகோணமலை மாவட்டத்தில் 250 சிங்கள வர்கள் மட்டுமே வாழ்ந்தனர். அப்போது தமிழர்கள் 15 ஆயிரத்து 663பேராகவும், முஸ்லிம்கள் 3 ஆயிரத்து 245 பேராகவும் காணப்பட்டனர். இம் மாவட்டத்தின் மொத்த சனத் தொகையில் தமிழர்கள் 81.76 வீதமாகவும், முஸ்லிம்கள் 16.9 வீதமாகவும், சிங்களவர்கள் 1.3 வீதமாகவும் காணப்பட்டனர்.

1921ஆம் ஆண்டில் தமிழர்களின் சனத்தொகை 54.4 வீதமாக வீழ்ச்சியடைந்த அதேவேளை, முஸ்லிம்களின் சனத்தொகை 37.6 வீதமாகவும், சிங்களவர்களின் சனத்தொகை 4.4 வீத மாகவும் உயர்வடைந்திருந்தது.

1971 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட சனத்தொகை முடிவுகள் சிங்களக் குடியேற்றம் மற்றும் முஸ்லிம்களின் சனத்தொகை அதிகரிப்பு என்பனவற்றை தெளிவாகக்காட்டியிருக்கிறது. அந்த ஆண்டின் குடித்தொகை மதிப்பீட்டின்படி திருமலை மாவட்

டத்தில் தமிழர்கள் (71 ஆயிரத்து 749 பேர்) 38.1 வீதமாகவும் முஸ்லிம்கள் (59 ஆயிரத்து 924 பேர்) 31.8 வீதமாகவும், சிங்களவர்கள் (54 ஆயிரத்து 744 பேர்) 29.08 வீதமாகவும் காணப்பட்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 1.3 வீதமாக இருந்த சிங்களவர்கள் கடந்த ஆண்டில் குடித்தொகை மதிப்பீட்டின் படி 30 வீதமாகவும், 16 வீதமாக இருந்த முஸ்லிம்கள் 46.5 வீதமாகவும் உயர்வ டைந்திருக்கிறார்கள். 81.76 வீதமாக இருந்த தமிழர்கள் 23.5 வீதமாக வீழ்ச்சியடைந்திருக்கிறார்கள்.

இந்த விவரங்களைப் பார்க்கும் உங்களுக்கு திருகோணமலை மாவட்டத்தில் பெரும்பான்மை இனமாக இருந்த தமிழர்கள் இன்று மூன்றாவது நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்ற யதார்த்தத்தை உணர்ந்து கொள்வீர்கள் என நம்புகிறேன். யுத்தம் காரணமாகவும் திருகோணமலை மாவட்டத்திலிருந்து தமிழர்கள் இடம்பெயர்ந்ததன் காரணமாகவும் இந்த வீழ்ச்சி ஏற்பட்டது. யுத்த அழிவுகளால் ஏற்பட்ட இறப்புவீத அதிகரிப்பும் தமிழர்களின் சனத்தொகை வீழ்ச்சிக்கு மற்றுமொரு காரணமாகும்.

உலகில் முஸ்லிம்களின் சனத்தொகை பெருக்கத்தைப் போலவே கிழக்கு மாகாணத்திலும் அவர்களின் சனத்தொகை வீதம் ஏனைய இனங்களை விட அதிகரித்து வருகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் பெரும் பான்மையாக இருந்த தமிழர்கள் இப்போது மூன்றாவது இடத்திற்கு வந்தி ருக்கிறார்கள். தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசங்கள் இப்போது சிங்களக்கிராமங்களாக மாற்றப்பட்டு அப்பிரதேசங்களுக்கு சிங்களப் பெயர்களும் சூட்டப்பட்டிருக்கின்றன.

சனத்தொகையில் மட்டுமல்ல, நிலப் பரப்பைக்கூட தமிழர்கள் திருகோணமலையில் இழந்துவிட்டார்கள். 2,728 சதுரகிலோ மீற்றரை கொண்ட திருகோணமலை மாவட்டத்தில் 346 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தில்தான் தற்போது தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். திருகோணமலை மற்றும் ஈச்சிலம்பற்று, வெருகல் ஆகிய இடங்களை உள்ளடக்கிய இந்த 346 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்திற்குள்ளும் தற்போது சிங்களவர்களின் தொகை அதிகரித்து வருகிறது.

பூர்வீக தமிழ்ப் பிரதேசங்களான கந்தளாய், கிண்ணியா, குச்சவெளி, தம்பலகாமம் பகுதிகள் இப்பொழுது முற்றுமுழுதான சிங்களப் பிரதேசங்களாக மாற்றப்பட்டு விட்டன. அந்தப் பிரதேசத்தில் உள்ள சுமார் 240 தமிழ்க் கிராமங்களின் பெயர்கள் சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. இதுதான் எமது தமிழீழத் தலைநகரின் இன்றைய நிலை.

மட்டக்களப்பு

அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தை பார்ப்போம். வெருகல் தொடக்கம் பாணமை வரையான பிரதேசங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், 1961ஆம் ஆண்டு நாவிதன்வெளி, சம்மாந்துறை, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, இறக்காமம், அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில் ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளை மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பிரித்து மொனறாகலை, பதுளை, மாத்தறை மாவட்டங்களைச் சேர்ந்த சில பிரதேச செயலகப் பிரிவுகளையும் இணைத்து திகாமடுல்ல மாவட்டம் (அம்பாறை) உருவாக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தை சிங்கள மயப்படுத்தும் திட்டத்துடனேயே திகாமடுல்ல மாவட்டம் உருவாக்கப்பட்டது. அதேபோன்று, மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்குப்பக்கமாக உள்ள மன்னம்பிட்டி உட்பட பல தமிழ் கிராமங்கள் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சிங்களக்குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு பின்னர் அவை பொலன்னறுவை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. திருகோணமலையையும் மட்டக்களப்பையும் துண்டாடும் வகையில் வடமுனையிலிருந்து கிரான் வரையான பிரதேசங்களிலும், அதேபோன்று மேற்கு எல்லையான புல்லுமலை வடமுனை மற்றும் வடக்கு எல்லையான மாங்கேணி, வாகரை, பனிச்சங்கேணி, புனானை கிழக்கு, வட்டவான், மதுரங்கேணிக்குளம், கதிரவெளி, பால்சேனை, அம்பந்தனாவெளி ஆகிய கிராமங்களிலும் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பை மட்டுமே தமிழர்கள் தக்கவைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது கூட நிலைக்குமா என்பது சந்தேகமாகவே உள்ளது.

அம்பாறை

1961ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தில் 1963 ஆம் ஆண்டில் முஸ்லிம்கள் 44 வீதமாகவும், சிங்களவர்கள் 29.3 வீதமாகவும், தமிழர் 25.2 வீதமாகவும் காணப்பட்டனர். ஆனால் 2007ஆம் ஆண்டு சிங்களவர்கள் 37.5 வீதமாக உயர்வடைந்திருக்கின்றனர். அதேவேளை, தமிழர்கள் 18.3 வீதமாகவும் முஸ்லிம்கள் 44 வீதமாகவும் வீழ்ச்சியடைந்துள்ளனர்.

இப்பொழுது சிங்கள மயமாக்கப்பட்டிருக்கும் பிரதேசங்கள் மீணடும் தமிழர் கைகளுக்கு வரும் என சிலர் நம்பலாம். உலக நாடுகளில் இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் மீண்டும் மீட்கப்பட்டன என உங்களில் சிலர் ஆறுதல் சொல்லலாம். ஆனால் அந்த இனங்களுக்கு உலக நாடுகளில் இருந்த ஆதரவின் ஒரு வீதமாவது எமக்கு இருக்கிறதா என்ற யதார்த்தத்தையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். தற்போது போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து அபிவிருத்தி என்ற பெயரில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் புதிய சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என அண்மையில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.




தீகவாபி புனித பிரதேசத் திட்டம் மற்றும் உல்லாசப் பிரயாண அபிவிருத்தி ஆகியவற்றின் கீழ் அம்பாறை மாவட்டத்திலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் குடும்பிமலை பிரதேசத்திலும் (இலங்கை அரசு வைத்த பெயர் தொப்பிகல) மேற்கொள்ளப்பட்டு வரும் "அக்ரோ" வர்த்தக அபிவிருத்தித் திட்டத்தின் கீழும் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டு வருகின்றனர். மகாவலி அபிவிருத்திக் திட்டம், கெடா ஓயா திட்டம் உட்பட மேற்படி திட்டங்களின் கீழ் கிழக்கு மாகாணத்தில் ஒரு இலட்சம் சிங்களவர்களைக் குடியமர்த்துவதற்கு இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது. இதன்படி கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களின் சனத்தொகையை 55 வீதமாக உயர்த்துவதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது.

இத்திட்டங்களை மஹிந்த அரசில் முக்கிய அமைச்சராக இருக்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சியைச்சேர்ந்த அமைச்சர் சம்பிக ரணவக்க மேற்கொண்டு வருகிறார். அரச காணிகள் அந்தந்த மாவட்டத்தில் உள்ள இன விகிதாசாரத்திற்கு ஏற்பவே பங்கிடப்பட வேண்டும் என காணிச்சட்டத்தில் குறிப்பிடப் பட்டிருக்கின்ற போதிலும் திருகோணமலையில் கந்தளாய், அல்லை, மொரவேவ, முதலிக்குளம், பதவியா திட்டங்களின் கீழும் அம்பாறையில் கல்லோயா, பனல் ஓயா, அம்பலன் ஓயா திட்டங்களின் கீழும் நூறுவீதம் சிங்களவர்களே குடிமயர்த்தப்பட்டனர். இத்திட்டங்களைச் செயற்படுத்து வதற்கு வசதியாக திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் அரச அதிபர் மற்றும் மாவட்ட காணி ஆணையாளர் ஆகிய பொறுப்பு வாய்ந்த பதவிகளுக்கு சிங்களவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர்.

2006ஆம் ஆண்டு வடக்குக்கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டு கிழக்கு மாகாணம் தனி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட பின்னர் கிழக்கு மாகாண நிர்வாக உயரதிகாரிகளாக மாகாண சபை நிர்வாகத்திலும் சரி, மாவட்ட செயலகங்களிலும் சரி, சிங்களவர்களே நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கும் றியல் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம, கிழக்கு மாகாண நிர்வாக உயர்மட்டத்திற்கு சிங்களவர்களையே நியமித்து வருகிறார். அவர்களில் பெரும்பாலானவர்கள் நிர்வாக சேவையைச் சேராத இராணுவ அதிகாரிகளாவர்.

திருகோணமலை மாவட்டத்தின் அரச அதிபராக மேஜர் ஜெனரல் ரஞ்சித் டி சில்வாவும், மாவட்ட புனர்வாழ்வு இணைப்பாளராக மேஜர்ஜெனரல் அமரடேவாவும், ஆளுநரின் செயலாளராக கப்டன் ஜெயசிங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று, கிழக்கு மாகாணசபை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டில் இருப்பதால் ஆளுநரே சகல அதிகாரங்களையும் கொண்டவராகக் காணப்படுகிறார். முதலமைச்சர் வெறும் கைப்பொம்மையாகவே செயற்படுகிறார்.

கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளராக முன்னாள் திருகோணமலை அரச அதிபர் ரொட்றிக்கோ நெலுதெனிய நியமிக்கப்பட்டிருக்கிறார். கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக முன்னாள் மாத்தறை மாவட்ட அரச அதிபர் உடகே நியமிக்கப்பட்டிருக்கிறார். அதேபோல, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் காணி அமைச்சின் செயலாளர்களாக சிங்களவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரு ஆசிரியர், மாகாண செயலாளருக்கு ஒரு கடிதத்தை எழுதுவதாக இருந்தால் சிங்களத்தில்தான் எழுத வேண்டும். இந்த அவலங்களுக்குக் காரணம் கிழக்கு மாகாண நிர்வாகம் சிங்களக் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கைகளுக்கு சென்றதுடன், சிங்கள அரசின் கைபொம்மையான ஒருவர் மாகாண முதலமைச்சரானமையும்தான் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மாகாணசபைக்குப் பூரண அதிகாரம் இல்லாவிட்டாலும் கூட அந்த மாகாணசபை தமிழர்களின் கைகளை விட்டுச் சென்றதால் ஏற்பட்டிருக்கும் பாதிப்புகளை கிழக்கு மாகாண மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

அதனால்தான் சொல்லுகிறோம், மாகாண நிர்வாகமானால் என்ன நாடாளுமன்ற பிரதிநிதித்துவமானால் என்ன தமிழர் பிரதிநிதித்துவத்தை தமிழர்கள் ஒற்றுமையோடு செயற்பட்டு அதனைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டால் மட்டுமே எதிலும் வெற்றிபெற முடியும். அது எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கும் பொருந்தும்.

இதை வாசித்த உங்களில் சிலர் கிழக்கு மாகாணம்தானே பறிபோயிருக்கிறது, வடமாகாணம் எங்கள் கைகளில்தானே இருக்கிறது என பெருமிதம் அடையலாம். ஆனால் வடமாகாணத்தின் பல பகுதிகளும் இன்று எங்கள் கைகளில் இல்லை என்பதுதான் யதார்த்தம். அதுபற்றி மற்றுமொரு சந்தர்ப்பத்தில் விரிவாகப் பார்ப்போம்.

மூலம்: உதயன் – பங்குனி 13, 2010



# தமிழீழ உட்கட்டுமானம்

## STRUCTURES OF THAMILEELAM



சுயநிறைவான தன்னில்தானே தங்கிநிற்கும் பொருளாதார வாழ்வுடைய சமூகமாக எமது சமூகம் உருவாகவேண்டும் என்பதே, எனது விரும்பம்: மக்கள் தம்மைத்தாமே ஆளும் உரியையுடைய சனநாயக ஆட்சி முறையையே நான் விரும்புகின்றேன். இந்தப் புதிய சமூகத்தில், உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாதார சமத்துவம் நிலவ வேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. திரு. வே. பிரபாகரன் அவர்கள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வெளியீடு




## தமிழீழத்தின் கைத்தொழல் மையங்கள்

## மாநிலங்களும், மாநிலங்களுக்கான தொழிற்சாலைகளும்

### 01 நல்லூர் – யாழ்ப்பாணம்

- *புனரமைக்கப்பட வேண்டிய தொழிற்சாலை*

1. ரயர் புனரமைப்புத் தொழிற்சாலை - கொக்குவில்
2. பனிக்கட்டித் தொழிற்சாலை - குருநகர், பருத்தித்துறை, மயிலிட்டி
3. மீன் தூள் தொழிற்சாலை - மண்டைதீவு
4. "ரயர்" தொழிற்சாலை - நாவற்குழி
5. சவர்க்கார தொழிற்சாலை - யாழ்ப்பாணம்
6. வடிசாலை தொழிற்சாலை - திக்கம்
7. மீன் வலை உற்பத்தி நிலையம் - குருநகர், காரைநகர்
8. "இறால்" பதனிடும் நிலையம் - குருநகர்
9. "நூல்" நூற்றலும், நெய்தலும் தொழிற்சாலை - கோண்டாவில்
10. நெசவுத் தொழிற்சாலை - வல்லை
11. புகையிலை பதனிடும் நிலையம் - கோண்டாவில்
12. நீர் இறைக்கும் இயந்திர உற்பத்தி - நாவற்குழி

- *புதிதாக உருவாக்கப்பட வேண்டிய தொழிற்சாலை*

1. ஒளி, ஒலி தொழிற்சாலை - யாழ்ப்பாணம்
2. குளிர்சாதனப் பெட்டித் தொழிற்சாலை - யாழ்ப்பாணம்
3. மென்பானம் உற்பத்தி தொழிற்சாலை - சண்டிலிப்பாய்
4. அலுமினியத் தொழிற்சாலை - மண்டைதீவு
5. புகையிலை பதனிடும் தொழிற்சாலை - வேலணை

- *ஏற்றுமதிக்காக உருவாக்கப்படும் தொழிற்சாலை*

1. கடல் உணவு ஏற்றுமதி - யாழ்ப்பாணம்
2. மதுசார ஏற்றுமதி தொழிற்சாலை - சண்டிலிப்பாய்

### 02 வரணி – கொடிகாமம்

- *புனரமைக்கப்பட வேண்டிய தொழிற்சாலை*

1. வடிசாலை நிலையம் - வரணி
2. பதனீர், பனங்கட்டித் தொழிற்சாலை - உப்பளம், சாவகச்சேரி
3. உப்பு உற்பத்தி - சாவகச்சேரி
4. பாதணி தொழிற்சாலை - பருத்தித்துறை
5. சீமேந்து தொழிற்சாலை - காங்கேசன்துறை
6. கண்ணாடி தொழிற்சாலை - நீர்வேலி

- *புதிதாக உருவாக்கப்பட வேண்டிய தொழிற்சாலை*

1. சிகரட் தொழிற்சாலை - நெல்லியடி
2. கண்ணாடி தொழிற்சாலை - நாகர்கோயில்
3. சீனி சுத்திகரிக்கும் ஆலை (Sugar Refinary) - கொடிகாமம்

- *ஏற்றுமதிக்காக உருவாக்கப்பட்ட தொழிற்சாலை*

1. மதுசார ஏற்றுமதி உற்பத்தி நிலையம் - நாகர்கோயில்

### 03 கரைச்சி – கிளிநொச்சி

- *புனரமைக்கப்பட வேண்டிய தொழிற்சாலை*

1. இரசாயனத் தொழிற்சாலை - பரந்தன்
2. விவசாய ஆராய்ச்சி நிலையம் - கிளிநொச்சி
3. நெல் தரப்படுத்தல் நிலையம் - கிளிநொச்சி
4. செங்கல், ஓட்டுத் தொழிற்சாலை - கண்டாவளை

- *புதிதாக உருவாக்கப்பட வேண்டிய தொழிற்சாலை*

1. பால் பதனிடும் தொழிற்சாலை - கிளிநொச்சி
2. உழவு இயந்திரம் பொருத்தும் தொழிற்சாலை (Fgrguson and Ford Assembling Factory) - முரகண்டி
3. பால்கட்டி, வெண்ணெய் கட்டித் தொழிற்சாலை - கிளிநொச்சி
4. கிருமிநாசினி தெளிப்பான் உற்பத்தி ஆலை - பரந்தன்
5. நெல் குத்தும் ஆலை உபகரண உற்பத்தி ஆலை - பரந்தன்
6. மரக்கறி எண்ணெய் உற்பத்தி நிலையம் - பரந்தன்

### 04 பூநகரி – பூநகரி

- **புனரமைக்கப்பட வேண்டிய தொழிற்சாலை**




| | | |
|---|---|---|
| 1. | பதனீர், பனங்கட்டி தொழிற்சாலை | - பூநகரி |
| 2. | பாரிய நெல் குத்தும் ஆலை | - முழங்காவில் |

- ***புதிதாக உருவாக்கப்பட வேண்டிய தொழிற்சாலை***

| | | |
|---|---|---|
| 1. | நெருப்பெட்டி தொழிற்சாலை | - முழங்காவில் |
| 2. | கிருமி நாசினி உற்பத்தி | - முழங்காவில் |
| 3. | பென்சில், பேனை உற்பத்தி தொழிற்சாலை | - பூநகரி |
| 4. | உருக்குத் தொழிற்சாலை | - முழங்காவில் |
| 5. | துவிச்சக்கர வண்டித் தொழிற்சாலை | - பூநகரி |

**05 முல்லைத்தீவு – தண்ணீரூற்று**

- ***புனரமைக்கப்பட வேண்டிய தொழிற்சாலைகள்***

| | | |
|---|---|---|
| 1. | பனிக்கட்டி தொழிற்சாலை | - முல்லைத்தீவு |
| 2. | தேங்காய் எண்ணெய் ஆலை | - சிலாபத்தை |
| 3. | தும்புத் தொழிற்சாலை | - புதுக்குடியிருப்பு |

- ***புதிதாக உருவாக்கப்பட வேண்டிய தொழிற்சாலைகள்***

| | | |
|---|---|---|
| 1. | பனிக்கட்டி தொழிற்சாலை | - முல்லைத்தீவு |
| 2. | மீன் தூள் தொழிற்சாலை | - அலம்பில் |
| 3. | TIN மீன் தொழிற்சாலை | - சிலாபத்தை |
| 4. | இறால் வளர்ப்பு அமைவுகள் | - வட்டவாள், மணலாறு |
| 5. | இறால் பதனிடும் நிலையம் | - முல்லைத்தீவு |
| 6. | மதுசாரக் கலப்பு நிலையம் | - தண்ணீரூற்று |
| 7. | மென்பான உற்பத்தி நிலையம் | - தண்ணீரூற்று |
| 8. | மீன்பிடி வள்ளம் உற்பத்தி தொழிற்சாலை | - முல்லைத்தீவு |
| 9. | கப்பல் உடைக்கும் ஆலை (Ship Braking) | - முல்லைத்தீவு |

- ***ஏற்றுமதிக்காக உருவாக்க வேண்டிய தொழிற்சாலைகள்***

| | | |
|---|---|---|
| 1. | தேங்காய் துருவல் ஆலை | - சிலாபத்தை |

**06 மாங்கும் – மாங்குளம்**

- ***புனரமைக்கப்பட வேண்டிய தொழிற்சாலை***

| | | |
|---|---|---|
| 1. | பால் பதனிடும் தொழிற்சாலை | - மாங்குளம் |

- ***புதிதாக உருவாக்கப்பட வேண்டிய தொழிற்சாலை***

| | | |
|---|---|---|
| 1. | உருக்கு வடிவமைப்பு தொழிற்சாலை | - மாங்குளம் |
| 2. | வாயு உலைகள் (Gas Cookers, Petrol Max, Pressure Cookers) | - முருகண்டி |
| 3. | அலுவலக உபகரண தொழிற்சாலை | - மாங்குளம் |
| 4. | ஒளி, ஒலி சாதன தொழிற்சாலை | - மாங்குளம் |
| 5. | பேருந்து, சுமை ஊர்தி பொருத்தும் தொழிற்சாலை (Bus, Lorry Assembling Factory) | - முரகண்டி |
| 6. | தீந்தை வகை உற்பத்தி தொழிற்சாலை | - முருகண்டி |

**07 மாந்தை – உயிலங்குளம்**

- ***புனரமைக்கப்பட வேண்டிய தொழிற்சாலைகள்***

| | | |
|---|---|---|
| 1. | பனிக்கட்டி தொழிற்சாலை | - பேசாலை, சிலாபத்துறை |
| 2. | மீன்தூள் ஆலை | - வங்காலை |
| 3. | மீன் பதனிடும் நிலையம் | - பேசாலை |
| 4. | இறால் பதனிடும் தொழிற்சாலை | - விடத்தல்தீவு |
| 5. | மீன்பிடி வலை உற்பத்தி நிலையம் | - உயிலங்குளம் |
| 6. | மீன்பிடி உபகரண உற்பத்தி நிலையம் | - உயிலங்குளம் |
| 7. | பிளாஸ்ரிக் வள்ளம் உற்பத்தி நிலையம் | - மன்னார் |
| 8. | உருக்கு மீன்பிடி வள்ளம் உற்பத்தி ஆலை | - மன்னார் |
| 9. | வள்ளம் பழுதுபார்க்கும் நிலையம் | - மன்னார் |

**08 மடு – மடுறோட்**

- ***புனரமைக்கப்பட வேண்டிய தொழிற்சாலைகள்***

| | | |
|---|---|---|
| 1. | மட்பாண்ட தொழிற்சாலை | - முருங்கன் |
| 2. | சீமேந்து அரைக்கும் ஆலை | - முருங்கன் |

- ***ஏற்றுமதிக்கு உருவாக்கப்பட வேண்டிய தொழிற்சாலைகள்***

| | | |
|---|---|---|
| 1. | மரமுந்திரிகை பதனிடும் நிலையம் | - கொண்டச்சி |

**09 வவுனியா – ஓமந்தை**

- ***புனரமைக்கப்பட வேண்டிய தொழிற்சாலைகள்***

| | | |
|---|---|---|
| 1. | பாரிய நெல்குத்தும் ஆலை | - வவுனியா |

- ***புதிதாக உருவாக்கப்பட வேண்டிய தொழிற்சாலைகள்***

1. சுதந்திர வர்த்தக வலையம்

**10 குச்சவெளி – திரியாய்**

- ***புதிதாக உருவாக்கப்பட வேண்டிய தொழிற்சாலைகள்***

| | | |
|---|---|---|
| 1. | கோழித்தீன் உற்பத்தி | -திரியாய் |
| 2. | TIN மீன் தொழிற்சாலை | - திரியாய் |
| 3. | மீன் தூள் ஆலை | - திரியாய் |

**11 திருகோணமலை**

- புதிதாக உருவாக்கப்படக்கூடிய தொழிற்சாலைகள்

| | | |
|---|---|---|
| 1. | கப்பல் கட்டும் தொழிற்சாலை | - திருகோணமலை |
| 2. | கப்பல் பழுதுபார்க்கும் தொழிற்சாலை | - திருகோணமலை |
| 3. | வெளி இணைப்பு இயந்திர தொழிற்சாலை | - திருகோணமலை |
| 4. | மீன்பிடி வலை தொழிற்சாலை | - திருகோணமலை |
| 5. | மீன் பதனிடும் தொழிற்சாலை | - திருகோணமலை |
| 6. | TIN மீன் தொழிற்சாலை | - திருகோணமலை |
| 7. | பிஸ்கட் உற்பத்தி தொழிற்சாலை | - திருகோணமலை |
| 8. | பிறிமா அரைக்கும் ஆலை | - திருகோணமலை |


**முக்கிய அறிவித்தல்**

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு**

**437.345.4203**




- ***ஏற்றுமதி செய்யப்படக் கூடிய தொழிற்சாலைகள்***

1. கடல் உணவு ஏற்றுமதி தொழிற்சாலை - திருகோணமலை

- ***தற்போது செயற்பட்டுக்கொண்டிருக்கும் தொழிற்சாலைகள்***

1. சீனித் தொழிற்சாலை - கந்தளாய்
2. பிறிமா அரைக்கும் ஆலை - திருகோணமலை

**12 மூதூர் – கிளிவெட்டி**

- ***புதிதாக உருவாக்க வேண்டிய தொழிற்சாலைகள்***

1. பாரிய நெல்குத்தும் ஆலை - மூதூர்

**13 வாகரை – மாங்கனி**

- ***ஏற்றுமதி செய்யக்கூடியவை***

1. இறால் பதனிடும் நிலையம் - வாகரை
2. மீன் துாள் ஆலை - வாகரை
3. மீன் பதனிடும் நிலையம் - வாகரை

**14 வெல்லாவெளி – போராறு**

- ***ஏற்றுமதி செய்யக்கூடிய தொழிற்சாலைகள்***

1. இறால் வளர்ப்புத் திட்டம் - வெல்லாவெளி, பட்டியிருப்பு, கண்டியிருப்பு, மண்டூர்
2. இறால் பதனிடும் தொழிற்சாலை - வெல்லாவெளி

**15 மட்டக்களப்பு – கரடியன் ஆறு**

- ***புனரமைக்கப்பட வேண்டிய தொழிற்சாலைகள்***

1. கடதாசி ஆலை - வாழைச்சேனை
2. நூல் நெய்தல் தொழிற்சாலை - மட்டக்களப்பு
3. மட்பாண்ட தொழிற்சாலை - மட்டக்களப்பு
4. பால் பதனிடும் நிலையம் - மட்டக்களப்பு

**16 அக்கரைப்பற்று – பாலமுனை**

- ***புதிதாக உருவாக்கப்பட வேண்டிய தொழிற்சாலைகள்***

1. பனிக்கட்டி தொழிற்சாலை - அக்கரைப்பற்று
2. மீன் துாள் ஆலை - அக்கரைப்பற்று
3. இறால், மீன் பதனிடும் நிலையம் - பாலமுனை

**17 பொத்துவில்**

- ***புதிதாக உருவாக்கப்பட வேண்டிய தொழிற்சாலைகள்***

1. வடிசாலை - பொத்துவில்
2. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் - பொத்துவில்
3. வினாகிரி உற்பத்தி நிலையம் - பொத்துவில்

**18 அறுவாக்காடு – பொம்பரிப்பு**

**19 புத்தளம் – புத்தளம்**

- ***புனரமைக்கப்பட வேண்டிய தொழிற்சாலைகள்***

1. சீமேந்து தொழிற்சாலை - புத்தளம்
2. நெசவு தொழிற்சாலை - புத்தளம்
3. பனிக்கட்டி தொழிற்சாலை - புத்தளம்

- ஏற்றுமதிக்காக உருவாக்கப்பட வேண்டிய தொழிற்சாலைகள்

1. கடல் உணவு பதனிடும் தொழிற்சாலைகள் - புத்தளம்

**20 சிலாபம்**

1. பனிக்கட்டித் தொழிற்சாலை - சிலாபம்
2. இறால் பதனிடும் நிலையம் - சிலாபம்
3. மீன் பதனிடும் (ஏற்றுமதி) - சிலாபம்
4. மீன் துாள் ஆலை (ஏற்றுமதி) - சிலாபம்
5. வடிசாலை (ஏற்றுமதி) - சிலாபம்
6. இறால் வளர்ப்புத் திட்டம் (ஏற்றுமதிக்காக) - சிலாபம்

முற்றும்.




**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியப் பற்றாளருமான மாமனிதர் கிட்டினன் சிவநேசன் அவர்கள் சிங்கள ராஜபக்ச அரசாங்கத்தினால் 15 ஆண்டுகளுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்டார்.**

# யாழ்ப்பாணத்துக் கிணற்றுநீரைக் குடிக்கலாமா?

6.02.2023

கடந்த ஆண்டின் இறுதியில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அது தொடர்பாக மேடைகளில் பேசியுமிருக்கிறார். அவர் கூறியதன் சுருக்கம் வருமாறு... “தண்ணீர் போத்தல் வியாபாரிகள் யாழ்ப்பாணத்தை மட்டுமல்ல வட மாகாணம் முழுவதையும் இப்பொழுது ஆக்கிரமித்து, நிறையப் பணத்தைச் சம்பாதிக்கிறார்கள். யாழ்ப்பாணத்துத் தண்ணீரைப்போல சுவையான தண்ணீர் ஒரிடமும் இல்லை என்று பேசப்பட்ட பல நூறு ஆண்டு வரலாறு பாழடைந்து விட்டது. யாழ்ப்பாணத்துக் கிணற்றுநீரைக் குடிக்கலாமா? இதுபற்றி உடனடியாக யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞானத்துறை சார்ந்தவர்கள், விவசாயத் துறை சார்ந்தவர்கள், பொருளியல் துறை சார்ந்தவர்கள், அரசியல் பிரமுகர்கள் ஒன்று கூடித் தெளிவுபடுத்த வேண்டும். குடாநாட்டில் மக்கள் குடிநீரை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பது சம்பந்தமாக ஒரு தெளிவுறுத்தல் கூட்டத்தை நடத்தி, ஊடகங்கள் ஊடாக தண்ணீரைப் பாவிக்கலாமா? என்ன செய்யலாம்? போத்தல் தண்ணி கலாச்சாரம்தான் இனி எங்களுடைய கலாச்சாரமா? அந்த போத்தல் எங்கிருந்து உற்பத்தி ஆகிறது? எப்படி யாழ்ப்பாணத்திற்கு விற்பனைக்கு வந்து சேருகிறது? என்பவற்றைத் தெளிவுபடுத்துங்கள்”.

ஆறு.திருமுருகன் மேற்கண்டவாறு கேட்டு கிட்டத்தட்ட இரண்டு மாதங்களின் பின் கடந்த பெப்ரவரி மாதம் 23ஆம் தேதி ஒரு செய்தி வெளிவந்தது. அதில், வடமாகாணத்தில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீர் பாதுகாப்பானதா என உறுதிப்படுத்துமாறு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. வடமாகாண நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை வடக்கு மக்களுக்கு விநியோகிக்கும் குடிநீர் பாதுகாப்பானதா என்பது தொடர்பில் ஒரு வாரத்துக்குள் அறிக்கை தர வேண்டும் என்றும்பிரதேச சபைகள் ஊடாக வழங்கப்படும் குடிநீர் தொடர்பிலும் அறிக்கை தருமாறும் ஆளுநர் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் அச்செய்தி கூறுகிறது.

மேலும், வடமாகாணத்தில் பொதுமக்களுக்கான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் பிரதேச சபைகள், மாகாண மற்றும் மத்திய அமைச்சின் கீழ் செயல்படும் அனைத்து நிறுவனங்களும் 13 வாரத்துக்கு ஒரு தடவை குடிநீரின் தர நிர்ணயம் தொடர்பில் அறிக்கை வழங்க வேண்டும் என்றும் ஆளுநர் கேட்டுள்ளார். அது மட்டுமல்லாது வட மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் உள்ள பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள் பொது சுகாதார உத்தியோகத்தர்கள் பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் தொடர்பில் ஆய்வு அறிக்கை வழங்க வேண்டும் என்றும், குறித்த செயற்பாட்டினை வடக்கு மாகாண பிரதம செயலாளர் உள்ளூர் ஆட்சி அமைச்சின் செயலாளர், மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோர் கண்காணிக்க வேண்டும் என்றும் ஆளுநர் பணித்துள்ளதாக அச்செய்தி மேலும் கூறுகிறது

ஆறு.திருமுருகன் கூறுவதுபோல, ஒருகாலம் கோயில் கிணற்று நீரைத் தீர்த்தம் என்று குடித்த மக்கள் இப்பொழுது தண்ணீர்ப் போத்தல்களை விரும்பி நுகர்ந்து வருகிறார்கள். தண்ணீர்ப் போத்தல் கலாச்சாரத்தால் முதலாவதாக, உள்ளூர்க் கிணறுகளில் உள்ள தண்ணீர் சுத்தமற்றது என்று நிராகரிக்கப்படுகிறது. இரண்டாவதாக, பிளாஸ்டிக் பிரயோகம் அதிகரிக்கிறது. மூன்றாவதாக, போத்தல்களில் அடைக்கப்பட்ட தண்ணீர் விரயம் செய்யப்படுகிறது. எவ்வாறெனில், ஒரு போத்தலில் வழங்கப்படும் தண்ணீரை அனைவரும் முழுமையாக அருந்துவார்கள் என்று இல்லை. ஒருவர் அருந்திய போத்தலை இன்னொருவர் அருந்த மாட்டார். அதனால் மிச்சம் விடப்படும் நீர் விரயமாகிறது. நாலாவது, தண்ணீர் போத்தல் பாவனையால் தென்னிலங்கை முதலாளிகள் லாபம் ஈட்டுகிறார்கள். ஐந்தாவது, பாவனையில் உள்ள தண்ணீர்ப் போத்தல்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி உற்பத்தி செய்யப்பட்டவையா என்பதனைத் தொடர்ச்சியாக யார் கவனிப்பது?

தண்ணீர்ப் போத்தல் எனப்படுவது உதிரியானது அல்ல. அது ஒரு உலகப் பொது நடைமுறை. அது ஒரு கலாச்சாரத்தை பிரதிபலிக்கின்றது. அது நகரமயமாதல், உலகமயமாதலின் விளைவு. நமது கொண்டாட்டங்களை, நிகழ்வுகளை மண்டபங்களில் ஒழுங்குபடுத்தும்போது அந்த மண்டபத்துக்குரிய பக்கேஜுக்குள் தண்ணீர் போத்தலும் அடங்கும். எனவே தண்ணீர்ப் போத்தல் கலாச்சாரம் என்பது உள்ளூர் வளங்களை நிராகரிக்கும் உலகமயமாதலின் விளைவுகளில் ஒன்று. எப்பொழுது மனிதர்கள் “ஃபாஸ்ட் பூட்” கலாச்சாரத்துக்கு பழக்கப்பட்டார்களோ, எப்பொழுது மனிதர்கள் பேரங்காடிகளின் நுகர்வோராக மாறினார்களோ, அப்பொழுதே தண்ணீர்ப் போத்தலும் நமது வாழ்வில் ஒரு பகுதியாக, எமது நிகழ்வுகளின் ஒரு பகுதியாக எமது கொண்டாட்டங்களில் ஒரு பகுதியாக மாறி விட்டது. எனவே தண்ணீர்ப் போத்தலை நிராகரிப்பது அல்லது உள்ளூர்க் கிணறுகளுக்குத் திரும்பிச் செல்வது என்பது ஒரு விதத்தில் உள்ளூர் மயமாதல், அல்லது உலக மயமாதலின்



தீய விளைவுகளை நிராகரித்தல் என்ற ஒரு புதிய பண்பாட்டுப் போக்கிற்குள் அடங்கும்.

எனவே தண்ணீர்ப் போத்தல்களுக்குப் பதிலாக உள்ளூர்க் கிணறுகளை நோக்கித் திரும்புங்கள் என்ற அழைப்பு தனிய ஒரு மதப்பெரியார் ஆகிய ஆறு திருமுருகனிடமிருந்து வந்தால் மட்டும் போதாது. அது ஓர் அரசியல். அது ஒரு புதிய பண்பாட்டுக்கான அழைப்பு. அது ஒரு புதிய வாழ்க்கை முறைக்கான அழைப்பு. எனவே அதை ஒரு கூட்டுச் செயற்பாடாக முன்னெடுக்க வேண்டும்.

உள்ளூர் வளங்களை நிராகரித்தல் அல்லது அவமதித்தல் அல்லது உள்ளூர் வளங்களை உலகத் தராசுகளில் வைத்து நிறுத்தல் என்பது ஈழத் தமிழர்களுக்கு மட்டும் உரிய ஒரு போக்கு அல்ல. உள்ளூர் நீர் மூலங்கள் அசுத்தமானவை அல்லது உலக சுகாதார அளவுகோள்களின் ஊடாக பரிசோதிக்கப்படாதவை என்ற கருத்து படித்த தமிழர்கள் பலர் மத்தியில் உண்டு.

குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழர்கள் விடுமுறைக்கு நாடு திரும்பும்போது ஒரு கையில் தண்ணீர் போத்தலோடுதான் வருகிறார்கள். தண்ணீர் போத்தலோடு தான் எங்கும் திரிகிறார்கள். அவர்கள் தங்கும் வீடுகளில் அவர்களுக்கென்று போத்தல் தண்ணீரை உறவினர்கள் வாங்கிக் கொடுக்கிறார்கள். அவர்கள் உள்ளூர் கிணற்று நீரை நுகர மாட்டார்கள். எந்த நீரில் அவர்கள் பிறந்தார்களோ, எந்த நீரில் அவர்கள் வளர்ந்தார்களோ, அந்த நீரையே அவர்கள் இப்பொழுது சுகாதார மற்றது என்று நிராகரிக்கக் காண்கிறோம்.

எனவே உள்ளூர் வளங்களையும் உள்ளூர் அறிவையும் உள்ளூர்த்தனங்களையும், உள்ளூர்ப் பண்பாடுகளையும் உள்ளூர்ச்சாப்பாட்டையும் மேலுயர்த்தும் ஒரு கூட்டுச் செயற்பாட்டின் ஒரு பகுதிதான் உள்ளூர் நீர் மூலங்களுக்கு திரும்பிச் செல்வது என்பது. அதைத் தனியாக ஒரு ஆறு திருமுருகன் மட்டும் செய்ய முடியாது. சம்பந்தப்பட்ட திணைக்களங்களும், துறை சார் நிபுணர்களும், சமூகத்தின் எனைய கருத்துருவாக்கிகளும், ஏனைய மதத் தலைவர்களும், அரசியல்வாதிகளும் இணைந்து அதை ஒரு கூட்டுச் செயற்பாடாக முன்னெடுக்க வேண்டும்.

மிகக்குறிப்பாக ஆறு திருமுருகன் தன் அறிக்கையில் கேட்டிருந்தது போல யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள துறைசார் நிபுணர்கள் யாழ்ப்பாணத்தின் உள்ளூர் நீர் மூலங்கள் சுகாதாரமானவையா என்பதனை நிரூபிக்க வேண்டும். அதே சமயம் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் வெளியில் இருந்து வரும் தண்ணீர் போத்தல்கள் சுகாதாரமானவையா என்பதனையும் உறுதிப்படுத்த வேண்டும்.

உள்ளூர் நீர் மூலங்கள் தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் சந்தேகங்களை நீக்க வேண்டிய பொறுப்பு இச்சமூகத்தில் வாழும் துறைசார் நிபுணர்களுக்கு உண்டு. இது தொடர்பில் ஏற்கனவே உள்ளூர் துறைசார் நிபுணர்கள் கவனிக்கத் தவறிய ஒரு விடயத்தை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். ஒரு காலம் யாழ்ப்பாணத்தின் அடையாளமாக போற்றப்பட்டது முள்முருக்கு. ஆனால் இப்பொழுது நாட்டில் முள்முருக்கு அரிதாகிவிட்டது. முள்முருக்கை ஏதோ ஒரு நோய் தாக்கியது. அதன் விளைவாக அதன் இலைகள் சுருளத் தொடங்கின. இது தொடர்பில் யாழ் பல்கலைக்கழகமும் உட்பட சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணர்கள் யாராவது ஏதாவது நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்களா? முள்முருக்கு எனப்படுவது நமது திருமண வீடுகளில் கன்னிக்காலுக்கு பயன்படுத்தப்படுவது. இப்பொழுது பாரம்பரிய முள்முருக்கு இல்லாத காரணத்தால் சோடினை முள்முருக்கை நாங்கள் பயன்படுத்தத் தொடங்கி விட்டோம். இனி ஒரு காலம் பிளாஸ்டிக் முள்முருக்கையும் பயன்படுத்த வேண்டி வருமா?



முள்முருக்கு, தமிழ் மக்களின் பாரம்பரிய நீர் மூலங்கள் போன்றவை தொடர்பில் சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணர்கள் பொதுவெளியில் உரையாட முன்வர வேண்டும். இதுதொடர்பில் வரும் சனிக்கிழமை 11ஆம் தேதி யாழ்.கோவில் வீதியில் அமைந்துள்ள, அகில இலங்கை இந்துமாமன்ற யாழ்.பிராந்திய நிலையத்தில் ஒரு கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. அது ஒரு நூல் வெளியீடு. கலாநிதி ஆறு திருமுருகன் எழுதிய திருக்கேதீஸ்வர இலக்கியம் என்ற ஒரு நூலை வெளியிட்டு வைக்கும் அந்நிகழ்வில் பொறியியலாளர் சர்வராஜா நினைவுப் பேருரை ஆற்றுகிறார். “யாழ் நீர் வளங்களின் மீதான ஆபத்துக்களும் வாய்ப்புகளும்” என்பது அந்த நினைவுப் பேருரையின் தலைப்பு ஆகும். தமிழ் மக்களின் உள்ளூர் நீர் மூலங்களின் மீதான விழிப்பை ஏற்படுத்தும் விதத்தில் அது போன்ற கருத்தரங்குகளை ஆர்வமுள்ளவர்கள் ஒழுங்குபடுத்த வேண்டும். இது ஒரு பொது விவாதமாக மாற்றப்பட வேண்டும். குடிக்கும் நீரின் நல்லது கெட்டது தெரியாத ஒரு சமூகமா நாங்கள் ?

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆதவன் இணையத்தளத்தில் வெளிவந்த இக்கட்டுரை திருத்தப்பட்டு பிரசுரிக்கப்படுகிறது.

நன்றி: நிலாந்தன்


வெளிவந்துவிட்டது
உலக வணிகம்
ULAGA VANIKAM
2023
BUSINESS DIRECTORY
விளம்பரமின்றி வியாபாரமில்லை
தங்கள் வணிகத்தை மேம்படுத்திக்கொள்ள உலக வணிகத்தில்
உங்கள் விளம்பரமும் இடம்பெற அழையுங்கள்
www.ulagavanikam.ca
437-345-4203

# தலைவர் பிரபாகரன் 08ஆம் வகுப்பு படிக்கும் போது எழுதி இயக்கிய 'மர்மமனிதன்' நாடகத்தின் கதையும் 2009 முள்ளிவாய்க்கால் மர்மமும்!



அந்த மர்மச் சிரிப்பின் ஆழத்தை அறிய வேண்டுமானால் அறுபதுகளின் கடைசியில் வல்வை சிதம்பராக்கல்லூரியின் வகுப்பறையொன்றுக்குள் நாம் நுழைய வேண்டும்.

காலப் புத்தகத்தின் ஏடுகளை பின்புறமாகத் தட்டுகிறேன்... இதோ அந்த வகுப்பறை...

அந்த வகுப்பறை சாதாரண வகுப்பறையல்ல... உலக நாடுகளே வருடந்தோறும் கார்த்திகை 27 அவரின் மாவீரர் நாள் உரையைக் கேட்பதற்காகக் காத்துக் கிடந்ததே... அந்த உரைகளை உருவாக்கிய உலைக்களமே அதுதான்.

அன்று பிரபாகரன் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார், அதிர்ஷ்டவசமாக அவருடன் நானும் படித்துக் கொண்டிருந்தேன்.

அப்போது வரலாற்று மேதை இளவாலை க.புவனசுந்தரம் எமது வகுப்பாசிரியராக இருந்தார், அவர் மேற்பார்வையில் ஒவ்வொரு வாரமும் பாடசாலையில் இலக்கிய மன்றக் கூட்டம் நடைபெறும்.

மாணவர்கள் தமது பல்வேறு கலைத்திறன்களைக் காட்டும் மேடையாக அது அமைந்திருக்கும், அந்த இலக்கிய மன்றத்தின் பத்திராதிபராக இருந்தவரே பிரபாகரன்.

அவர் ஒருவருக்கு மட்டுமே ஒவ்வொரு வாரமும் மேடையில் தோன்றி உரைகளை வாசிக்கும் அரிய வாய்ப்பைக் காலம் வழங்கியிருந்தது.

நாம் எழுதிக் கொடுக்கும் ஆக்கங்களை திருத்தி செப்பனிட்டு, அத்தோடு பல அரிய நூல்களில் இருந்து திரட்டிய தகவல்களையும் ஒழுங்குபட தொகுத்து வாரம்தோறும் வாசிப்பார்.

அந்த வாசிப்பே நமக்கு அறிவின் கதவுகளை திறக்கும் சிந்தனை ஊற்றுக்களாக இருந்தாலும், அந்தப் பத்திராதிபர் பதவி உலகப் புகழ் பெறும் ஒரு பணிக்கான ஒத்திகை என்பதை அன்று என்னால் புரிய முடியவில்லை.

அக்காலத்திலேதான் பிரபாகரன் நாடகம் ஒன்றை எழுதி, நடித்து, இயக்கும் முயற்சிக்குள் இறங்குகிறார்.

""மர்ம மனிதன்..! " இதுதான் நாடகத்தின் பெயர்.

அந்தக் கதையின் உள்ளோட்டமே அவர் போராட்டத்தின் நிழல் என்பதை அப்போது அறிந்தவர் எவரும் இல்லை.

பிரபாகரன் ஒரு மர்மமான முடிவை எடுக்கப்போகிறார், முள்ளிவாய்க்காலில் என்ன நடக்கப்போகிறது, எங்கிருந்து பிரச்சனை ஆரம்பமாகப் போகிறது என்பதையெல்லாம் அவருடைய உள்ளம் அன்றே ஒரு நாடகப் பிரதியாகப் பதிவு செய்திருப்பதுதான் நம்பமுடியாத புதுமை.

ஒரு துப்பாக்கியுடன் ஆரம்பித்த போராட்டம் முதற்கொண்டு, கடந்த 2009 மே 17 வரை அவருடைய வாழ்க்கையின் நகர்வைக் கூர்ந்து அவதானித்தால் அந்த நாடகம் அவருடைய வாழ்வின் நெக்கட்டிப் பிரதிபோல ஒளிர்வதைக் காணலாம்.

ஒருவர் உண்மைக்குண்மையாக மனம் உருகி எழுதிய நாடகப்பிரதிகளே அவருடைய உண்மையான ஜாதகக் குறிப்பாக இருக்கும், அதுவே அவருடைய டி.என்.ஏ என்னும் மரபணுவின் அசல் பிரதி போலவும் இருக்கும் என்பதற்கு சேக்ஷ்பியரின் நாடகப் பிரதிகள் ஒரு சான்று என்று கூறுவார்கள், அதையே பிரபாகரனின் மர்ம மனிதனில் காண்கிறேன்.

அந்த நாடகத்தின் பிரச்சனைகள் ஒரு மோதிரத்தை எடுத்துச் சென்று துப்பாக்கி தூக்குவதில் இருந்து ஆரம்பிக்கும்...

பின்னாளில் அவர் தன் தாயாரின் காப்பை எடுத்துக் கொண்டு துப்பாக்கி வேண்ட சென்ற சம்பவம்போல அந்த மோதிரத்தில் இருந்தே கதை சூல் கொள்ளும்.

மோதிரத்தில் இருந்து புறப்பட்டு படிப்படியாக அது உக்கிரமடைந்து பெரும் போராக மாற்றமடையும்... சிதம்பராக்கல்லூரி மைதானத்தில் ஒத்திகை நடந்தபோது எனக்கு சிறிய பாத்திரத்தைத் தந்து மூன்றாவது காட்சியோடு கதையில் இருந்து வெளியேறும்படி கூறிவிட்டார்.

மற்றய அனைவரும் அந்த புயலில் சிக்குப்பட்டு போராடிக் கொண்டிருப்பார்கள்.

கடைசிக்காட்சியானது பெரும் துப்பாக்கிச் சண்டையை கொண்டிருந்தது, அன்று நாங்கள் முள்ளிவாய்க்காலிலும், புதுமாத்தளனிலும் பார்த்தது போல அதுவும் பெரும் அவலமான காட்சியாகும், நாடக மேடையே இரத்தக் காடாகக் கிடந்தது.

நாடக முடிவில் மயான அமைதி... வகுப்பறையே உறைந்து கிடந்தது.

நாடகத்தில் பங்கேற்ற அனைவருமே கொத்துக் கொத்தாக இறந்து கிடந்தார்கள், துப்பாக்கி தூக்கி அடிபடாமல் வெளியேறிய பாத்திரமான நான் அந்தக்கதையின் முடிவு பற்றியே யோசித்துக் கொண்டிருந்தேன்.

அழிந்துவிடக்கூடாத அந்தப்பொக்கிஷத்தை காலம் எனது மூளையில் பதிவு செய்து கொண்டிருந்தது...

கலவரத்துடன் புவனசுந்தரம் மாஸ்டரின் முகத்தைப் பார்த்தேன். அவர் நாடியில் கை வைத்தபடி இருந்தார்... அவருடைய முகத்தில் ஈயாடவில்லை.

கடைசிக்காட்சியில் எல்லோருமே இறந்துவிட்டார்கள்... அப்படியானால் மர்ம மனிதன் என்பதன் பொருள்தான் என்ன...? முடிவில் பிரபாகரன் எதைச் சொல்ல வருகிறார்...?

இறந்து கிடந்தவர்களில் பிரபாகரனைத் தேடிப்பார்க்கிறேன்... கண்கள் நான்கு பக்கங்களும் சுழலுகிறது... எங்குமே அவரைக் காணவில்லை...

அவர் இறந்துவிட்டாரா...? இல்லை உயிருடன் இருக்கிறாரா...? நாடகமே முடிவடைந்துவிடும்.

அந்த மனிதன் மர்மமானவன் அவன் இறந்தானா இருக்கிறானா என்பதை யாராலும் சொல்ல முடியாது என்பதுதான் நாடகத்தின் முடிவு.

அவரோடு சேர்ந்தவர்கள் எல்லாம் இறந்துகிடப்பதால் அவரும் இறந்துவிட்டார் என்று பாமர ரசிகர்கள் நினைத்துக் கொண்டார்கள்... இல்லை இறக்கவில்லை அந்த வீரன் தப்பிவிட்டான் என்று சிந்தனைத் திறன் மிக்கோர் கூறிக்கொண்டார்கள்...

இருக்கிறாரா இல்லையா என்ற கேள்விக்கு பிரபாகரன் தனது நாடகத்தின் மூலமாக தந்த பதில் மௌனம்...! பின் ஒரு சிரிப்பு...! அவ்வளவுதான்...

அன்று காற்றில் கரைந்த அந்தச் சிரிப்பின் தொனிதான் 2008 நவம்பர் மாவீரர் நாள் உரையிலும் தெரிந்தது...

நாடக முடிவில் எவராலும் கண்டு பிடிக்க முடியாத ஒரு முடிவை வைத்துவிட்டு சிரித்த அவருடைய சிரிப்பையும், மாவீரர்நாள் உரையில் சிரித்த சிரிப்பையும் ஒப்பிட்டுப் பார்த்தால்...

உரைகளைவிட உன்னதமானதும் உள்ளர்த்தம் நிறைந்ததுமாக இருப்பது அவர் சிரித்த சிரிப்பே என்பது தெரியவரும்...

ஒரு சிரிப்பால் அவர் இந்த உலகத்தையே வேரோடு பிடுங்கிப் புரட்டிப் போடப்போகிறார் என்பதை பரிதாபத்திற்குரிய உலக இராஜதந்திரிகளால் அன்று புரிய முடியவில்லை...

ஆம்...!

பிரபாகரன் இருக்கிறாரா... இல்லையா... உலக அரங்கில் இன்று இதுதான் விலை மதிக்க முடியாத ஜாக்பாட் கேள்வி...

அந்த மர்ம மனிதன் நாடகத்தின் கடைசிச் சிரிப்பொலியை இப்போது மீண்டும் எனது நினைவுகளில் ரீ வைன்ட் பண்ணி உருள விடுகிறேன்...

நீலக்கடல் அலையே என் நெஞ்சின் அலைகளடி என்ற பாரதி பாடல் போல அந்த மர்மமான சிரிப்போசை என் காதுகளுக்குள் மெல்லென அலையோசை போல உருண்டு கொண்டிருக்கிறது.

முப்பது நிமிடங்கள் கொண்ட மர்மமனிதன் என்ற நாடகக் கருவின் விரிவுபடுத்தப்பட்ட வடிவம்தான் முப்பது வருடங்கள் கொண்ட விடுதலைப் போராட்டம் என்ற தகவலை மனது சிறைப்பிடித்து வருகிறது...!

ஒரு சிரிப்பு 36 உலக நாடுகளை வன்னிக்குள் முகாமிட வைத்தது...

எரிக் சோல்கெய்ம் போன்றவர்களையே கோபத்தில் எகிறிக் குதிக்க வைத்தது... பிரபாகரன் மீது குற்றம் சுமத்துமளவுக்கு அவரையே நிலை தடுமாற வைத்தது...

இன்று ஐ.நா சபையே குற்றம் புரிந்துவிட்டதாக ஒப்புக் கொண்டு அறிக்கை விட்டுள்ளதென்றால் அந்த நாடகக்கலைஞனின் சிரிப்பின் விலையை மதிப்பிட இந்த உலகில் யாரால் முடியும்...?

“அப்படியானால் அந்த நாடக முடிவு போல ஒரு பேரழிவுதான் இந்தப்போராட்டத்தின் முடிவா...? ” இப்படியொரு கேள்வி உங்கள் உள்ளத்தில் எழுவது தெரிகிறது...

அழிவும் அவலங்களும் வரலாம், ஆனால் எந்தச் சதிகாரரும் தப்பிவிட முடியாது... வெற்றி பெறவும் முடியாது... போராட்டம் தொடரும் என்பதே அவரின் சிந்தனை... அந்தச் சிரிப்பின் சாராம்சம்...

அனுராதபுரத்தில் இருந்து 44 வருடங்கள் ஆட்சி செய்த எல்லாளன் மரணத்தின் பின் தமிழர்கள் மீது நடாத்தப்பட்ட பேரழிவுகளுக்கான பதிலடிதான் அவருடைய காலத்தில் விழுந்திருக்கிறது என்ற எண்ணத்திற்கும் இதற்கும் தொடர்புண்டா...?

எல்லாளனின் 44 வருட காலமும் பிரபாகரன் போராட்டத்தை நடாத்திய 30 ஆண்டு காலமும், அவர் போராட்டத்திற்குத்



தயாரான 14 வருடங்களையும் சேர்த்தால் அதுவும் 44 வருடங்களே....

இது மட்டுமா...

அதோ அனுராதபுரத்தின் எல்லாளன் சமாதியில் மினுக்கிட்டு எரிகிறதே... ஒரு விளக்கு... அந்த எல்லாளன் சமாதிக்கு அருகில் கருவுற்றவரே பிரபாகரன்...

இப்படி எண்ண அலைகள் ஓயாத அலைகளாக பீறிட்டுப் பாய்கின்றன...

இப்படி...

ஆம்...!

அந்தப் பிரவாக நதிக்கு ஏது மரணம்... அது பல்லாயிரம் ஆண்டுகளாக ஓடிக்கொண்டே இருக்கும் ஓயாத தமிழ்ப் பேரலை...

நன்றி: தலைவர் வகுப்பு தோழர் - கி.செ.துரை 19.11.2012



தமிழீழத்தில் அமைதிப்படை என்ற போர்வையில்
இந்தியப்படை புரிந்திட்ட அடக்குமுறைக்கு எதிராக
19.03.1988 அன்றிலிருந்து 19.04.1988 வரையிலான
சாகும்வரை உண்ணா நோன்புப் போராட்டம் [அகிம்சை வழியில்]
தொடர்ந்து உயிர் நீத்த நாட்டுப்பற்றாளர் ஈகைச்சுடர்

# அன்னை பூபதி அம்மா